அருணை தமிழ்ப் பாடம்.
முதற் படிவம்
— பாலசுந்தரம் (அ)

அருணா தமிழ்ப் பாடம்

முதற் படிவம்

[பொதுப் பகுதி]

ஆசிரியர்கள் :

அ. பாலசுந்தரம், பி. ஏ., எல். டி.,

தலைமை ஆசிரியர், போர்டு உயர்நிலைப் பள்ளி, ஆர்க்காடு

வித்துவான்ச. குருஸ் அந்தோணி, எம். ஏ.,

தமிழ் விரிவுரையாளர், புனித சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

அருணா பப்ளிகேஷன்ஸ்

சென்னை-17.

முதற் பதிப்பு—அக்டோபர் 1955.

[All Rights Reserved]

Published by
Aruna Publications, Madras-17.

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1.

பதிப்புரை

'அருணா தமிழ் பாடம்' என்னும் தமிழ்ப்பாடப் புத்தக வரிசையில் இந்நூல் முதல் படிவத்திற்கு ஏற்ற பொதுப் பகுதியாகும். அரசியலார் அளித்துள்ள பாடத் திட்டப்படி சிறந்த முறையில் இந்நூல் அமைந்துள்ளதாகும். வகுப்பிற்கு ஏற்றபடி மொழிவளம், சொல்லூட்டம், வாக்கியஅமைப்பு, தெளிந்த நடை, பொருட்செறிவு, ஆற்றொழுக்கு நடை முதலியன வாய்ந்து திகழ்வது இந்நூல். பாடந்தோறும் அருஞ்சொற்களும் பொருளும், சிறு விடைவினாக்கள், கட்டுரைப்பயிற்சி, இலக்கண அமைப்பு என்பன இணைக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்கட்குக் கல்வியில் ஆர்வத்தை மிகுவித்து, கற்றலில் ஊக்குவித்து, கட்டுரை எழுதும் தன்மையையும், திறனையும் அளிப்பனவாகும். இந்நூல் வரிசைகளைக் கற்கும் மாணவர் தெளிந்த தமிழறிவினைப் பெறுவர் என்பது ஒருதலை. கலாசாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் இந்நூல் வரிசைகளைப் பள்ளியில் பாடப் புத்தகங்களாக்கி மாணவர்க்கு நன்மை செய்வதுடன், எம்மையும் இத்துறையில் ஊக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	நாட்டு வணக்கம்	...	1
2.	தமிழ் நாடு	...	2
3.	தேசீயகவி பாரதியார்	...	9
4.	கிராம முன்னேற்றம்	...	17
5	செயற்கருஞ் செயல்	...	25
6.	காஞ்சிபுரம்	...	32
7.	மின்சாரம்	...	39
8.	நற்பெரும் புலவர்	...	46
9.	உல்லாசப் பிரயாணம்	...	55
10.	பாண்டித்துரைத் தேவர்	...	65
11.	பர்மாவும் பர்மியரும்	...	75
12.	அறிஞர் சண்முகஞ் செட்டியார்	...	72
13.	தெனாலிராமன்	...	84
14.	வினையின் விளைவு (நாடகம்)	...	80
15.	செய்யுட் பகுதி	...	152
16.	உரைப்பகுதி	...	198

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராடா
திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உத்ச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆஸிஷ மாஹே
ஜாஹே தபஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

1. தமிழ்நாடு

1. தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு. இதனைத் தமிழகம் என்றும் கூறுவர். இதன் வடக்கு எல்லை திருவேங்கடமலை என்னும் திருப்பதி; தெற்கு எல்லை கன்னியாகுமரி முனை; கிழக்கில் வங்காளக் குடாக் கடலும் மேற்கில் அரபிக் கடலும் ஆகும். இந்நில எல்லை தொல்காப்பியனார் காலம் முதற்கொண்டு அமைந்ததாகும். தொல்காப்பியர் காலம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்றும், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்றும் கூறுவர்.

2. இக்காலத்திற்கு முன் கன்னியாகுமரி முனைக்குத் தெற்கில் கன்னி நாடு என்னும் **குமரிக் கண்டம்** இருந்ததாகக் கூறுவர். அக்காலத்தில் இந்துப் பெருங்கடல் நிலப்பரப்பாக இருந்தது. குமரிக் கண்டத்தில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றால் அது எவ்வளவு பெரிய நிலப்பரப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். அந்தப் பெரிய நிலப் பரப்பு கடலுள் மூழ்கிவிட்டது.

3. இத்தமிழகம் முழுவதும் தமிழ் மொழியே முன்பு வழங்கி வந்தது. பின்னர்த் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மொழிகள் கிளைத்து வளர்ச்சி பெற்றன. அம்மொழிகள் தனி மொழிகளாகச் சிறக்கத் தொடங்கின. அம்மொழிகளைப் பேசிவந்த மக்கள்

வசித்த நாடுகளும் தனி நாடுகள் ஆயின. எனவே, தமிழ் நாட்டின் எல்லை மிகவும் குறுகலாயிற்று.

4. பண்டைக்காலத்தில் தமிழகத்தைச் **சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு** என்று மூன்று பெரு நாடுகளாகப் பிரித்து, மூவேந்தர்கள் ஆண்டு வந்தனர். இக்காலத்தில் திருவிதாங்கூர், கொச்சி, மலையாளம், கோயம்புத்தூர் மாவட்டம், சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதி என்பன எல்லாம் சேர்ந்ததே சேரநாடு. இந்நாட்டை ஆண்ட மன்னர்களைச் சேரர் என்று கூறுவர். இவர்கள் குடி மிகத் தொன்மையானது. இவர்கள் **வில்கொடியை** உடையவர்கள் பனம் பூமாலையை அணிந்தவர்கள். சேரநாட்டிற்குத் தலைநகர் **வஞ்சிமாநகரம். முசிரி, தொண்டி** என்பன, மேற்குக் கடற்கரைத் தலைநகரங்களாகவும் துறைமுகங்களாகவும் விளங்கின. இச்சேரர்களை **வானவர்** என்றும் கூறுவர். தமிழ் நாட்டு மூவேந்தர்களில், தொன்மை கருதி முதலில் கூறப்படுபவர் சேரர்களே. இவர்கள் சிறப்பை விளக்குவனவாகச் **சிலப்பதிகாரம், பதிற்றுப் பத்து** என்னும் நூல்கள் உள்ளன.

5. **சோழநாடு** என்பது திருசிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு, வடஆர்க்காடு முதலான மாவட்டங்களைக் கொண்டது. சோழநாட்டை ஆண்டவர்கள் **சோழர்** என்று கூறப்படுவர். இவர்களைச் **செம்பியர்** என்றும், **சென்னி** என்றும், **வளவர்** என்றும் கூறுவர். சோழர்களுக்கு **உறையூர்** உள்நாட்டுத் தலைநகராகவும், **காவிரிப்பூம் பட்டினம்** கடற்கரைத் தலைநகராகவும் விளங்கின. சோழர் ஆத்திமாலையை அணிந்தனர். அவர்

கள் கொடி **புலிக்கொடி.** சோழ நாட்டின் பெருவளத்திற்குக் காரணமானது **பொன்னி** என்னும் **காவிரி யாறு** ஆகும். ஆதலின் சோழ நாட்டிற்கு நீர்நாடு என்றும், **பொன்னி** நாடு என்றும் பெயர்கள் உண்டு. சோழர்கள் சூரியன் வழியினர் என்று கூறப்படுகின்றனர்.

6. **பாண்டி நாடு** என்பது தமிழகத்தின் தென் பகுதியாகும். இது இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களைக் கொண்டது. பாண்டிய நாட்டிற்குத் தலைநகர் **மதுரை;** கடற்கரை நகர் **கொற்கை.** பாண்டியர் சந்திரன் வழியினர் ஆவர். பாண்டியர்களுக்கு **வழுதி** என்ற பெயரும் உண்டு. பாண்டி நாட்டில் முத்துக் குளித்தல் சிறப்பாக நடைபெற்றது. **வையை** என்னும் பொய்யாக் குலக்கொடி பாண்டியநாட்டின் வளத்தைப் பெருக்கியது. தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ்மொழியை வளர்த்தவர்களும் பாண்டியர்களே. ஆதலின் பாண்டி நாட்டைக் கன்னித் தமிழ்நாடு என்றும் கூறுவர். பாண்டியர்கள் **வேப்பம் பூ** மாலையை அணிந்தனர்; அவர்களுக்குக் கொடி **மீன் கொடி**யாகும்.

7. தமிழ்நாடு பண்டைக்காலந்தொட்டு உழவுத் தொழில், கைத்தொழில், வாணிகம் என்பவற்றால் மிகப் பெருமை பெற்றிருந்தது. தமிழர்கள் மரக்கலங்களில் சென்றும், கடல் கடந்தும் வாணிகம் பேணினர். தமிழ் மக்கள் கல்வி, செல்வம், ஒழுக்கம், தெய்வபக்தி, வீரம் என்பவற்றில் மிகச் சிறந்து விளங்கினர். தமிழ் மக்கள் தாய் மொழியான தமிழைப் பேணி வளர்த்தனர்.

அதனால் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றின. அவை **சங்கநூல்கள்** எனப்படும். அவற்றில் தமிழர்களுடைய சிறப்பும் நாகரிகமும் வீரமும் நன்கு விளக்கப்படுகின்றன.

8. தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பகுத்திருந்தனர் என்பதால் பூமிக்கு **நானிலம்** என்ற பேயரும் உண்டாயிற்று. கொல்லிமலை நேரிமலை, பொதியமலை முதலான மலைகளும்; காவிரி, வையை, பெரியாறு என்ற ஆறுகளும்; சோலைகளும், வயல்களும், தலைசிறந்த நகரங்களும் தமிழகத்தை அழகு படுத்துகின்றன. தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களும், கிராம மக்களின் தொழில்களும் தமிழ் நாட்டின் வளத்திற்கும், செல்வத்திற்கும், மேம்பாட்டிற்கும் காரணங்களாகும். தமிழ் வேந்தர்களின் அரிய செயல்களும், அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த முறையும், இலக்கியச் செல்வத்தைப் பேணிப் பெருக்கி வளர்த்த பீடும், வள்ளன்மையும் சங்கத்தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

முனை-பூமி கூர்மையாகச் சென்று கடலில் முடிவது
மாவட்டம்-ஜில்லா
தொன்மை-பழைமை
துறைமுகம்-கப்பல் தங்குமிடம்
வழியினர்-பரம்பரையினர்
வளம்-செழுமை
கிளைத்த-தோன்றிய.
மரக்கலம்-கப்பல்
பகுத்திருந்தனர்-பிரித்திருந்தனர்

2. சிறுவிடை வினாக்கள்

1. நான்கு திசைகள் எவை ?
2. தமிழகத்தின் நான்கு எல்லைகள் எவை?

3. எதற்குக் குமரிக் கண்டம் என்று பெயர்?
4. தமிழிலிருந்து கிளைத்த மொழிகள் எவை?
5. தமிழ்நாடு குறுகக் காரணம் என்ன?
6. முத்தமிழ் நாடுகள் எவை?
7. சேர, சோழ, பாண்டியர்களின் மாலை, கொடி, தலைநகர்கள் எவை என்பவற்றை எழுது.
8. மூவருக்கும் உள்ள மறு பெயர்கள் யாவை?
9. சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து-இந்நூல் யாரைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன?
10. தமிழ்நாட்டு மக்களின் சிறப்பு, நானிலம் இவற்றைப் பற்றி எழுது.

3. கட்டுரைப் பயிற்சி

1. 'தமிழ்நாடு' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
2. 'மூவேந்தர்' என்பது பற்றி அறிந்ததை எழுது.
3. சங்க நூல்களால் அறிவன யாவை?

4. சொற் பயிற்சி

பத்து+இற்று+பத்து-பதிற்றுப் பத்து
நிலம்+பரப்பு-நிலப்பரப்பு
சிலம்பு+அதிகாரம்-சிலப்பதிகாரம்
தமிழ்+அகம்-தமிழகம்
மூன்று+வேந்தர்-மூவேந்தர்

5. இலக்கணம்

'கந்தன் பால் கறந்தான்'. 'பூ மிக அழகு' இந்த வாக்கியத்தைக் கவனி.

கந்தன் – இதில் நான்கு எழுத்துக்கள் உள்ளன.
பால் – இதில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன.

அழகு – இதில் மூன்று எழுத்துக்கள் உள்ளன.
பூ – இது ஒரே எழுத்து.

இவை, எழுத்துக்கள் தனித்திருந்தும், தொடர்ந்து நின்றும் பொருள் தந்தன.

எழுத்து தனித்து நின்றேனும், தொடர்ந்து நின்றேனும் ஒரு பொருளைத் தந்தால் சொல் எனப்படும். பொருளைத் தரா விட்டால் சொல் ஆகாது. எழுத்து எனவே படும்.

எழுத்து தனித்து நின்று பொருளைத் தந்தால் – ஓரெழுத்து ஒரு மொழி. எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருளைத் தந்தால் – எழுத்துத் தொடர் மொழி.

சொல், பதம், மொழி, வார்த்தை, கிளவி என்பன ஒரே பொருள் உடையன.

இந்த வாக்கியங்களிலுள்ள சொற்கள் எத்தனை எழுத்துக் களால் ஆக்கப்பட்டன ?

1. அந்தப் பெரிய நிலப்பரப்பு கடலுள் மூழ்கிவிட்டது.
2. ஆ புல் தின்றது.



2. தேசீய கவி பாரதியார்

1. காலத்திற்கு ஏற்பக் கவிகளைத் தோற்று வித்து, நாடும் மொழியும் மக்கள் அறிவும், வளமும் உரமும் திறமும் பெற்றுத் திகழுமாறு செய்வது தமிழகம். தமிழகத்தில் தமிழ் மக்கள் நெஞ்சில் உரம் குன்றி நேர்மைத் திறமுமின்றி உறங்கிக் கிடந்த காலத்தில் புத்துணர்ச்சி பெற்று விழித்தெழுமாறு செய்த கவிஞர் பாரதியார் ஆவர். அவர் "எல்லோரும் ஓர் குலம்" "எல்லோரும் ஓர் இனம்"; "வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம்," வீழ்ந்தால் அனைவரும் வீழ் வோம்" "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பது இல்லையே" என்பன போன்ற வீர உணர்ச்சி, ஒற்றுமை மனப்பான்மை முதலான நற்பண்புகளை ஊட்டும் அருமைத் திருமொழிகளால் தமிழர் யாவரை யும் விழித்தெழச் செய்தார். காலத்தினுற்றோன்றித் தமிழர்க்குப் புத்துணர்வூட்டிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

2. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில், எட்டைய புரத்தில் அவர் பிறந்தார். கடிகை முத்துப் புலவர், உமறுப் புலவர் முதலானவர்களைத் தோற்று வித்த பெருமை எட்டையபுரத்திற்கு உண்டு. எட் டையபுரம் ஒரு சிறிய ஜமீன். அந்நாளில் தமிழகத்தின் கண் தமிழ் மொழியைப் போற்றி வளர்த்துத் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்த ஜமீன்களுள் எட்டைய புரமும் ஒன்று. எட்டையபுரத்தில் அந்தணர் குலத்தில்

நற்பண்புகளுடன் விளங்கியவர் சின்னச்சாமி அய்யர். அவர் இலக்குமி அம்மையாரை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். அவர் கணிதத்திலும், தமிழிலும், தொழில் துறைகளிலும் வல்லவர். அவருக்கு ஆங்கிலமும் தெரியும். அவர் எட்டையபுரத் தரசரிடம் அலுவலில் இருந்தார். அவருடைய தவப் புதல்வரே சுப்பிரமணிய பாரதியார். சுப்பிரமணிய பாரதியார் 1882 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி பிறந்தார். பாரதியாரது இளமைப் பருவம் எட்டையபுரத்தில் கழிந்தது. பாரதியார் தம் ஐந்தாம் ஆண்டில் தாயை இழந்தார். இளமையில் பாரதியார் தந்தையாரிடம் திருக்குறள், கம்பராமாயணம். தாயுமானவர் பாடல் போன்ற நூல்களைப் பயின்றார். தந்தையாருடன் ஜமீன் தார் அரண்மனைக்குச் செல்வார். அங்குப் புலவர்கள் கூட்டம் எக்காலத்தும் நிறைந்திருக்கும். பாரதியார் அவர்களிடமெல்லாம் நெருங்கிப் பழகியதால் அவரிடம் தமிழ்ப் புலமை இளமையிலேயே நிறைந்து காணப்பட்டது. பாரதியார் புலவர்களின் கூட்டுறவு நலத்தால் தம் பதினோராம் வயது முதலே கவிகளைப் பாட வல்லவரானார். அவருடைய கவியமைக்கும் ஆற்றலைக் கண்ட புலவர்கள் அவருக்குப் 'பாரதி' என்று பட்டமும் சூட்டி அழைத்தனர். 'பாரதி' என்பது கலைமகளுக்கு உரிய பெயர்களுள் ஒன்று. அக்காலம் முதல் அவர் சுப்பிரமணிய பாரதியார் என்று அழைக்கப்பட்டார்.

3. பாரதியார் திருநெல்வேலியிலுள்ள இந்துக் கல்லூரியில் ஐந்தாம் பாரம் வரை படித்தார். அவருக்கு இளமையிலேயே திருமணமும் நடந்தது. **செல்லம்மாள் என்பது அவர் மனைவியின் பெயர்.** பாரதியார் தம்

பதினைந்தாம் வயதில் தந்தையாரையும் இழந்தார். அதனல், பாரதியார் காசியில் வசித்துவந்த தம் அத்தையார் இல்லத்துக்குச் சென்ருர். அங்குப் பள்ளியில் சேர்ந்து, ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலியன கற்ருர். ஆனல், பாரதியாருக்குப் பள்ளிப் படிப்பில் நாட்டம் இல்லை. எட்டையபுரத்து அரசர் காசிக்குச் சென்றிருந்த பொழுது பாரதியாரை அழைத்துக் கொண்டு வந்து தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். பாரதியார் அரண்மனைப் புலவராக 1901 முதல் 1904 வரை விளங்கினர். ஆனல், பாரதியார் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிக்கவராய்த் தமிழகத்திற்குப் பெருந்தொண்டு செய்வதிலேயே எண்ணங்கொண்டிருந்தார். அதனல், எட்டையபுரத்தரசரது அரண்மனைப் புலவராக இருத்தல் 'கூண்டிற்குள் அடைபட்டிருக்கும் பறவையின் வாழ்க்கை' போன்றதாகும் என்று பாரதியார் கருதினர்.

4. பாரதியார் அரண்மனைப் புலவராக இருத்தலை விடுத்தார். மதுரையில் சேதுபதி கலாசாலையில் மூன்று மாதங்கள் தமிழாசிரியராக இருந்தார். பாரதியாருக்கு அப்பணியும் பிடிக்கவில்லை. பின்னர் பாரதியார் சென்னை வந்தடைந்தார். சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக அவர் அமர்ந்தார். அப்பத்திரிகையில் அவர் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதி வெளியிட்டார். பின்னர் 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகையைத் தாமே வெளியிட்டார். 1907 முதல் 1909 வரை நடந்த அப் பத்திரிகை பாரதியாரின் அரிய கட்டுரைகளும் கவிதைகளும், தாங்கி வெளி

வந்தது. பாரதியாரின் புலமையும் திறனும் புத்துணர்ச்சியும் வீரமும் யாவர்க்கும் விளங்கின.

5. அரசியலில் பல நெருக்கடியான நிலைகள் ஏற்பட்டன. அவற்றின் காரணமாகப் புதுவைக்குச் செல்ல வேண்டிய நிலையும் பாரதியாருக்கு உண்டாயிற்று. அவரோடு 'இந்தியா' என்ற பத்திரிகையும் சென்றது. ஆனால், அரசாங்கத்தாரால் தடை செய்யப்பட்டது. புதுச்சேரியில் பாரதியார் எட்டாண்டுகள் வசித்தார். அங்கு அவர் 'கருமயோகி' 'தருமம்' என்னும் பத்திரிகைகளைத் தோற்றுவித்து நடத்தி வந்தார். அவர் புதுச்சேரியில் வசிக்கும் பொழுது தாழ்த்தப்பட்டவரான ஹரிஜனங்களிடம் அன்புகொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்குப் பாடு பட்டார். புதுச்சேரியில் பாரதியார் வசித்தபொழுது அவருக்கு **அரவிந்தகோஷ், வ. வே. சுப்பிரமணிய அய்யர், சுப்பிரமணிய சிவா** முதலான பெரியோருடன் நட்புப் பூண்டு நெருங்கிப் பழகும் பேறு கிடைத்தது. அக்காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகியவர் புலவர் **கனகசுப்புரத்தினம்** என்பவர் ஆவர். அவர்தான் இன்று **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்** என்று சிறப்பாக அழைக்கப்படுபவர்.

6. 1919 ஆம் ஆண்டு பாரதியார் புதுச்சேரியை விட்டு வெளியேறினர். அவர் கடையத்தில் சில காலம் தங்கி இருந்தார். பின்னர் மீண்டும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் உதவிப் பத்திரிகாசிரியராக அமர்ந்தார். சென்னையில் பாரதியார் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். அக்காலத்தில் தினந்தோறும் பார்த்தசாரதிப் பெருமான் கோயிலுக்குச்

செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். பாரதியார் 1921 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 11–ஆம் தேதி திருவல்லிக்கேணியில் பூதவுடல் நீத்து அமர கவியாகப் புகழ் உடல் கொண்டு, தமிழர் அனைவர் உள்ளங்களிலும் வாழலானார்.

7. பாரதியார் பல பாடல்களைப் பாடியுள்ளார். **தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு** முதலியனவாகப் பல அவருடைய கவித்திறமையைப் புலப்படுத்துகின்றன. பல கட்டுரைகளும் **சந்திரிகா** போன்ற உரை நடை நூல்களும் அவரால் எழுதப்பட்டன. அவரது புலமைத் திறனைக் **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** அவர்கள்,

> " பாட்டுக் கொரு புலவன் பாரதியடா—அவன்
> பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினனடா,
> கல்லும் கனிந்துகனி யாகுமேயடா—பசுங்
> கன்றும்பால் உண்டிடாது கேட்குமே யடா"

என்று கூறுவதால் நன்கு உணரலாம்.

8. பாரதியார் ஒப்பற்ற தேசபக்தர்; சுதந்திர உணர்வுடையவர்; எதற்கும் மனம் கலங்காதவர். உண்மையே பேசுபவர். பாரதியார் வறுமையைப் பொருட்படுத்தாது செம்மையாக வாழ்ந்தவர். உள்ளத்தில் ஒன்றும் உதட்டிலொன்றுமாகப் பேசும் வஞ்ச நெஞ்சம் படைத்தவர் அல்லர் பாரதியார். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிக்குடையவர் பாரதியார். தமிழ் மக்கள், தம் நாடு, மொழி, பண்பாடு இவற்றை

மறந்து வாழ்கின்றனரே என்று பாரதியார் எண்ணி எண்ணி மனம் கரைவார். பொருளைப் பொருளாக மதியாதவர் பாரதியார். 'நாளைக்கு வேண்டுமே' என்று கருதும் எண்ணம் அவர் மனத்தில் என்றும் எழுந்ததில்லை. யாரிடமும் அவர் இன்பமாகவும், வேடிக்கையாகவும் பேசும் இயல்பு வாய்ந்தவர். அத்தகைய பெரும் புலவரைத் தமிழர் எங்ஙனம் மறத்தல் இயலும்? அவர் பிறந்து வளர்ந்த எட்டையபுரத்தில் '**பாரதியார் நினைவு மண்டபம்** கட்டித் தமிழ்மக்கள் தம் நன்றியறிதலைக் காட்டியுள்ளார்கள். தமிழ் நாடு எங்கும், 'பாரதியார் விழாவினைத் தமிழ் மக்கள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடித் தம் நன்றியை மறவாமல் தம் மரபுக் கேற்பக் காத்து வருகின்றனர்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

ஏற்ப-பொருந்த
உரம்-வலிமை, உறுதி
திறம்-தன்மை, வல்லமை
நேர்மை-ஒழுங்கு
திகழுமாறு-விளங்குமாறு
நெருக்கடி-இடையூறு, துன்பம்
வறுமை-தரித்திரம்
வஞ்சம்-ஏமாற்றும் தன்மை
விழா-கொண்டாட்டம்
கணிதம்-கணக்கு
ஆற்றல்-வலிமை, திறமை
பற்று-அன்பு
கவிதை-பாட்டுக்கள்
தடை-தடுத்தல்
பொருட்படுத்ாது-இலட்சியம் செய்யாது
பண்பாடு-நற்குண நற்செயல் கூடிய ஒழுக்கம்
மரபு-குலம்

2. சிறு விடை வினாக்கள்

1. தமிழகத்தின் சிறப்பு என்ன?
2. பாரதியார் எத்தகைய கவி?

3. பாரதியாரின் இளமைப் பருவத்தைப் பற்றி எழுது.
4. எட்டையபுரத்தரசரைப் பற்றி அறிவது என்ன ?
5. எட்டையபுரத்திலிருந்த வேறு புலவர்கள் யாவர் ?
6. 'பாரதி' என்றது யாரைக் குறிக்கும் ? இவருக்கு எப்படிக் கிடைத்தது ?
7. பாரதியார் நடத்திய பத்திரிகைகள் யாவை ?
8. பாரதியார் புதுச்சேரியில் அடைந்த நண்பர்கள் யாவர் ?
9. புரட்சிக் கவிஞர் யார் ? அவர் எப்பெயர் கொண்டு விளங்குகிறார் ? ஏன் ?
10. பாரதியார் பாடியுள்ள நூல்கள் யாவை ?

3. கட்டுரைப் பயிற்சி

1. 'பாரதியாரின் பிறப்பும் இளமைப் பருவமும்'-என்பது பற்றி ஒரு பக்கம் எழுது.
2. ' பாரதியாரும் பத்திரிகைத் தொழிலும் '-என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
3. 'பாரதியார் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் செய்த தொண்டு'-என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

4. சொற் பயிற்சி

புதுமை + உணர்ச்சி-புத்துணர்ச்சி
விழித்து + எழுமாறு-விழித்தெழுமாறு

பிரித்துக்காட்டு:—

புத்துணர்வு-
காலத்தினூற்றோன்றி-

5. இலக்கணம்

காந்தி மிகவும் நல்லவர்.
மதுரை ஒரு பெரிய நகரம்

சித்திரை மாதம் திருவிழா நடைபெறும்.
தலை மிகவும் சிறந்த உறுப்பு.
வெண்மையை யாவரும் விரும்புவர்.
படித்தல் சிறுவர்கட்கு இன்றியமையாதது.

மேலே கூறியுள்ளவற்றைக் கவனி. காந்தி–ஒருவர் பெயர். மதுரை–இடத்தின் பெயர். சித்திரை–மாதத்தின் பெயர். தலை–உறுப்பின் பெயர். வெண்மை-நிறத்தின் பெயர். படித்தல்–தொழிலின் பெயர்.

இவை பெயர்ச் சொற்கள்.

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல்.

பொருளின் பெயரைக் குறிப்பது பொருட் பெயர்.
இடத்தின் பெயரைக் குறிப்பது இடப் பெயர்.
காலத்தின் பெயரைக் குறிப்பது காலப் பெயர்.
உறுப்பின் பெயரைக் குறிப்பது சினைப் பெயர்.
நிறம், குணம் இவற்றின் பெயரைக்
குறிப்பது குணப் பெயர்.
அல்லது பண்புப் பெயர்.
தொழிலின் பெயரைக் குறிப்பது தொழிற் பெயர்.

பயிற்சி

ஒவ்வொரு வகைக்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் எழுது.

3. கிராம முன்னேற்றம்

1. **கோபாலனும் முகுந்தனும்** சிறந்த நண்பர்கள். அவர்கள் இருவரும் எங்குச் சென்றாலும் சேர்ந்து போவதும் சேர்ந்து வருவதும் வழக்கம். அவர்கள் எப்பொழுதும் யாதேனும் ஒரு பொருளைப்பற்றிப் பேசிக் கொண்டே இருப்பார்கள். இயன்ற வரையில் அவர்கள் சொல்வனவற்றைச் செயலில் காட்டுதல் வழக்கம். 'எல்லார்க்கும் சொல்வது எளிது; செய்வது அரிது' என்று வள்ளுவரும் கூறியுள்ளாரல்லவா? சொல்வது போல் செய்து காட்டுபவர்களுக்கே பெருமை அதிகம். அவர்களைத்தான் உலகத்தவர் போற்றிப் பின்பற்றி நடப்பர். அவர்களுக்குத்தான் அழியாப் புகழும் உண்டாகும். **திருவள்ளுவரும் காந்தியடிகளும்** சொன்ன வண்ணம் செய்து காட்டியவர்கள்.

2. கோபாலனும் முகுந்தனும் **சத்தியமங்கலம்** என்ற ஊரில் வசித்தனர். சத்தியமங்கலம் பெரிய நகரமன்று; சிறிய கிராமமும் அன்று. அங்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனி வீடும், வீட்டின் பின்புறம் பரந்த இடமும் உண்டு. **பவானியாறு** என்றும் வற்றாது ஓடி அவ்வூர் மக்களுக்கு நீர் அளித்து வருகிறது. ஊரைச் சுற்றிலும் தோட்டங்கள் உண்டு. அமைதியான வாழ்க்கைக்கு அவ்வூர் மிகவும் பொருந்தியதாகும்.

3. ஒரு நாள் **கோவிந்தன்** என்பான் அவ்வூருக்கு வந்தான். கோவிந்தனுடைய தாய்மாமன் அவ்வூர்த்

தபால் நிலையத்தின் தலைவராக இருந்தார். அவன் ஒவ்வொரு விடுமுறைக்கும் அங்கு செல்வது வழக்கம். சென்னையிலே இருந்த அவனுக்கு, மூன்று பக்கங்களிலும் மலையும், ஆறும், தோட்டந்துரவுகளும், அமைதியும் உடைய சத்தியமங்கலம் இன்பமூட்டும் நல்லிடமாக விளங்கியது. கோவிந்தனுடைய மாமா கோபாலன் வீட்டிற்கும் முகுந்தன் வீட்டிற்கும் இடையிலுள்ள வீட்டில் வசித்தார். அந்த வீடே தபால் நிலையம். முன் பக்கத்தில் தபால் நிலையமும் பின்பக்கம் குடியிருப்பதற்குமாக அவ்வீடு அமைந்திருந்தது. விடுமுறைதோறும் செல்லும் கோவிந்தன், கோபாலன் முகுந்தன் எனும் இருவர் நட்பையும் பெற்றிருந்தான்.

4. மூவரும் காலையிலும். மாலையிலும் தோட்டங்களுக்குச் செல்வார்கள். அவரவர்கள் வீட்டுப் பின்புறத்திலும் தோட்டம் அமைத்திருந்தார்கள். தோட்டங்களில் அவர்கள் காய்கறி வகைகளையும், வாழையையும் போட்டிருந்தார்கள். அவர்கள் நிலங்களைக் கொத்துதலும், எருவிடுதலும், விதை விதைத்தலும், நீர் பாய்ச்சுதலும், களை பிடுங்குதலும், பாத்திகளைச் செம்மைப் படுத்தலும் தாமே செய்து வந்தனர். அவற்றை யெல்லாம் கூர்ந்து கவனித்த கோவிந்தனுக்கு அவ்வாறு தானும் செய்யவேண்டும் என்னும் ஆசை எழுந்தது. அதனால், அவனும் ஆசையோடு அவர்களுடன் வேலை செய்யத் தொடங்கினான். சென்னையில் ஒரு தோட்டம் அமைத்துக்கொள்ளும் வசதி இல்லாதது கண்டு வருந்தினான். அவன் தன் கருத்தைத் தந்தையிடம் வெளியிட்டான். அவன் தந்தை கோடம்பாக்கத்தில் ஒரு பங்களா அமைத்துக்கொண்டார். பின்,

கோவிந்தன் தன் விருப்பப்படி அங்கே தோட்டம் அமைத்துக் கொண்டான்.

5. அவன் தோட்டத்தில் அவரை, புடல், பாகல், பூசணி, பரங்கி, கொத்தவரை, கத்தரி, வெண்டை, வாழை, தக்காளி முதலியன பயிரிட்டான். அவன் தந்தை ஒரு தோட்டக்காரனையும் அமர்த்தினர். தோட்டத்தில் பெரிய கிணறு தோண்டினர். நீரிறைக்கும் யந்திரம் அமைத்தார். மின்சாரத்தின் துணையால் அந்த யந்திரம் ஓட்டப்பட்டது. கோவிந்தன் தோட்டத்தின் ஓரங்களில் தென்னை மரங்களை வைத்தான். ஆங்காங்கு இலவ மரங்களும் வைத்திருந்தான். தோட்டத்தின் ஒரு பகுதியில் மலர்ச் செடிகளும் வைத்திருந்தான். சில முருங்கை மரங்களும் இருந்தன. அதனல், அவன் வீட்டில் காய்கறி, தேங்காய், இலை இவற்றிற்குக் குறைவே இல்லை. தினந்தோறும் அவனுக்குப் புத்தம் புதிய காய்கறிகள் கிடைத்தன. அவன் அவற்றைச் சுவையோடு சமைக்கச்செய்து உண்டான்.

6. கோவிந்தன் பங்களாத் தோட்டம் மிகவும் பெரியது. அவனுடைய வீட்டிற்கு வேண்டியன போக எஞ்சியவற்றை அவன் விற்ருன். ஆண்டுதோறும் இலவம் பஞ்சு சேகரித்து மெத்தை தலையணை முதலியன செய்துகொண்டான். அவன் காலையிலும் மாலையிலும் தோட்டத்தைக் கவனித்து வந்தான். அவனுக்குத் தோட்ட வேலை, இன்பப் பொழுது போக்காக இருந்தது மல்லாமல் ஊதியம் தருவதாகவும் இருந்தது. கோவிந்தன் கல்லூரி மாணவனுகி பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சி பெற்ருன். பின் அவன் சட்டப்படிப்பு படித்

துத் தந்தையைப் போல நியாய வாதியாக வந்தான். அக்காலத்தும் அவன் தோட்ட வேலையைத் தன் இன்பப் பொழுது போக்காக வைத்துக்கொண்டான்.

7. கோவிந்தனுக்கு வக்கீல் தொழிலில் செல்வம் திரண்டது. அவன் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய சத்தியமங்கலத்தில் நிலங்கள் வாங்கினான்; வீடு வாங்கினான்; தோட்டம் வாங்கினான். தோட்டங்களைக் கவனித்துக்கொள்ளத் தாய் தந்தையரை அங்கிருக்கச் செய்தான். தோட்ட வேலையைச் செய்ய ஆட்களை வைத்தான். அவன் அங்குச் செல்லும்பொழுதெல்லாம் தானும் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்தான். கோபாலனும் முகுந்தனும் அவனுடன் செல்வார்கள். கிராம மக்கள் எல்லோரும் தோட்ட வேலையில் ஈடுபட்டுச் செம்மையாகச் செய்வார்களானால் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று இனிது வாழலாம் என்பதைக் கோவிந்தன் விளக்கினான்.

8. கோவிந்தன் தோட்டத்தில் மூங்கிற் புதர், தென்னை, கரும்பு, பஞ்சு இவற்றை வைத்துப் பயிரிட்டான். மூங்கிலால் செய்யப்படும் கூடை, முறம், தட்டி, நாற்காலி, மேஜை முதலியவற்றை ஆட்களைக் கொண்டு செய்வித்தான். தென்னை மரங்களிலிருந்து தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு, சோப்புச் செய்தல், அகப்பை செய்தல், துடைப்பங் கட்டல், கீத்து முடைதல் முதலியவற்றைச் செய்து வேலை யில்லாதவர்க்கு வேலை கொடுத்தான். கரும்பாலை அமைத்துச் சர்க்கரை, வெல்லம் என்பவற்றைச் செய்தான். பஞ்சு கொண்டு தக்களி, கைராட்டினம் என்பவற்றால் நூல் நூற்றுக் கைத்தறி

நெசவாடைகளை உண்டாக்கினன். மலர்ச் செடிகள் வைத்திருந்தான். ஆதலால் தேனீ வளர்த்துத் தேனெடுக்கும் தொழிலை விருத்தி செய்தான். கிராம மக்கள் எவ்வாறு வாழ்ந்தால் செல்வம் பெற்றுச் சுகமாக வாழலாம் என்பதைக் கோவிந்தன் செய்கையில் செய்து காட்டினன். அவன் நண்பர்களும் அவ்வாறே செய்தனர். அவர்களைப் பார்த்துப் பலர் அவ்வாறே தாமும் செய்ய முயன்று பலவகையில் முன்னேற்றம் அடைந்தனர்.

9. கற்றவர்களும், செல்வர்களும் கிராமங்களுக்குச் சென்று பயிர்த் தொழிலில் ஈடுபடுவார்களானல், கிராமங்கள் முன்னேற்றமடையும்; கிராம மக்களும் முன்னேற்றம் பெறுவர். கிராமங்களுக்குக் கற்றவர்களும் செல்வர்களும் செல்வதால், சுகாதார முறை கிராமங்களில் கையாளப்படும். மின்சாரம், தபால், போக்குவரவுச் சாலை வசதி, வைத்தியசாலை, பள்ளிக்கூடம் முதலியன ஏற்படும். கிராமமக்கள் முன்னேற்றம் அடைவதும் மிகவும் சுலபமாகும். கோவிந்தனும் அவன் நண்பர்களும் செய்த செயல்களால் சத்திய மங்கலமும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் முன்னேற்றம் அடைந்தன; குடிசைக் கைத்தொழில்கள் பெருகின; கிராம மக்கள் சுகாதார வாழ்வும், கல்வியும், நாகரிகமும், கைத்தொழிலில் மேம்பாடும், செல்வமும் பெற்றனர்; இன்ப வாழ்க்கை எய்தினர். இம்முறையையே இந்திய மக்கள் கிராமங்களை முன்னேற்றமடையச் செய்யக் கைக்கொள்ளவேண்டும். கற்றவர்களும் செல்வர்களும் கிராமங்களில் தங்கித் தங்கள் அறிவையும் உழைப்பையும் உபயோகப்படுத்துவார்களானல் நகரில்

கிடைக்கும் நலன்களில் பன்மடங்கு அதிகமாகக் கிரா மங்களில் பெற்று அமைதியான இன்ப வாழ்க்கை எய்த லாம்; பல்வகைக் கைத்தொழில்களைப் பெருக்கலாம்.

10. மரச் சாமான்கள், மண்பாண்டங்கள், கோழி வளர்த்தல், பால் பண்ணை முதலான குடிசைக் கைத் தொழில்களைச் செய்வதற்குக் கிராமங்களே ஏற்ற இடங்களாகும். கற்றவர்கள் செல்வதால் கல்வியறி வைக் கிராம மக்களுக்கு அளித்து அவர்களை ஒற்றுமை யாய் வாழச் செய்யலாம். கூட்டுறவு நிதிச் சாலை, கூட் டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவு விற்பனைச் சாலை முத லியன ஏற்படுத்திக் கிராம மக்களை' நன்னெறிப் படுத்த லாம். இவை யாவற்றிற்கும் நாட்டுப் பற்றும், சகோ தர மனப்பான்மையும், ஒற்றுமையும், ஊக்கமும், முயற்சியும், உழைப்பும், உண்மையுமே தேவை.

1. அருஞ்சொற்களும் பொருளும்

போற்றி-சிறப்பித்து
சொன்னவண்ணம்-சொன்ன படி
நிலயம்-ஆபீஸ், அலுவலகம்
கூர்ந்து-உற்று நோக்கி
கருத்து-எண்ணம்
சேகரித்து-திரட்டி
நியாயவாதி-வக்கீல்
சுகாதாரம்-சுகத்திற்கு அடிப் படை
கையாளல்-செய்தல்
எய்தல்-அடைதல்

2. சிறு விடை வினாக்கள்

1. எது எளிது ? எது அரிது?
2. திருவள்ளுவருக்கும் காந்தியடிகளுக்கும் சிறப்பு உண் டாகக் காரணம் என்ன?
3. 'சத்தியமங்கலம்' என்பது பற்றி ஐந்து வரிகள் எழுது.

4. கோவிந்தன் முதலான மூவரும் யாது செய்து வந்தனர்?
5. கோடம்பாக்கத்தில் கோவிந்தன் பங்களாத் தோட்டம் பற்றி அறிவதென்ன ?
6. வீட்டுத் தோட்டத்தால் விளையும் நன்மைகள் என்ன?
7. எவையெல்லாம் குடிசைக் கைத்தொழிலுக்கு உதவுவன?
8. கிராம மக்கள் எவற்றை எல்லாம் செய்து முன்னேற்றம் அடையலாம்?
9. கற்றவர்களும், செல்வர்களும் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு யாது செய்ய வேண்டும்?
10. கற்றவர்களும் செல்வர்களும் கிராமங்களுக்குச் சென்று வசிப்பதால், கிராமங்களுக்கு விளையும் நன்மைகள் என்ன ?
11. கிராம முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவன யாவை ?

3. கட்டுரைப் பயிற்சி

1. 'தோட்ட வேலை' என்பது பற்றி ஒரு பக்கம் எழுது.
2. 'குடிசைக் கைத்தொழில்கள்' என்பது பற்றி ஒரு பக்கம் எழுது.
3. 'செல்வரும், கற்றோரும்' செய்யவேண்டிய கடமைகள் என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
4. 'கிராமத்தை உயர்த்தும் வழிகள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
5. வானொலி, படக்காட்சி இவற்றைக் கொண்டு கிராமத்தின் விருத்திக்கு என்ன தொண்டு செய்யலாம்?

4. இலக்கணம்

1. கந்தன் வந்தான்.
2. முருகன் சாப்பிட்டு ———.
3. முருந்தன் எடுத்து வந்த ———.

மேலே உள்ளவற்றைக் கவனி. முதலில் உள்ளதில் வினை அல்லது செயல் முடிந்து விட்டது. மற்றைய இரண்டிலும் வினை முடிய வில்லை.

வினை முடிந்தது முற்றுச் சொற்றொடர்
வினை முடியாதது எச்சச் சொற்றொடர்

சொல் + தொடர்—சொற்றொடர்.

II. 1. அனந்தன் படித்தான்.
2. அவர் நேரு.
3. கந்தன் யார்?

இந்த மூன்று வாக்கியங்களும் முற்றுச் சொற்றொடர்களே. இவற்றின் பயனிலைகள் யாவை?

படித்தான், நேரு, யார் என்பன.

இவற்றுள், 'படித்தான்' என்பது தொழிலைக் காட்டுகிறது; ஆதலால் 'வினை.'

'நேரு' என்பது ஒருவர் பெயர்; ஆதலால் 'பெயர்'.

'யார்' என்பது கேள்வி; ஆதலால் 'வினா'.

எனவே, பயனிலைகள் மூன்று வகைப்படும் : அவை :—

1. வினைப் பயனிலை.
2. பெயர்ப் பயனிலை.
3. வினாப் பயனிலை.

என்பன.

பயிற்சி

1. உமது பாடப் பகுதியிலிருந்து இம்மூன்று பயனிலைக்கும் உதாரண வாக்கியங்கள் எடுத்து எழுது.

4. செயற்கருஞ்செயல்

1. இந்தியாவின் பெருமைக்குக் காரணமானவை பல உள்ளன. அவற்றுள் ஒன்று இமயமலை. உலகில் மிக உயர்ந்த கொடுமுடிகளை உடைய மலைகளுள் இமய மலையும் ஒன்று.

மன்னும் இமயமலை எங்கள் மலையே;
மாநில மீததிற் போற் பிறிது இலையே"

என்றார் பாரதியாரும். பனி மூடிய இமயமே எங்கும் பரந்து விளங்குதலைக் காணலாம். இமயமலை ஆயிரத் தைந்நூறு மைல் நீளம் உடையது. பல மலைகள் ஒன் றன்பின் ஒன்றாக அடுக்கடுக்காக அமைந்துள்ளன. இம யமலையில் பல சிகரங்கள் காணப்படும். அச்சிகரங்கள் பலவற்றுள் மிகச் சிறந்தவை மூன்று. தவளகிரி என் னும்சிகரம்26,826 அடி உயரமுடையது காஞ்சனசிருங் கம் என்ற பொற்கோடு 28,156 அடி உயரம் உடையது; எவரெஸ்டு என்னும் சிகரம் 29,141 அடி உயரம் உடை யது. எவரெஸ்டு சிகரத்தைத் திபேத்தியர்கள் 'மணி முடியரசி' என்று கூறுவர். இமயமலையில் உற்பத்தியா கும் பேராறுகள் கங்கை, சிந்து, பிரமபுத்திரா, யமுனை என்பன. இப்பேராறுகளின் உற்பத்திக்கு இடமாய் விளங்கும் மானஸஸரோவரம் என்னும் ஏரியும் இமய மலையின் கண் உள்ளது. திருக்கயிலாயம், திருக்கே- தாரம், அமரநாத் என்னும் புண்ணியத்தலங்களும் இம்மலையின்கண் உள்ளன.

2. இம்மலையின்கண் உள்ள கொடுமுடிகளின் உச்சியை அடைவது என்பது எளிதானசெயல் அன்று. இமயமலையில் இருபதினாயிரம் அடிக்கு மேலுள்ள பகுதிகள் எக்காலத்தும் பனிக்கட்டிகளால் மூடியே கிடக்கும். பனிக்கட்டியை வெட்டிக்கொண்டு ஏற வேண்டும். மற்றும் அங்கு பனிப்புயல் வீசும். மேலே செல்லச் செல்லக் காற்று மிகவும் இலேசாக இருக்கும். ஏறுபவர் மூச்சு விடுவதற்கும் திணறுவர். ஏறுபவர்கள் பல நாட்களுக்கு வேண்டிய உணவு உடைகளைக் கொண்டு செல்லவேண்டும். இந்நிலையிலும் எவரெஸ்டின் உச்சியைக் காணச்சென்றார் பலர் உண்டு; அவர்களுள் உயிர் இழந்தார்களும் உண்டு.

3. நேபாள நாட்டில் 'தாமி' என்ற சிற்றூர் ஒன்று உண்டு. அது எவரெஸ்டிற்கும் அதன் அருகில் அமைந்த உயரமான மலைகளுக்கும் அருகில் அமைந்தது. அக்கிராமத்தில் 'ஷெர்ப்பா' என்றமலைநாட்டுக் குடிகள் வசிக்கின்றனர். நேபாளத்திற்கும் திபேத்திற்கும் இடையே உள்ள கணவாய்ப் பாதையின் வழியே செல்வோர்க்கு மூட்டை சுமந்து சென்று கூலி பெற்றுப் பிழைப்பதே ஷெர்பாக்களின் தொழிலாகும். அத்தகைய ஷெர்பா குடும்பத்தில் 1914 ஆம் ஆண்டு தாமி என்ற கிராமத்தில் தோன்றியவர் டென்சிங் நார்க்கே என்பவர் ஆவர். டென்சிங்கும் மூட்டை தூக்கிப் பிழைக்கும் தொழிலையே செய்துவந்தார். அவருக்கு அத்தொழிலால் பெறும் ஊதியம் குடும்பப் பாதுகாப்பிற்குப் போதியதாக இல்லை. அதனால் அவர் டார்ஜிலிங்நகரை அடைந்தார்.

4. டென்சிங் மலைச்சிகரங்களில் ஏறிக்காணவேண்டும் என்ற பேரவா உடையவராக இருந்தார். 1935 ஆம் ஆண்டு டென்சிங்கிற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. எரிக் ஷிப்டன் என்பவர் தலைமையில் எவரெஸ்டின் உச்சியைக் காண 1935 ஆம் ஆண்டு ஒரு குழு புறப்பட்டது. அக் கூட்டத்தாரின் பொருள்களைத் தூக்கிச் செல்ல ஷெர்ப்பாக்கள் அமர்த்தப்பட்டனர். அக்கூலியாட்களுள் ஒருவராக டென்சிங்கும் சேர்ந்து கொண்டார். டென்சிங் 1936, 1938, 1951, 1952 என்னும் ஆண்டுகளில் எவரெஸ்டின் உச்சியை அடைய முயன்ற பல்வேறு கூட்டத்தாருடனும் கூலியாளாகச் சென்றார். டென்சிங் இக்கூட்டங்களோடு சென்றதனால் தம் திறமையைக் காட்ட முடிந்தது. அவர் பனி மலையில் வழியறிந்து ஏறும் வல்லமையைக் கூட்டத்தினர் நன்கு உணர்ந்தனர். 1952 ஆம் ஆண்டு எவரெஸ்டு ஏறச் சுவிட்ஸர்லாந்து குழுவினர் முயன்றனர். அக்குழுவினர் தலைவரான டாக்டர் டுனண்டு என்பவர் டென்சிங்கை ஷெர்ப்பாக்களுக்குத் தலைவராகச் செய்தார். டுனண்டு தம்மோடு மலை ஏறுவதற்கு உரிமையும் டென்சிங்குக்கு அளித்தார்.

5. டென்சிங்கும் சுவிட்ஸர்லாந்து நாட்டவரான லாம்பர்ட்டு என்பவரும் எவரெஸ்டின் உச்சியை நோக்கி ஏறினார்கள். உச்சியை அடைய 800அடி இருக்கையில் பனிப்புயலின் கொடுமையால் அவர்கள் திரும்பிவிட நேர்ந்தது. அதே ஆண்டில் மீண்டும் சுவிட்ஸர்லாந்து குழுவினருடன் டென்சிங் சென்றார். அத்தடவையும் எவரெஸ்டின் உச்சியை அடையமுடியவில்லை. 1953-ஆம் ஆண்டு ஒரு குழு எவரெஸ்டினை அடைவதற்குப்

புறப்பட்டது. இங்கிலாந்து நாட்டினரான ஜான் ஹாண்டு என்பவர் அக்கூட்டத்திற்குத் தலைவர் ஆவர். ஜான் ஹண்டு, எவரெஸ்டின் உச்சியைப் பல முறை முயன்றும் அடைய முடியவில்லையே என்று மனம் வருந்திக்கொண்டிருந்த டென்சிங்கைத் தம்முடன் வருமாறு அழைத்தார். டென்சிங்குக்கு ஊக்கம் பிடித்தது. ஷெர்ப்பாக்களுக்கு அவரே தலைவரும் ஆனார். அந்தக் குழுவில் டென்சிங்கு ஐரோப்பியர்க்கு அளிக்கும் வசதிகளைத் தாமும் பெற்றார். அந்தக் குழுவினர் நேபாளத்தின் வழியாகச் சென்று எவரெஸ்டின் தென்பகுதியிலிருந்து ஏறத் தொடங்கினர். முதலில் 27,500 அடி உயரத்தில் கூடாரம் அடித்துத் தங்கினர். அங்கிருந்து புறப்பட்டு ஹிலாரி என்பவரும் டென்சிங்கும் சென்று 27,900 அடி உயரத்தில் இரண்டாவது கூடாரம் அடித்துத் தங்கினர். கீழே இருந்து 27,500 அடிவரை ஏழிடங்களில் கூடாரம் அடித்துத் தங்கிச் சென்றனர் அக்கூட்டத்தார். விடா முயற்சியின் பயனாக இருவரும் எவரெஸ்டின் உச்சியை அடைந்தனர். எவரெஸ்டின் உச்சியில் இந்தியா, பிரிட்டன், நேப்பாளம், ஐக்கியநாடுகளின் கழகம் என்பவற்றின் கொடிகளைப் பறக்கவிட்டு, டென்சிங்கு கம்பீரமாக நின்றார். அந்நிலையில் ஹிலாரி நிழற்படம் எடுத்தார். செய்ய முடியாதெனக் கருதிய செயற்கருஞ்செயலானது விடா முயற்சியாலும் மன ஊக்கத்தாலும் செய்ய முடிந்தது. இருவரும் கீழே இறங்கிவந்தனர். செயற்கருஞ் செய்கை செய்த வீரர்களை இந்தியா, பிரிட்டன், நேப்பாளம் ஆகிய நாட்டினரும் பிற நாட்டினரும் போற்றிப் புகழ்ந்தனர். டென்சிங், ஹிலாரி, கர்னல்ஹண்டு

என்பார் மூவரும் யாவராலும் பாராட்டப்பட்டனர்; பரிசுகளும் பெற்றனர்.

6. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் திருவள்ளுவர். புகழ் ஒன்றே அழியாது நிலை நிற்பது. புகழை எளிதில் பெறல் இயலாது. அரிய செயல்களைச் செய்பவர்க்குத் தான் புகழை எளிதில் எய்த முடியும். அரிய செயல்களைச் செய்ய விடாமுயற்சி, ஊக்கம், பொறுமை முதலான நற்பண்புகள் அமைதல்வேண்டும். இப்பண்புகளை இளமை முதலே பெற்றிருந்தால் பிற் காலத்தில் அரிய செயல்களைச் செய்ய முடியும். ஆதலின் நல்ல குறிக்கோளை மனத்தில்கொண்டு அரிய பண்புகளை இளமை முதலே வளர்ப்பது மாணவர்களின் கடமை யாகும்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

கொடுமுடி – உயர்ந்த மலையுச்சி
மன்னும் – நிலைபெற்ற
மாநிலம் – பெரிய பூமி
சிகரம் – மலையுச்சி
தவளம் – வெண்மை
காஞ்சனம் – பொன்
உற்பத்தி – தோன்றுதல்
ஐக்கியம் – ஒற்றுமைப்பட்ட
பாராட்டினர் – புகழ்ந்தனர்
குறிக்கோள் – கொள்கை
எளிது – சுலபம், இலேசு
புயல் – சுழல் காற்று
திணறும் – முட்டும், தடை [படும்
ஊதியம் – வருமானம்
வாய்ப்பு – சந்தர்ப்பம்
வல்லமை – திறமை
குழுவினர் – கூட்டத்தார்
கழகம் – கூட்டம்
பரிசு – வெகுமதி
பண்பு – குணம்

2. சிறுவிடை வினாக்கள்

1. இந்தியாவின் பெருமைக்குக் காரணம் யாது?
2. இமயத்தைப் பற்றி பாரதியார் என்ன கூறுகிறார்?

3. இமயத்திலுள்ள மூன்று சிகரங்களையும் அவற்றின் உயரத்தையும் கூறு.
4. 'மணிமுடியரசி' – எதற்குப் பெயர்? யார் வைத்தது?
5. இமயத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் யாவை?
6. இமயத்திலுள்ள தலங்கள் யாவை?
7. ஷெர்ப்பா என்பாரைப் பற்றி என்ன தெரியும்?
8. 'டென்சிங் நார்க்கே' என்பவரைப் பற்றி அறிவதென்ன?
9. டென்சிங் எத்தனை முறை எந்த எந்த ஆண்டு எவரெஸ்டின் உச்சியை அடைய முயன்றார்?
10. எந்த ஆண்டில் டென்சிங் வெற்றி பெற்றார்? அவரோடு சென்றவர்கள் யாவர்?
11. இமயத்தின் மேல் ஏறுவதிலுள்ள துன்பங்கள் யாவை?
12. செயற்கருஞ் செயல் என்றால் என்ன?
13. இமயமலை உச்சியை அடைய எந்த எந்த நாடுகள் ஊக்கம் கொண்டன? எதனால் அறிகிறாய்?
14. அருஞ்செயல் செய்வார்க்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை?
15. 'மலை யேற்றம்' என்பது பற்றி 10 வரிகள் எழுது.
16. அடுக்கடுக்காக, ஒன்றன்பின் ஒன்றாக—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

3. எதிர்ப்பதங்கள்

பெருமை × சிறுமை	மாநிலம் × குறுநிலம்
அரிய × எளிய	உயர்ந்த × தாழ்ந்த
புண்ணியம் × பாவம்	பேராறு × சிற்றாறு

4. கட்டுரைப் பயிற்சி

1. 'இமயமலை' என்பதைப் பற்றி பத்து வரிகள் எழுது.
2. 'மலையேறுவதில் உள்ள துன்பங்கள்' – எட்டு வரிகள் எழுது.

3. 'ஷெர்ப்பாக்கள்' பற்றி அறிவனவற்றை எழுது.
4. 'மலையேறுதல்' – என்பதினால் விளையும் நன்மைகளை எழுது.

5. இலக்கணம்

'டென்சிங்கும் மூட்டை தூக்கிப் பிழைக்கும் தொழிலையே செய்து வந்தார்'. —— இந்த வாக்கியத்தைக் கவனி.

டென்சிங் யாது செய்தார்? (மூட்டை தூக்கிப் பிழைக்கும் செயலை) செய்து வந்தார்.

டென்சிங் எதனைச் செய்து வந்தார்? (மூட்டை தூக்கிப் பிழைக்கும்) செயலை.

செயலைச் செய்து வந்தது யார்? – டென்சிங்.

ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புக்கள் உண்டு.

(1) வினையை வைத்துக்கொண்டு, 'யார்?' என்று கேட்டால், எழுவாய் கிடைக்கும்.

(2) எழுவாயை வைத்துக் கொண்டு, 'எதை?' என்று கேட்டால் செயப்படுபொருள் கிடைக்கும்.

(3) எழுவாயை வைத்துக் கொண்டு, 'என்ன செய்தார்?' என்று கேட்டால் பயனிலை கிடைக்கும்.

இத்தகைய வாக்கியங்கள் பல சேர்ந்தது ஒரு பத்தி அல்லது பாரா எனப்படும்.

பயிற்சி

(1) உம் பாடத்தில் எத்தனை பாராக்கள் உள்ளன?

(2) மூன்று வாக்கியங்களை எடுத்து எழுதி எழுவாய், பயனிலை, செயப்படு பொருளைக் கூறுக.

5. காஞ்சிபுரம்

1. பாரதநாடு புண்ணிய பூமி என்று பெயர் பெற்றது. இதற்கு இந்தியா என்ற பெயர் பிற்காலத்தில் வந்ததாகும். இப் பாரதநாட்டின் பழைமையை நன்கு விளக்கிக்காட்டும் நூல்கள் பல உள்ளன. உலகில் பிற நாடுகள் எல்லாம் நாகரிகம் பெற்று முன்னேற்றம் அடையாத முன்னரே பாரத நாடு நாகரிகத்தில் நனி சிறந்து விளங்கியதென்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட இலக்கண இலக்கிய நூல்களே இதனை விளக்கப் போதுமானவை. மற்றும் இப் பாரத நாட்டிலுள்ள சிற்பங்களும் ஓவியங்களும் நாகரிகத்தின் மிக உயர்ந்த நிலையை விளக்குவனவாக உள்ளன.

2. இப் பாரதநாட்டில் பல புண்ணியத் தலங்கள் உள்ளன. உலகில் எப்பகுதியினரினும் பாரதநாட்டிலுள்ளவர்களே ஆன்மஞானத்தில் உயர்ச்சி பெற்றவர்கள். அதனால் இப் பாரத நாடு சைவம், வைஷ்ணவம், பௌத்தம், சமணம் முதலான பல மதங்களுக்குத் தாயகமாயிற்று. அவ்வம் மதங்களிலும் பல சான்றோர்கள் அரிய பெரிய நூல்களை அழியாச் செல்வக் களஞ்சியங்களாக நமக்கு அளித்துள்ளனர். அவ்வரிய நூல்களைக் காணும் இக்காலத்தார் வியந்து நிற்கின்றனர்.

3. பல மதங்கள் தோன்றினமையால் பல தலங்களும் நகரங்களும் பாரதநாட்டில் தோன்றின. அவ்வாறு தோன்றிய பல நகரங்களுள் காஞ்சிபுரமும் ஒன்று. இக்காஞ்சிபுரம், மிகச் சிறந்த நகரங்களான காசி, அயோத்தி, மாயை, மதுரை, அவந்திகை, துவாரகை என்ற முக்தி நகரங்களோடு சேர்த்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தது. காஞ்சிபுரம் தமிழகத்தில் தொண்டை நாட்டின்கண் உள்ளதொரு தலம். இதனைக் காஞ்சி என்றும் கச்சி என்றும் கச்சிமாநகர் என்றும் கூறுவர். இத்தலம் சைவர், வைணவர், பௌத்தர், சமணர் என்பார்களுக்கும் மிகச் சிறந்த தலமாகவே விளங்குவதாகும்.

4. காஞ்சிமாநகரம், பாலாற்றங் கரையில் அமைந்த ஒரு பெரிய நகரமாகும். தமிழ் மொழியும் வடமொழியும் நன்கு செழித்தோங்கிய நகரம் காஞ்சிபுரம். கல்விக்குப் பேர்போன இடம் காஞ்சிபுரம். இங்கு, பண்டு வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த புலவர்கள் வீற்றிருந்து கழகங்கள் அமைத்து இரு மொழிகளையும் போற்றியுள்ளனர். பண்டு பல கலைகளைப் போதித்த நாளந்தாப் பல்கலைக் கழகம் வடநாட்டிலிருந்தது என்பர். அது போன்றே தென்னாட்டிலும் பண்டு பல கலைகளை வளர்க்கும் கழகம் காஞ்சிபுரத்திலிருந்ததென நூல்கள் அறிவிக்கின்றன. காஞ்சியை நாயன்மார்கள் தேவாரத்திலும் ஆழ்வார்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். மாதவச் சிவஞான முனிவரும், கச்சியப்ப முனிவரும் இயற்றிய காஞ்சிப் புராணம் என்ற நூலும் உள்ளது. மற்றும் மணிமேகலை என்ற காப்பிய

3

நூலில் பௌத்த மதம் தழைத்து அரிய முனிவர்கள் வாழ்ந்த இடம் காஞ்சி என்று விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

5. இக் காஞ்சி சோழர்கள், தொண்டைமான்கள், பல்லவர்கள் என்பாருடைய ஆட்சிக் காலத்தில் மிகவும் ற ப்புப் பெற்று விளங்கியது. தொண்டைநாடு சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலமும் உண்டு. அக் காலத்தில் சோழ மன்னர் காஞ்சிபுரத்திலிருந்த பொன் மாளிகையில் வந்து தங்குவர். கரிகாலன் என்ற சோழ மன்னன் காஞ்சியைச் சுற்றிலும் ஓர் அழகிய மதில் அமைத்தான் என்று நூல்கள் கூறும். தொண்டைமான்கள் காலத்திலும், காஞ்சி கல்வி, கலைகளுக்கு இருப்பிடமாய் விளங்கிற்று. பல்லவர்கள் என்பார் தொண்டை நாட்டைக் கைப்பற்றி யாண்டனர். அவர்களுக்குக் காஞ்சியே தலைநகர். அவர்கள் காஞ்சியிலும், அதனை அடுத்துள்ளதான திருக்கழுக்குன்றம், மாமண்டூர், பல்லவபுரம், மகேந்திரவாடி, மகாபலிபுரம் முதலான இடங்களிலும் சிற்பக்கலை செறிந்த அழியாச் செல்வத்தை நமக்கு, இன்றும் கண்டு வியக்கும் வண்ணம் அளித்துச் சென்றனர்.

6. காஞ்சிபுரம் மிகப் பரந்த பெரிய நகரமாகத் தமிழ்நாட்டில் பண்டுதொட்டு இன்றுகாறும் விளங்கி வருகிறது. இந்நகரின்கண் உள்ள கோயில்கள் மிகப் பல. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதான கோயில்களும் அவற்றின் சிற்பங்களும் இன்றும் நம் கண்களுக்கு விருந்தென மிளிர்ந்து, நம்மை வியக்கச் செய்கின்றன. அவை, ஏகாம்பரநாதர் கோயில்,

காமாட்சியம்மன் கோயில், குமரக் கோட்டம், கச்சபேசுவரர் கோயில், வைகுந்தநாதர் கோயில், கைலாசநாதர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் என்பனவாகப் பலவாம். அக் கோயில்கள் எல்லாம் பெரியனவும், அழகு நிறைந்தனவும் சிற்ப ஓவியக் கலைகள் செறிந்தனவுமாகச் சிறந்து மிளிர்கின்றன. பல சமயங்களுக்கும் இருப்பிடமாகத் திகழும் காஞ்சிபுரத்தில் எப்பொழுதும் திருவிழாக்கள் சிறப்பாக நடந்துகொண்டே இருக்கும். மக்கள் திரள் திரளாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து திருவிழாக்களைக் கண்டு களிப்பர்.

7. காஞ்சிபுரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சிவாலயங்களும், பதினெட்டு விஷ்ணு ஆலயங்களும், ஆயிரக் கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் முதலான மண்டபங்களும் செறிந்துள்ளன. பல விண்முட்டும் வியன்பெருங் கோபுரங்கள் கலைச் செல்வங்களைத் தாங்கி நின்று காட்சியளிக்கின்றன. பல்லவர்களுள் மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன், காடவர்கோன் தெள்ளாறு எறிந்த நந்திபோதவர்மன் என்பார் காஞ்சிபுரத்தைச் சீரும் சிறப்பும் பெற்றுப் பொலிவுற்று விளங்குமாறு செய்தனர். பலவகை மதத்தவர்களும் வேற்றுமையின்றி ஒற்றுமையுற்று இந் நகரில் வாழ்கின்றனர்.

8. காஞ்சிபுரத்தில் பல பள்ளிக்கூடங்கள் உள்ளன. காஞ்சி வள்ளலான பச்சையப்பன் கல்லூரியும் அங்கு உள்ளது. காஞ்சிபுரம் சென்னைக்கு ஐம்பது மைல் தூரத்தில் உள்ளதாகும். காஞ்சிபுரம் சரித்திரப்

பெருமை வாய்ந்தது. ஒவ்வொருவரும் கண்டு களிக்க வேண்டிய நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்றாகும்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

சிற்பம் – கல்லில் செதுக்கப்படும் உருவங்கள்
ஓவியம் – தீட்டப்படும் சித்திரங்கள்
ஆன்மஞானம் – உயிரைப் பற்றிய அறிவு
சைவம் – சிவ சம்பந்தம் உடையது
வைணவம் – விஷ்ணு சம்பந்தம் உடையது
தென்மொழி – அழகியமொழி; தமிழ்
கழகங்கள் – புலவர் சங்கம்
பௌத்தம் – புத்தர் போதித்த மதம்
சமணம் – அருகனைப் பற்றிய மதம்
களஞ்சியம் – சேர்த்து வைக்கும் இடம்
வியந்து – ஆச்சரியப்பட்டு
வடமொழி – சம்ஸ்கிருதம் வடக்கிலிருந்து வந்த மொழி
இதுகாறும் – இதுவரை
செறிந்தன – நிறைந்தன.
முக்தி – மோட்சம்
மிளிர்ந்து – விளங்கி

2. சிறு விடை வினாக்கள்

1. பாரத நாட்டின் பழைமை பற்றி ஐந்து வரிகள் எழுது.
2. மதங்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறி விளக்கு.
3. அழியாச் செல்வக் களஞ்சியங்கள் எவை ?
4. முக்தி நகரங்கள் எவை ?
5. காஞ்சிபுரம் என்ன பெருமை வாய்ந்தது ?
6. காஞ்சிபுரம் எந்த ஆற்றின் கரையில் அமைந்தது ?
7. பண்டு விளங்கிய வடநாட்டுப் பல்கலைக் கழகம் எது ?
8. காஞ்சிபுரத்தை எதற்கு ஒப்பிடலாம் ? ஏன் ?
9. காஞ்சிபுரத்தின் சிறப்பைக் கூறுவன எவை ?
10. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய நூல்கள் எவை ?
11. மணிமேகலையில் என்ன கூறப்பட்டுள்ளது ?

12. பொன் மாளிகையைப்பற்றி அறிவதென்ன?
13. கரிகாலன் செய்தது என்ன?
14. பல்லவர்களின் சிற்பக்கலைகள் எங்கெங்கு காணப்படும்?
15. காஞ்சிபுரத்தில் விளங்கும்சிறந்த கோயில்கள் சில கூறு.
16. காஞ்சியைப் பொலிவுறச் செய்த பல்லவர்கள் யாவர்?
17. காஞ்சிவள்ளல் என்று கூறப்படுபவர் யார்? அவர் செய்தது என்ன?

3. கட்டுரைப் பயிற்சி

கீழ்வரும் தலைப்பு அமைத்துக் கட்டுரை எழுது :—

1. 'காஞ்சி சமயங்களின் இருப்பிடம்'
2. காஞ்சி கல்விக்கு இருப்பிடம்.
3. காஞ்சி சிற்ப ஓவியக் கலைக்கூடம்.
4. காஞ்சி வரலாற்றுப்பெருமை வாய்ந்த நகர்.

4. பயிற்சி

விளங்கியது + என்பதற்கு = விளங்கிய தென்பதற்கு.
பல + ஆயிரம் = பல்லாயிரம்

இவை போலப் பிரித்து எழுது :—

காட்சியளிக்கின்றன
எப்பகுதியினரும்
தாயகமாயிற்று
செழித்தோங்கிய
தென்னாட்டிலும்
ஆட்சிக்குட்பட்டிருந்த
விருந்தென

5. இலக்கணம்

இராமன் ஒரு நல்ல பையன்.
பசு மிகவும் சாதுவான பிராணி.

இவ் வாக்கியங்களில் இராமன் என்பது ஒரு மனிதன் பெயரையும், பசு என்பது ஒரு மிருகத்தின் பெயரையும் குறிக்கின்றன அல்லவா ? இவற்றுள் எது உயர்ந்தது ? எது தாழ்ந்தது ?

இராமன் – உயர்ந்தது; பசு – தாழ்ந்தது.
உயர்ந்ததை உயர்திணை என்பர்.
தாழ்ந்ததை (உயர்வு அல்லாததை) அஃறிணை என்பர்.
அல் + திணை = அஃறிணை.
உயர்வு அல்லாத திணை. திணை என்றால் சாதி.

மக்கள், தேவர், நரகர் – மூன்றே உயர்திணை. மற்ற உயிருள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணை.

பயிற்சி

இப்பாடத்திலிருந்து உயர்திணைக்கும் அஃறிணைக்கும் நான்கு நான்கு உதாரணங்கள் எடுத்து எழுது.

6. மின்சாரம்

1. மனிதன் அறிவு வளர்ந்துகொண்டே வருகிறது. அறிவு வளர வளரப் பொருள்களும், சூழ்நிலைகளும், வாழ்க்கை நிலையும் மாறிக்கொண்டே வருகிறது. முன் காலத்தைப் போன்றது அன்று, இக்காலம். ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலுள்ள நாட்டிற்கும் இக்காலத்திலுள்ளவன் மிக விரைவில் சென்று விடுகிறான். ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் நடக்கும் பேச்சுக்களையும் செயல்களையும் உடனுக்குடன் அறிகின்றான். வேலைகளை எல்லாம் மிக விரைவில் செய்து கொள்கிறான். எங்கும் இருளைப் போக்கி ஒளி தருகிறான். காற்று வீசும்படி செய்கிறான். வெப்பமான நாட்டில், தான் வசிக்கும்அறையைக் குளிர்ச்சியாகவும், குளிர் மிகுந்த இடத்தில் தன் அறையை வெப்பமாகவும் இருக்கும்படி மாற்றிக்கொள்கிறான். பலவகை நோய்களை விரைவில் குணப்படுத்துகிறான். இவையே அன்றிப் பெருக்குதல், ஆடைகளைத் தோய்த்தல், உலர்த்தல், பொருள் எடுத்தல், உயரமான இடத்தினை விரைவில், நடவாமல் சென்றடைதல், சமைத்தல் முதலானவற்றையும் எளியனவாகச் செய்துகொள்கிறான். இவற்றையெல்லாம் செய்து கொள்வதற்கு மனிதனுக்கு உறுதுணையாக இருப்பது யாது? அதுதான் மின்சாரம். ஆகவே, இக்காலத்தை 'மின்சார காலம்' என்று கூறினால் குற்றமாகாது.

2. அறிவியல்கலைகள் வாழ்க்கைக்கு நன்மைகள் பலவற்றைப் புரிகின்றன. கூரிய அறிவும் ஆராய்ச்சியும் தான் மனிதனுக்கு இன்றியமையாத தேவை. அறிவை இயற்கையாக மனிதனுக்கு இறைவன் அளித்துள்ளான், அதனை, ஆராய்ச்சிகொண்டு துலக்கி வாழ்க்கையில் விளக்கமுறுதல் மனிதனின் கடமை. அறிவு ஆராய்ச்சியின் பயனாகக் கண்டுபிடிக்கப் பட்டவற்றுள் ஒன்று மின்சாரம். அது உயரிய நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாததாக உள்ளது.

3. அம்பர் என்று ஒரு பொருள் உள்ளது. அதனைத் தேய்த்தால் ஒருசக்தி உண்டாகிறது. டார்ப்பிடோ மீன்கள் என்பவற்றினிடத்தில் ஒரு சக்தி இருக்கிறது. அச்சக்தி தன் பக்கத்தில் வருகிற மனிதரை நடுங்கச் செய்கிறது. மிக்க உயரமான மலைகளிலிருந்து விழும் நீர் வீழ்ச்சியில் யந்திரங்களை அமைத்து, உருளைகளை நீர் விழும் வேகத்தால் உருளச்செய்து அவைகளிடம் உண்டாகும் காந்த சக்தியின் மூலமும் அச்சக்தியைப் பெறலாம். மின்னலினிடத்தில் ஒளி உண்டாவதைக் காண்கிறோம் அல்லவா ? அச்சக்திக்கு ஒளி உண்டு என்று அறிகிறோம். அச்சக்திதான் மின்சாரம் எனப்படுவது. அச்சக்தி மூன்று இயல்புகளை உடையது. அவை வெப்பம், இயங்கும் சக்தி, ஒளி என்பனவாம். இம்மூன்றும் ஒரு சக்தியின் மூலம் கிடைத்தால் எவற்றைத்தான் மனிதன் செய்து கொள்ள இயலாது ?

4. மின்சாரத்தை ஆராய்ந்த விஞ்ஞானிகள் பலர். அவர்களுள் தாமஸ் ஆல்வா எடிஸன் என்பார் ஒருவர்

இருளை அகற்ற மின்சார விளக்குகள் பயன்படு கின்றன. காற்று, மழை என்பவற்றால் இவ்விளக்குகள் அவிந்துவிடும் என்ற அச்சமும் இல்லை. ஒளியும் அதிகமாக உள்ளது. மின்சாரம் இயங்கும் சக்தியை உடையது. ஆதலால், பலவகை யந்திரங்களை ஓட்டிப் பலவகைத் தொழில்களை எளிதில் நடத்தலாமன்றோ? நம் நாட்டில் இக்காலத்தில் மேட்டூர், சிவசமுத்திரம், பைகாரா என்ற இடங்களில் மின்சாரம் உற்பத்தி செய் யப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சாரம் கம்பி மூலம் கொண்டு செல்லப்படுகிறது. அதனால், எங்கும் தொழில் விருத்தியடைவதற்கு வாய்ப்பு ஏற்படு கிறது. உழவர்கள் நீர் இறைப்பதற்கு மின்சார சக்தி யைப் பயன் படுத்துகின்றனர். நெல், கோதுமை, அரிசி, மிளகாய், மஞ்சள், காப்பிக்கொட்டை முதலியவற்றை அறைப்பதற்குரிய யந்திரங்களை இயக்குவதற்கு மின் சாரம் பயன்படுகிறது. நீர் இறைத்தல், ஆடை துவைத் தல், சமைத்தல், விட்டைச் சுத்தம் செய்தல் முதலிய வீட்டு வேலைகளையும் மின்சாரத்தால் செய்துகொள்ள லாம்.

5. நகரில் வாழும் மக்கள் வெயிற்காலத்தில் காற்றின்றி வருந்துகிறார்கள். அவர்கள் அறையைக் குளிர்ச்சியாக்கவும், விசிறி விசவும் மின்சாரம் பயன் படுகிறது. நகரில் ஓரிடத்தில் இருப்பவர் பிறிதோர் இடத்தில் இருப்பவர்களோடு நேரில் பேசுவது போல் பேசுகிறார்கள். அதனைத் 'தொலைபேசி' அல்லது 'டெலி போன்' என்பர். அதற்கும் மின்சாரம் உதவுகிறது.

6. நாம் இக்காலத்தில் படக்காட்சி காண்கிறோம்; வானொலி கேட்டு மகிழ்கிறோம். இவற்றை எதன் துணையால் பெறுகிறோம்? மின்சாரத்தின் உதவியால் தான். மின்சாரம் இவற்றின் கருவிகளை இயக்குதற்குப் பயன்படுகிறது. நூல் நூற்றல், ஆடைகள் நெய்தல், காகிதம் செய்தல், அச்சு அடித்தல் முதலான தொழில்களைச் செய்யும் மக்கள், அவ்வவற்றின் கருவிகளை மின்சாரத்தின் உதவியால் இயக்கி விரைவில் செய்து முடித்துக்கொள்கிறார்கள். மின்சாரம் பலர் பல நாள்கள் பெரும் பொருட்செலவு செய்து செய்ய வேண்டிய காரியத்தைச் சிலமணி நேரத்தில் சிறு செலவில் செய்து முடிக்கின்றது. மற்றும், சென்னை போன்ற பெரிய நகரங்களில் மின்சாரவண்டிகளும் மின்சார ரயில்களும் உள்ளன. அவை வேகமாகச் செல்கின்றன. இவற்றால் பெரிய நகரங்களில் வெவ்வேறு இடங்களில் வசிக்கும் மக்கள் விரைவில் எங்கு வேண்டுமானாலும் சென்று வர இயலுகிறது.

7. மின்சாரம் இன்று, வாழ்க்கைக்கு இன்றியமையாததாகி விட்டது. ஆனால், மின்சாரம் எவ்வளவு நன்மைகளைச் செய்ய வல்லதோ அவ்வளவு கேட்டையும் செய்யவல்லது. உயிரையே உண்டுவிடும் தன்மை வாய்ந்தது மின்சாரம். ஆதலால், மின்சாரத்தை உபயோகிக்கும்பொழுது முழுவதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உயிரை உண்ணும் மின்சாரமே வைத்தியர் கையில் பயன்பட்டு உயிரைக் காக்கின்றது. எனவே, மின்சாரம் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இறைவனைப்போல் செய்யவல்லது.

மக்கள் தம் நுண்ணறிவால் ஆய்வாராயின் மின்சாரத்தால் பல நன்மைகளைப் பெற்று உயர்ந்த நாகரிக வாழ்க்கைநிலையை எய்தி, இவ்வுலக வாழ்க்கையை மிகவும் இன்பமாகக் கழிக்கலாம்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

சூழ்நிலை – தன்னைச்சுற்றி அமைந்துள்ள நிலை
எளியனவாக – சுலபமுடையனவாக
அறிவியற்கலை – ஸயன்ஸ் என்று கூறப்படும் கலை
இன்றியமையாத – இல்லாமல் முடியாத
துலக்கி – விளக்கி
விளக்கம் – பிரகாசம், ஒளி, தெளிவு
இயக்குதல் – ஓடச் செய்தல்
எச்சரிக்கை-அறிந்ததன்மையோடிருத்தல்(ஜாக்கிரதை)
சக்தி – சத்தி, வலிமை
இயல்பு – தன்மை
இயங்கும் – அசையும்
வெப்பம் – சூடு
விஞ்ஞானி – அறிவியல்
தொலை – தூரம்
உறுதுணை – மிக்கதுணை

2. சிறுவிடை வினாக்கள்

1. மனிதன் வாழ்க்கை மாறக் காரணம் என்ன?
2. இக்காலத்தில் மனிதன் என்ன என்ன செய்துகொள்கிறன்
3. இக்காலத்திற்கு ஏன் மின்சார காலம் என்ற பெயர் கொடுக்கலாம்?
4. எவை மனிதனுக்குத் தேவை?
5. எது மனிதனின் கடமை?
6. மின்சாரம் எவற்றில் காணப்படுகிறது? எப்படிப் பெறுகிறார்கள்?
7. விஞ்ஞானிகளுள் சிறந்தவர் யார்?
8. நம் நாட்டில் எவ்விடங்களில் மின்சாரம் எடுக்கப்படுகிறது?

9. மின்சாரத்தினுல் விளையும் நன்மைகள் என்ன?
10. மின்சாரத்தைக் கொண்டு நடைபெறும் தொழில்கள் எவை?
11. மின்சாரம் இக்கால வாழ்க்கைக்கு இன்றியமையாத தாகி விட்டது என்பது எப்படி?
12. மின்சாரம் இறைவனை ஒப்பது – விளக்கு.

3. கட்டுரைப் பயிற்சி

கீழ்வரும் தலைப்புக்களை அமைத்துக் கட்டுரை எழுது :—

1. மின்சாரமும் அதன் பயனும்.
2. இக்காலம் மின்சார காலம்.
3. மின்சாரமும் தொழிலும்.

வேலை

தாமஸ் ஆல்வா எடிஸன் என்பவரைப்பற்றி நூல் நிலையத்திலுள்ள புத்தகத்தைப் பார்த்தோ; ஆசிரியரைக் கேட்டறிந்தோ மின்சாரத்தைக் கொண்டு அவர் என்ன செய்தார் என்று அறிந்து கொள். அதை விளக்கி எழுது.

நுண்மை + அறிவு = நுண்ணறிவு

விருத்தி யடைவதற்கு =

படக்காட்சி =

4. இலக்கணம்

கந்தன்	நல்ல பையன்
சீதை	பாட்டுப் பாடினுள்.
மக்கள்	திருவிழாவை விரும்புகிருர்கள்.
பசு	மிகவும் பயன்படும் மிருகம்.

விலங்குகள் பல காட்டிலும், நாட்டிலும் வாழ்கின்றன.

மேலே உள்ள வாக்கியங்களைக் கவனித்துப் படியுங்கள். இவற்றில் உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் எவை?

இனிக் கவனியுங்கள்.

கந்தன் – ஆணைக் குறிக்கிறது.
சீதை – பெண்ணைக் குறிக்கிறது.
மக்கள் – ஆண், பெண் என்ற பலரைக் குறிக்கிறது.
பசு – ஒரு (வகை) மிருகத்தைக் குறிக்கிறது.
விலங்குகள் – பலவகை மிருகங்களைக் குறிக்கிறது.
ஆணைக் குறிப்பது – **ஆண்பால்**
பெண்ணைக் குறிப்பது – **பெண்பால்**

ஆண், பெண் என்ற இருவகையான பலரையும் குறிப்பது– **பலர்பால்.**

ஒரு பொருளைக் குறிப்பது – **ஒன்றன்பால்.**

ஒன்றுக்கு மேற்பட்ட (இரண்டு முதலான) பல பொருள்களைக் குறிப்பது – **பலவின் பால்.**

ஆண்பால், பெண்பால், பலர்பால் } என்ற மூன்றும் உயர்திணை.

ஒன்றன்பால், பலவின்பால் } என்ற இரண்டும் அஃறிணை.

பால் என்றால் பகுதி, பிரிவு என்று பொருள்.
அஃறிணையில் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவு இல்லை.

5. பயிற்சி

1. பால் எத்தனை ?
2. உயர்திணைக்குரிய பால்கள் எத்தனை ? உதாரணத்துடன் விளக்கு.
3. அஃறிணைக்குரிய பால்கள் எத்தனை ? உதாரணத்துடன் விளக்கு.
4. அஃறிணையில் என்ன இல்லை ? உயர்திணையில் என்ன உண்டு ?

7. நற்பெரும் புலவர்

1. தமிழ்நாடு, சேரநாடு சோழநாடு பாண்டியநாடு என்று மூப்பெரும் நாடுகளாகப் பிரிந்திருந்தது. அம் மூன்றுள் நீர்வளமும் நிலவளமும் மிக்கது சோழநாடு. இந்நாட்டில் வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியாறு பல கால்களாய்ப் பிரிந்து பாய்ந்து வளத்தைக் கொழிக்கின்றது. காவிரிக்குப் பொன்னி என்ற பெயரும் உண்டு. ஆதலால் சோழநாடு நீர்நாடு, காவிரி நாடு, பொன்னிநாடு, என்னும் பெயர்களையும் பெற்றது. 'சோழநாடு சோறு உடைத்து' என்னும் பழமொழியும் அதன் வளத்தைக் குறிக்கும். எங்கும் கால்வாய்களும், சோலைகளும், கரும்பும் நெல்லும் செழித்து வளரும் வயல்களும், இடை இடையே கிராமங்களும், ஆங்காங்கே கோயில்களும், குளங்களும், கோபுரங்களும் சோழநாட்டை அழகு செய்கின்றன.

2. சோழவள நாட்டில் வளம் மிக்க சிற்றூர்களில் ஒன்று கோவூர் என்பது. அவ்வூரில் தாளாண்மையில் சிறந்த வேளாண்குடி மக்கள் பலர் உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்துவந்தனர். அவ் வேளாளருள் ஒருவர் கோவூர்கிழார் என்பவர் ஆவர். கிழார் என்பது வேளாளர்க்குரிய பட்டப் பெயர். கோவூர்கிழார் கல்வி கேள்விகளில் சிறந்தவர் : அவர் செய்யுள் இயற்றுவதில் மிக வல்லவர். மன்னர்

களும் மதிப்புடனும் மரியாதையுடனும் அவர் சொல்லைக் கேட்டு நடக்கும்பெருநிலையுடையார் கோவூர்கிழார். அவர், தன்னலம் கருதாதவர்; பிறர் நலத்திற்காக உழைப்பவர். பிறர் துன்பம் கண்டால் மனம் சகியாது உடனே நீக்கும் இனிய பண்பினர் கோவூர் கிழார். அரசரிடத்து அஞ்சாது தம் இனிய மொழிகளால் நயமாகப் பேசுவார்; வேந்தரும் தம் சொல்லை விருப்புடன் ஏற்று நடக்குமாறு சொல்லவல்ல சொல் திறம் படைத்தவர். இத்தகைய பெரும் புலவரின் இயற்பெயர் அறியக் கூடவில்லை. கோவூருக்கே பெருமையை உண்டாக்கிய அப்பெரும் புலவரை யாவரும் கோவூர்கிழார் என்று அழைத்தனர்.

3. அப்பெரும் புலவர் வாழ்ந்த காலத்தில் சோழர் குடியில் பிறந்த இரு வேந்தர் இருந்தனர். அவ்விருவரும் தாயத்தார்கள். அவருள் **நலங்கிள்ளி** என்பவன் காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டின் கீழ்ப்பாகத்தை ஆண்டு வந்தான். அவன் வலிமை மிக்கவன்; போரிடும் ஆற்றல் உடையவன். **நெடுங்கிள்ளி** என்பவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டின் மேற்பகுதியை ஆண்டு வந்தான். அவ்விருவருக்கும் ஒற்றுமை இல்லாமையால் பகை தோன்றிற்று. நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைப் போரில் வென்று நாட்டைக் கவர எண்ணிப் பெரும் படையுடன் வந்து, உறையூரை முற்றுகை இட்டான். முற்றுகை நீண்ட நாள் தொடர்ந்தது. நெடுங்கிள்ளி உறையூரில் அரண்மனைக்குள் தங்கி இருந்தான். அதனால், மக்கள் மிகவும் துன்பமுற்றனர்.

4. இந் நிலையைக் கோவூர்கிழார் அறிந்தார். அவர் போரை ஒழிக்க எண்ணினார். மக்கள் படும் துன்பத்தைப் போக்க மனத்துட் கொண்டார். போரினால் வரும் உயிர்க்கேடும் பொருள் அழிவும் அவர் மனத்தை வருத்தின. அவர் விரைந்து நலங்கிள்ளியிடம் சென்றார். கோவூர் கிழார் நலங்கிள்ளியை நோக்கி, " படைவலிமை மிக்க மன்னனே! போரில் பெருந்திறல் உடையவனே, நீயும் உன்னால் முற்றுகை இடப்பட்டு அரண்மனைக்குள் இருப்பவனும் வேறு வேறு குடியிற் பிறந்தவர்கள் அல்லீர். இருவரும், சோழர் குடியில் பிறந்தவர்களே. போரில் இருவரும் வெற்றி பெறுதல் என்பது இயலாது. இருவருள் ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழனே; பாண்டியனும் சேரனும் அல்ல. அவ்விருவரும் மகிழ்ச்சியுற்று உங்கள் குடியை எள்ளி நகையாடுவர். அதனால் உங்கள் குடிக்கு அழியாப் பழியே உண்டாகும். அதனால் நீ உன் குடிக்குப் பெரும் பழியும் அவமானமும் நேராதிருக்கச் செய்ய வேண்டுவனவற்றை அறிந்து செய்க," என்று இனிய மொழிகளால் நயம்படக் கூறினார். நலங்கிள்ளி, புலவர் மொழியைப் பொன்மொழியாகக் கொண்டு, போரை நிறுத்திவிட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான்.

5. ஒரு முறை **இளந்தத்தன்** என்ற புலவன் நெடுங்கிள்ளியிடம் பரிசில் பெற வந்தான். அவன் முன்னர் நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்றவனே. அவ்விருவருக்கும் இருக்கும் பகைமை அப்புலவனுக்குத் தெரியாது. மற்றும், தான் புலவன் ஆதலின் அவர்கள் பகைமையால் தனக்குத் தீங்கு வாராது என இளந்தத்

தன் எண்ணினான். ஆனால் நெடுங்கிள்ளி இளந்தத்தனாகிய புலவனை நலங்கிள்ளியின் ஒற்றன் என்று கருதிவிட்டான். ஒற்றர் மறைவாகப் பகைவர் நாட்டில் சென்று யாவற்றையும் அறிந்து தம் அரசனுக்குத் தெரிவிப்பவர். அவர்களைக் கண்டறிந்தால் அரசர்கள் கொன்றும் விடுவர். நெடுங்கிள்ளி இளந்தத்தனை நலங்கிள்ளியின் ஒற்றன் எனக் கருதியதனால் கொன்றுவிடக் கருதினான். இச் செய்தியைக் கோவூர்கிழார் அறிந்தார். அவர் மனம் துடித்தது; உடல் பதறிற்று. அவரும் புலவர் அல்லவா? மற்றொரு புலவர் உயிர் வீணாக அழிய அவர் விடுவாரோ? கோவூர்கிழார் விரைந்து நெடுங்கிள்ளியைச் சென்று கண்டார். "அரசே, பழுத்த மரங்களைத் தேடிச்செல்லும் பறவைகளைப் போன்றவர்கள் புலவர்கள். இல்லை என்னாமல் கொடுக்கும் வள்ளல்களைத் தேடிப் புலவர்கள் மெய்வருத்தம் பாராமல் காடுகளையும் மலைகளையும் கடந்து நெடுந்தூரம் செல்வர். சென்று, வள்ளல்களின் சிறப்பியல்புகளைத் தம் அறிவின் திறத்திற்கு ஏற்பப் பொருந்துமாறு வல்லபடி பாடுவர்; பரிசில் பெற்று மீளுவர். அப்பரிசில் பொருளைத் தாமே உண்ணாது சுற்றத்தார்க்கும் பிறருக்கும் அளித்து மகிழ்வர். அப்பொருள் தீர்ந்துவிட்டால் மீண்டும் வள்ளல்களை நாடிச் செல்வர். இதுவே புலவர்களுடைய பரிசில் வாழ்க்கை அவர்கள் ஓர் உயிருக்கும் ஊறு எண்ணார். அத்தகைய புலவர் வழியில் வந்தவர் இந்தப் புலவர். இவரை ஒற்றன் எனக் கருதி நீ கொல்லத் துணிந்தாய். இவரைக் கொல்லுதல் தகாது. அச்செயல் உனக்குப் புகழைத் தராது. இதனை நன்கு ஆய்ந்து செய்வது செய்க," என்று நயம்படத் தம்

மனக் குறிப்பை விளக்கினர். நெடுங்கிள்ளி புலவர் கூறியதைக் கேட்டு நன்கு ஆய்ந்து, புலவர் கூறியது உண்மை என்பதை உணர்ந்து இளந்தத்தனைக் கொல்லாமல் பரிசில் அளித்து விடுத்தான். புலவரும் உயிர் பிழைத்துப் பரிசில் பெற்று மீண்டார்.

6. திருக்கோவலூரைத் தலை நகராகக்கொண்டு ஆண்ட மன்னன் திருமுடிக்காரி என்னும் குறுநில மன்னன். அவன் போர்த்திறம் மிக வாய்ந்தவன். அவன் போருக்குச் சென்றால் வெற்றியே அல்லாமல் தோல்வி அடைவதில்லை. ஆதலால் அவனுக்குப் பணம் கொடுத்து மன்னர்கள் அவன் துணையைப் பெற்றுக் கொள்வார்கள். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன் சோழநாட்டை ஆண்டு வந்தான். திருமுடிக்காரி வலியனாயிருப்பதால் தனக்கு எப்பொழுதும் ஆபத்து உண்டாகலாம் என்று கிள்ளிவளவன் கருதினன். அதனால் கிள்ளிவளவனுக்குக் காரிமேல் பொறாமையும் பகைமையும் உண்டாயின. அவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்பவனைத் தூண்டி காரியோடு போர்புரியச் செய்தான். போரில் அதியமான் நெடுமான் அஞ்சி, காரியைக் கொன்றான். இருவர் படை சேர்ந்தல்லவா காரியைக் கொன்றது! காரியைக் கொன்றும் காரியிடம் கொண்ட கோபமும் பகைமையும் கிள்ளிவளவனுக்குத் தணியவில்லை.

7. காரிக்கு இரு இளஞ்சிறுவர்கள் இருந்தனர். கிள்ளிவளவன் காரியின் குலத்தையே அழிக்க எண்ணி, அந்த இரண்டு குழந்தைகளையும் பிடித்துவரச் செய்தான். அக்குழந்தைகளை மதயானைகளை விடுத்துக்

காலால் மிதித்துக் கொல்லுமாறு கட்டளையிட்டான். என்னே, பொறுமையும் பகைமையும் செய்யும் தீச் செயல்! மக்கள் கூட்டம் நெருங்கித் திரண்டு இரங்கி நின்றது. மக்கள் கண்கள் குழந்தைகளை நோக்கின. இந்நிலையைக் கோவூர்கிழார் அறிந்தார். அவர் விரைந்து வேந்தனிடம் சென்றார். "சோழமன்னனே, கேள்! இங்குக் கொல்லப்பட நிற்கும் இரு குழந்தைகளும் தம்மைக் கொல்லவரும் காலன் போன்ற பேர் யானையைக் கண்டு அஞ்சவில்லை. யானையை ஓர் அதிசயப் பொருளாகவே எண்ணி வியந்து பார்க்கின்றனர். ஆனால் மக்களின் கண்கள் எப்பக்கத்திலிருந்தும் தம்மையே நோக்குதலைக் கண்டு குழந்தைகள் அஞ்சுகின்றன. இத்தகைய அறியாமையை உடைய குழந்தைகளை நீ கொல்ல நினைத்தாயே! தகுமோ? தக்கதாயின் ஆய்ந்து செய்க," என்றார் கோவூர்கிழார். அவ்வளவே! மன்னன் விழித்துக்கொண்டான்; மனம் மாறிற்று; குழந்தைகளைக் கொன்று எய்தும் பழிபாவத்தினின்றும் நீங்கினான். பெரும்புலவரின் பொன்மொழியால் கிள்ளிவளவனும் உய்ந்தான்; குழந்தைகளும் உயிர் பிழைத்தன.

8. மாணவர்களே! பண்டைக்காலப் புலவர்களின் திறனையும், மனப்பான்மையினையும், மன்னர்களும் பணிந்து கேட்டு நடக்கும் பண்பினையும் இப்பாடத்தால் நன்கு உணரலாம் அன்றோ? இத்தகைய புலவர் அருஞ்செயல்கள் பலவற்றைப் புறநானூறு என்னும் நூல் தெளிவாக விளக்குகின்றது.

1. அருஞ்சொற்களும் பொருளும்

வான்பொய்ப்பினும் - மழை பெய்யாவிட்டாலும்	காலன் - யமன்
	கிழார் - உரிமை உடையார்
கால்கள் - வாய்க்கால்கள்	இயற்றுதல் - செய்தல்
கொழிக்கின்றது - மிகுதியும் அளிக்கின்றது	முற்றுகை - சேனைகொண்டுவளைத்துக்கொள்ளுதல்
ஆங்காங்கே - அந்த அந்த இடங்களில்	உயிர்க்கேடு - உயிருக்கு அழிவு
சிற்றூர் - சிறிய ஊர்	பொருட்கேடு - பொருளுக்குஅழிவு
வேளாண்குடி - வேளாளர் குடும்பம்	இயலாது - முடியாது
திறல் - வலிமை	நகையாடுவர் - பரிகசிப்பர்
எள்ளி - இழிவாக நினைத்து	பரிசில் - வெகுமதி
நயம்பட - நன்மை உண்டாகும்படி	வள்ளல் - இல்லை என்னாது வரம்பின்றிக் கொடுப்பவர்
பதறிற்று - நடுங்கிற்று	தணிய - குறைய
ஆய்ந்து - ஆராய்ந்து	உய்ந்தனர் - பிழைத்தனர்

2. சிறுவிடை வினாக்கள்

1. சோழ நாட்டின் சிறப்பைப்பற்றி ஐந்து வரிகள் எழுது.
2. சோழ நாட்டிற்கு மறுபெயர்கள் யாவை? காரணம் கூறு.
3. சோழ நாட்டைப் பற்றிய பழமொழி யாது?
4. சோழ நாட்டின் அழகு யாது?
5. கோவூர் கிழார் என்ற பெயர்க்குக் காரணம் கூறு.
6. கோவூர் கிழாரின் இயல்புகளை விளக்கி எழுது.
7. நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி யாவர்?
8. உறையூர் மக்கள் துன்புறக் காரணம் என்ன?
9. கோவூர் கிழார் நலங்கிள்ளியைப் பார்த்துக் கூறியவை யாவை

10. நலங்கிள்ளி பொன்மொழியாகக் கொண்டவை யாவை?
11. இளந்தத்தன் யார்? எதனை அறியான்?
12. ஒற்றரைப் பற்றி அறிவது என்ன?
13. நெடுங்கிள்ளி ஏன் இளந்தத்தனைக் கொல்லத் துணிந்தான்?
14. புலவர்களுடைய பரிசில் வாழ்க்கையைப்பற்றி எழுது.
15. எது தகாது? எது புகழ் தராது என்று கோவூர் கிழார் கூறினார்?
16. திருமுடிக்காரியின் வீரத்தை விளக்கு.
17. கிள்ளிவளவன் யார்? ஏன் திருமுடிக்காரியிடம் பகைமை கொண்டான்? என்ன செய்தான்?
18. கோபம் தணியாத கிள்ளி வளவன் எதனைச் செய்யத் துணிந்தான்?
19. கோவூர் கிழார் கிள்ளி வளவனிடம் யாது கூறினார்?
20. புறநானூற்றில் எவற்றைக் காணலாம்?

3. கட்டுரைப் பயிற்சி

கீழ்வரும் தலைப்புக்களை அமைத்துக் கட்டுரை எழுது.

1. புலவர் போர்தடுத்தல்.
2. புலவர் வாழ்க்கை.
3. புலவர் மன்னர்களை இடித்துரைத்து நல்வழிப்படுத்தல்.
4. பண்டைப் புலவர்களின் சிறப்பியல்புகள்.

பயிற்சி

முப்பெரும் நாடு - மூன்று + பெரும் + நாடு

இதுபோலப் பிரித்து எழுது :—சிற்றூர்
வேளாளர்க்குரிய
இருவேந்தர்
போரிடுமாற்றலுடையவன்
துன்பமுற்றனர்

பயிற்சி - 2

கீழ்வருவனவற்றை அமைத்து வாக்கியம் எழுது :—

இடைஇடையே	பழியும் பாவமும்
ஆங்காங்கே	கோபமும் பயமும்
நயம்பட	பொறுமையும் பகையும்
மெய்வருத்தம்	மனப்பான்மை

4. இலக்கணம்

மான் நிற்கிறது. சிறுவன் ஓடுகிறான்.
மான்கள் நிற்கின்றன. சிறுவர்கள் ஓடுகிறார்கள்.

இவற்றைப் படி. என்ன அறிகிறாய்?

மான் நிற்கிறது என்ற வாக்கியத்தில் மான் ஒரு மிருகத்தைக் குறிக்கிறது.

சிறுவன் ஓடுகிறான் என்ற வாக்கியத்தில் சிறுவன் ஒருவனைக் குறிக்கிறது.

மான்கள் என்ற இடத்தில் பல மான்களைக் குறிக்கிறது.

சிறுவர்கள் என்ற இடத்தில் பல சிறுவர்களைக் குறிக்கிறது. எனவே; ஒன்றைக் குறிப்பது, ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது என இருவகை உண்டு.

ஒன்றைக் குறிப்பது ஒருமை.

இரண்டு முதலாக (ஒன்றுக்கு மேற்பட்ட) பலவற்றைக் குறிப்பது பன்மை.

ஒருமை, பன்மை என்பன எண் என்று கூறப்படும்.

பயிற்சி

நாற்காலி - நாற்காலிகள் } இது போல் நான்கு உதாரணங்
ஒருமை பன்மை } கள்கொடு.

8. உல்லாசப் பிரயாணம்

திருநெல்வேலி ஜில்லாவில் சிறந்த தலமாக விளங்குவது திருச்செந்தூர். திருச்செந்தூரில் ஓர் உயர்தரக் கலாசாலை உள்ளது. அக்கலாசாலையில் முதற் பாரத்தில் படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் இருபது பேர்கள் இரண்டு ஆசிரியர்களுடன் பல இடங்களைக் காணும் பொருட்டுப் புறப்பட்டனர். அவர்கள் பல இடங்களைக் கண்டனர். ஆசிரியர்கள் ஆங்காங்குள்ள சிறப்புக்களை எல்லாம் கூறினர். அம் மாணவர்களுள் ஒருவன் மாணிக்கவாசகன். அவன் தன் பிரயாணத்தைப் பற்றித் தன் நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதம் இது.

திருச்செந்தூர்

26—3—1953.

அன்புடை அன்ப,

நலம்; நலம் அறிய அவா. நான் என் வகுப்புப் பிள்ளைகளுடன் பதினைந்து நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தேன். நான் கண்டவற்றை உனக்கு அறிவிக்க வேண்டும் என்ற விருப்புடன் இக் கடிதத்தை எழுதுகிறேன்.

இரண்டு ஆசிரியர்களும் இருபது மாணவர்களுமான நாங்கள் 10–3–53 காலை 'சண்முகவிலாசத்தில்' கூடினோம். கிழக்கே கதிரவன் ஒளி வீசித் திகழ்ந்தான் ஆறுமுகனைத் தொழுது வலம் வந்தோம். பின் புறப்

பட்டுப் புகை வண்டிநிலையத்திற்கு வந்தோம். வண்டியில் ஏறிக்கொண்டோம். நாங்கள் ஒருமணிக்குத் திருநெல்வேலியை அடைந்தோம். அங்கு உணவு உண்டோம். நெல்லையப்பர் கோயிலைச் சுற்றிப்பார்த்தோம். நான்கு மணிக்கு பஸ் ஏறித் தென்காசிக்கு வந்தோம்; அங்கு இரவு தங்கினோம். மறு நாட் காலையில் திருக்குற்றாலத்திற்குச் சென்றோம். நீர்வீழ்ச்சியைக் கண்டோம்; நீராடினோம்; குறும்பலாநாதரைத் தெரிசித்தோம். திருக்குற்றாலத்தின் இயற்கை அழகு எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆனால், உடனே புறப்பட்டுத் தென்காசிக்கு வந்து புகை வண்டியில் ஏறினோம். மாலை மதுரை வந்து சேர்ந்தோம்.

மதுரையில் இரண்டு நாட்கள் இருந்தோம். மதுரைத் தெருக்கள் சதுரமாகவும் அகலமாகவும் அழகாகவும் இருக்கின்றன. சோமசுந்தரர் ஆலயம் மிகப் பெரியதாய் வானைத் தொடும் மதில்கள் சூழ்ந்து ஊரின் நடுவில் உள்ளது. பொற்றாமரைக்குளத்தையும், மீனாட்சி தேவியையும் கண்டோம். கோயில் சிற்பங்கள் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. புதுமண்டபம், திருமலைநாயக்கன் மகால், வண்டியூர் தெப்பக்குளம் இவற்றைப் பார்த்துவிட்டு, மதுரையினின்று புறப்பட்டோம்; திருச்சிராப்பள்ளிக்கு வந்தோம். மலைக்கோட்டையில் உச்சிப்பிள்ளையார் கோயில், தாயுமானவர் ஆலயம், மண்டபம் முதலியன கண்டு மகிழ்ந்தோம். உச்சிப்பிள்ளையார் கோயிலில் நின்று பார்க்கையில் மேற்குப் பாகத்தில் திருவானைக்காவல், சிரங்கம், காவிரியாறு, பாலங்கள், சோலைகள் தோப்புக்கள், வாட்போக்கி மலை என்பன கண்களுக்கு விருந்தாகத் திகழ்ந்தன. சிரங்கம், திருவானைக்காவல்

என்னும் இரு தலங்களையும் கண்டோம். பொன்மலைக்குச் சென்று ரெயில்வேத் தொழிற் சாலையைப் பார்த்து விட்டுச் சந்திப்புநிலையத்திற்கு வந்து வண்டியேறித் தஞ்சாவூர் வந்தடைந்தோம். தஞ்சாவூரில் பிரகதீசர் ஆலயம் மிகவும் கம்பீரமாக விளங்குகிறது. கோபுரமும் நந்தியும் சுற்று மாளிகைகளும், சிவகங்கைத் தோட்டமும், அரண்மனையும், சரஸ்வதி மகாலும் கண்டு மகிழ்ந்தோம். பின்னர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று மீண்டோம்.

தஞ்சாவூரினின்றும் நேராகச் சிதம்பரம் வந்தோம். இடைவழிக்காட்சிகளை யெல்லாம் காணும் நோக்கத்தோடு பகலில் பிரயாணம் செய்தோம். 'சோழ நாடு சோறு உடைத்து' என்பதும் 'சோழநாடு எங்கும் சிவாலயங்கள் அதிகம்' என்பதும் உண்மையே. எங்கும் சோலைகள், தோப்புக்கள், வயல்கள், கோபுரங்கள் நிறைந்து காண்பார்கட்குவிருந்தென மிளிர்ந்தன. சுவாமிமலை, கும்பகோணம், மாயூரம், வைத்தீசுரன் கோயில் இவைகளைக் கடந்து சிதம்பரம் வந்தடைந்தோம். சிதம்பரம் கோயில் மிகப்பெரியது. நான்கு பெரிய கோபுரங்களை யுடையது. சிவகங்கைத் தீர்த்தமும் திருச்சுற்று மாளிகைகளும் மிகவும் அழகு வாய்ந்தன. பேரம்பலம், பொற்சபை இரண்டினையும் கண்டோம். கோவிந்த ராஜப்பெருமாள் பள்ளிகொண்டிருப்பதும், தென்திசை நோக்கி நடராஜப்பெருமான் நடனம் செய்வதும் அளவிலா இன்பம் தருவனவாகும். நடராஜப் பெருமானைப் பார்த்தவண்ணமாக இருக்கவே மனம் விரும்பியது. அங்கிருந்து புறப்பட்டுச் செங்கல்பட்டுக்கு வந்தோம்.

செங்கல்பட்டில் இறங்கிய நாங்கள் பஸ் ஏறித் திருக்கழுக்குன்றம் சென்றோம். மலைமேலுள்ள கோயிலையும்; கழுகுகள், பண்டாரம் உணவினை உண்பதையும் கண்டோம். மேலிருந்து பார்க்கும்பொழுது அடிவாரத்திலுள்ள கோயிலும், சங்குதீர்த்தமும் மிக்க இன்பமான காட்சியாக இருந்தன. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை அக்குளத்தில் சங்கு தோன்றுகிறதெனக் கூறுகின்றனர். திருக்கழுக்குன்றத்தில் பஸ்ஏறி, மாலையில் மகாபலிபுரம் வந்து சேர்ந்தோம். அந்நகர் கடற்கரையோரத்தில் அமைந்தது. பல்லவ மன்னர்களான மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் என்பார் செய்வித்த சிற்பங்களையும் கொண்டது அந் நகர். மாலையில் தலசயனக் கோயிலிற்குச் சென்று இறைவனை வணங்கினோம். அன்று பௌர்ணமிதினம்; பால்போல் வெண்ணிலவைப் பரப்பிக் கொண்டு முழுமதி வட்டமாகத் தோன்றினான். கடற்காற்று உடலுக்கு இன்பமாக இருந்தது. அன்று இரவு பிரயாண அலுப்பு நீங்க நன்றாகத் தூங்கினோம்.

மறுநாட்காலையில் காலை ஆகாரத்திற்குப் பின் தலசயனக் கோயிலுக்குப் பின் இருக்கும் மலையைக் குடைந்து செய்த மண்டபங்களையும், சிற்பங்களையும் முதலில் கண்டோம். கலங்கரை விளக்கம் காணச் சென்றோம். பழைய கலங்கரை விளக்கத்தையும், புதிதாகக் கட்டிய விளக்கையும் ஏறிக் கண்டோம். அம்மண்டபத்திலிருந்து பார்த்தபோது கிழக்கே பெருநீர்ப்பரப்பான கடல் தோன்றும். மேற்கில் தொலைவில் திருக்கழுக்குன்றமும் அம் மலையின் தொடர்ச்சியும் காணப்பட்டன. கடற்கரையிலுள்ள கோயிலுள் அரங்கநாதப் பெருமான் பள்ளிகொண்டிருக்கிறார். வடக்கே சென்

ருல் பஞ்சபாண்டவர் ரதங்கள் மிகவும் சித்திர வேலைப் பாடுகளுடன் காணப்படுகின்றன. அவையாவும் குடவரைக் கோயில்கள். இரண்டு அடுக்குகளைக் கொண்ட கோயில் ஒன்றும் இருக்கிறது. மொட்டையாக விடப் பட்ட மண்டபம் குன்றின்மேல் உள்ளது. சமண முனிவர்கள் தங்கித் தவம் செய்வதற்காக மலைச் சரிவுகளைக் குடைந்து செய்யப்பட்ட மண்டபங்கள் பல உள்ளன. மேற்கே தனித்தனியே மூன்று குடவரைக் கோயில்கள் உள்ளன. மண்டபங்களில் உள்ள சிற்பங்கள் மிக நன்ருகச் சிற்பக்கலையின் சிறப்பைக் காட்டுகின்றன. யானை, சிங்கம், குரங்கு பேன்பார்த்தல், குரங்கு தவம் செய்தல், பகீரததவம் பின்னும் பல சிற்பங்கள் மிகவும் அழகாக விளங்குகின்றன. பல்லவமன்னனுன மகேந்திரவர்மனும், அவன் மனைவியும் சிலைகளாக அமைக்கப் பட்டுள்ளனர் அந்நகரில் காணப்படும் சிற்பங்களைக் காணும் பொழுது நம் முன்னோரின் சிற்பக்கலை அறிவு புலப்படுகிறது. கடற்கரை யோரத்தில் உள்ள குன்றை அழகுபடுத்திப் பலர்க்கும் பயன்படச் செய்யவேண்டும்; சிற்பக் கலையை வளர்ப்பதற்கு அதுவே தக்க வழி என்று பல்லவ மன்னர்களுக்கு எண்ணம் தோன்றிச் செய்வித்திருப்பதை நினைத்தால், நம் முன்னோரின் மனப்பான்மை என்ன என்பது நன்கு புலனுகும். மாமல்லபுரம் என்றும், மல்லை என்றும், கடன் மல்லை என்றும் அந்நகர்க்குப் பெயர். மாமல்லன் நரசிம்மவர்மனின் பட்டப் பெயர். அவன் பெயரால் அமைந்தது அந் நகரம். பல்லவ மன்னர்க்குக் கடற்கரை நகர் மாய் அது விளங்கிற்று. மகாபலிபுரம் சென்றுகாணத் தகும் சிற்பச் சிறப்பினைத் தன்னிடத்தில் கொண்டது.

மகாபலிபுரத்தைப் பார்த்துவிட்டுப் பஸ் ஏறித் திருப்போரூர் சென்றோம். அது ஒரு தலம். ஆங்குச் சிதம்பர சுவாமிகள் மடம் இருக்கிறது. முருகனைக் காண அன்பர்கள் திரள்திரளாக வருகின்றனர். அக் கோயிலைப் பார்த்து இறைவனை வணங்கிவிட்டுப் பஸ் ஏறிச் சென்னை நகரம் வந்தடைந்தோம். சென்னையில் நான்கு நாட்கள் வரை தங்கினோம். சென்னைக் கடற் கரை மிக அழகானது. உலகில் காணப்படும் சிறந்த கடற் கரையில் இரண்டாவதாகக் கூறப்படுவது சென்னைக் கடற்கரை. துறைமுகம், உயர்நீதி மன்றம், கலங்கரை விளக்கம், பல்கலைக்கழகம், அரசாங்க அலுவல் அகம், சென்னை ராஜதானிக் கல்லூரி, லேடி வெல்லிங்டன் கல்லூரி, குவீன் மேரி கல்லூரி, வானொலி நிலையம், ஸெயின்ட் தாமஸ் மாதாகோயில் முதலியனவும் மிகவும் அழகான கட்டிடங்களும், பாதைகளும், மணற்பரப்பும் அமைந்துள்ளன. சென்னையில் தியாசபிகல் சொசைடி, ராஜா. ஸர். அண்ணாமலைச் செட்டியார் அரண்மனை, பொருட்காட்சிச் சாலை, மிருகக்காட்சிச் சாலை முதலானவற்றைக் கண்டோம். பல இடங்களையும் சுற்றிப் பார்த்தோம்.

பின், சென்னையிலிருந்து புறப்பட்டு நேராகத் திருச்செந்தூர் வந்தடைந்தோம். எங்களில் சிலர் புகைப்படமெடுக்கும் கருவியைக் கொண்டு வந்திருந்தனர். அவர் கள் அங்கு அங்குப் படங்கள் எடுத்தனர். அவையெல்லாவற்றையும் திரட்டியுள்ளோம். அவை அவைகளைப் பற்றிச் சிறிய அளவில் அறிய வேண்டிய குறிப்பும் எழுதியுள்ளோம்.

என் அருமை நண்பா, இவ்வாண்டு உல்லாசப் பிரயாணம் மிகவும் இன்பமும் கல்வியறிவு ஊட்டுவதுமாக இருந்தது. நான் அனுபவித்த இன்பத்தை உனக்கு எழுதாமல் இருக்க முடியவில்லை. என் நீண்ட கடிதத்திற்கு என்னை மன்னிக்க.

இங்ஙனம்

உன் அன்புள்ள,

தி. வே. மாணிக்கவரதன்.

விலாசம் :

திரு. கோ. வே. கனகசபாபதி,

135, சாலையம்மன் கோவில் தெரு,

சத்திய மங்கலம்.

(கோயமுத்தூர் ஜில்லா.)

1. அருஞ்சொற்களும் பொருளும்

அவா – ஆசை

நலம் – க்ஷேமம், சுகம்

விருந்து - புதுமை

சந்திப்பு நிலையம் – பல மார்க்கமாகச் செல்லும் வண்டிகள் கூடும் இடம்

குடைதல் – தோண்டுதல்

அடுக்கு – மாடி

திகழ்ந்தன – விளங்கின

மகால் – பெருமாளிகை

கரந்தை – கருந்திட்டைக்குடி என்னும் ஊர்

நடனம் – தாண்டவம், கூத்து

அலுப்பு – களைப்பு

கலங்கரை விளக்கம் – மாலுமித் தீபம்

குடவரைக் கோயில் – ஒரே கல்லில் குடைந்து செதுக்கப் பட்ட கோயில்

2. சிறுவிடை வினாக்கள்

1. மாணவர்கள் திருச்செந்தூரில் எங்குக் கூடினர்? ஏன்?
2. திருநெல்வேலியிலிருந்து எங்குச் சென்றனர்?
3. திருக்குற்றாலத்தைப்பற்றி அறிவது என்ன?
4. மதுரையில் மாணவர்கள் யாவற்றைக் கண்டனர்?
5. திருச்சியைப்பற்றி மாணவர்கள் அறிந்ததைப் பற்றி பத்து வரிகள் எழுது.
6. திருச்சியைச் சார்ந்த இருபெருந்தலங்கள் எவை?
7. தஞ்சாவூரில் காணத்தக்கன எவை?
8. தஞ்சாவூரிலிருந்து சிதம்பரம் வரும்பொழுது இடையிலுள்ள தலங்கள் எவை?
9. சோழ நாட்டைப்பற்றி இரு பழமொழிகள் எழுது.
10. சிதம்பரத்தில் காணத்தக்கன எவை?
11. திருக்கழுக் குன்றத்தைப்பற்றி அறிவன யாவை?
12. மகாபலிபுரத்தில் காணப்படுவன எவை? ஒவ்வொன்றைப்பற்றியும் குறிப்பு எழுது.
13. மகாபலிபுரம் எதனின்றும் மருவி வழங்குவது? அதற்கு அப் பெயர் வரக் காரணம் என்ன?
14. மகாபலிபுரத்தின் அமைப்பைப்பற்றி நீ அறிவன யாவை?
15. இருபெரும் பல்லவ மன்னர்கள் யாவர்?
16. சென்னையில் காணத்தக்கன யாவை?

3. கட்டுரைப் பயிற்சி

1. வெளியூரிலிருக்கும் உன் தந்தையாருக்கு நீ சென்று வந்த உல்லாசப் பிரயாணம் பற்றி ஒரு கடிதம் எழுது.

2. திருக்குற்றாலம், மதுரை, மகாபலிபுரம், காஞ்சிபுரம் இவற்றில் ஒவ்வொன்றைப்பற்றியும், நீ படித்தோ, கேட்டோ அறிந்ததை மனத்தில் கொண்டு ஒவ்வொரு கட்டுரை எழுது.

4. இலக்கணம்

1. நான் நேற்றுப் பள்ளிக்கூடம் போனேன்.
நாங்கள் நேற்றுப் பள்ளிக்கூடம் போனோம்.
யான் நேற்றுப் பந்தாடினேன்.
யாங்கள் நேற்றுப் பந்தாடினோம்.

2. நீ இன்று விளையாட வருகிறாயா?
நீங்கள் இன்று பந்தாட வருவீர்களா?
நீர் இன்று பந்தாட வருவீரா?

3. அவன் நேற்றுப் பாடம் படித்தான்.
அவர் நேற்றுப் பாடம் படித்தார்.
அவர்கள் நேற்றுப் பாடம் படித்தார்கள்.

4. அது நேற்றுப் புல் தின்றது.
அவை நேற்றுப் புல் தின்றன.

மேலே உள்ளவற்றைக் கவனியுங்கள் :—

1. முதலில் இருப்பது, தான் பேசுவது.
2. இரண்டாவது இருப்பது முன் இருப்பவனைக் கேட்பது.
3. மூன்றாவது தானும் அல்லாது, முன்பு உள்ளவனும் அல்லாது (மூன்றாமவனைக் குறிப்பது.) தூரத்திலுள்ளவனைக் குறிப்பது.
4. நான்காவது, மூன்றாவதான அஃறிணைப் பொருளைக் குறிப்பது.

இவற்றை இடம் என்பர். இடம் மூன்று. அவை :—

1. தன்னைப்பற்றிக் கூறுவது தன்மை இடம்.
2. முன்பு இருப்பவனைப் பற்றிக் கூறுவது முன்னிலை இடம்.
3. மூன்றாமிடத்திலிருப்பவனைக் குறிப்பது படர்க்கை இடம்.

தன்மை இடத்திலும், முன்னிலை இடத்திலும் திணை கூற முடியாது. ஆதலால் இருதிணையும் வரும்.

மூன்றும் இடமான படர்க்கையில் உயர்திணை, அஃறிணை குறிக்க முடியும்.

இன்னும் கவனியுங்கள். இவற்றில் ஒருமை, பன்மை, இருத்தலை அறியலாம்.

மனத்தில் கொள்ளுங்கள் :

இடப்பெயர்கள்

1. நான், யான் – தன்மை ஒருமை.
   நாம், நாங்கள் }
   யாம், யாங்கள் } – தன்மைப் பன்மை.
2. நீ – முன்னிலை ஒருமை.
   நீர், நீயிர், நீவிர், }
   நீங்கள், எல்லீர் } – முன்னிலைப் பன்மை.
3. அவன், அவள், அது – படர்க்கை ஒருமை.
   அவர், அவர்கள் }
   அவை, அவைகள் } – படர்க்கைப் பன்மை.

1. தன்மையும் முன்னிலையும் அல்லாதன படர்க்கை எனப்படும்.

2. தன்மை முன்னிலையில் உயர்திணை அஃறிணை என்பன இல்லை. படர்க்கையில் அவை உண்டு.

3. அவர், அவர்கள் ஒருவனைக் குறிக்கும் இடத்தில் மரியாதைப் பன்மை எனப்படும்.

பயிற்சி

1. இடம் எத்தனை வகைப்படும்?
2. உயர்திணை, அஃறிணை எந்த இடத்திற்கு உண்டு? எந்த இடங்களுக்கு இல்லை?
3. மரியாதைப் பன்மையாவது யாது?
4. நானும் நீயும் கந்தனைச் சந்தித்தோம். இதிலுள்ள மூவிடப் பெயர்கள் எவை?

9. பாண்டித்துரைத் தேவர்

1. முன் நாளில் தமிழகத்தில் மூன்று சங்கங்கள் தோன்றித் தமிழ்மொழியை வளர்த்தன. அவை முறையே முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பன. இச்சங்கங்களில் பல புலவர்கள் பல நூல்களைச் செய்தனர். முதற் சங்கம், இடைச்சங்கம் என்பன இருந்த இடங்களும் கடலுள் மூழ்கிவிட்டன. அவ்விரு சங்க நூல்கள் என நமக்குக் கிடைத்துள்ள நூல்களே இல்லை. இடைச்சங்க நூலாகக் கூறும் தொல்காப்பியம் ஒன்றே கிடைத்துள்ளது. கடைச்சங்க நூல்கள் பல அழிந்து போயின. கிடைத்திருப்பன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பனவே. கடைச் சங்கம் இப்பொழுது விளங்கும் மதுரையில் இருந்தது. அச் சங்கம் இருந்து 1800 ஆண்டுகளுக்குமேல் ஆகிறது.

2. பாண்டிய நாட்டின் கீழ்ப்பகுதி சேது நாடு எனப்படுவது. சேது என்னும் தலம் கீழக் கடற்கரையில் உள்ளது. அத்தலத்தையும் அதனைச் சார்ந்த பகுதியையும் சேது நாடு என்பர். சேது நாட்டை ஆண்டோர் சேதுபதிகள் எனப்படுவர். அச் சேதுபதிகளுள் பெருவள்ளலாய் விளங்கியவர் பாஸ்கர சேதுபதி. அவருடைய பெரிய தந்தையார் பொன்னுசாமித் தேவர் என்பவர் ஆவர். அவருக்கு மூன்று மனைவியர். அவருள் மூத்த மனைவியாருக்கு இரண்டு மக்கள் இருந்தனர். அவ்விருவருள் இளையவர் பாண்டித்துரை என்பார்

ஆவர். அவருக்குத் தந்தையார் இட்ட பெயர் உக்கிர பாண்டியன் என்பது. அவர் 1867-ஆம். ஆண்டு பிறந்தார்.

3. உக்கிர பாண்டியருக்கு மூன்று வயதாகும் பொழுது பொன்னுசாமித் தேவர் இறந்தார். அப்பொழுது திவானாக விளங்கிய சேஷாத்திரி ஐயங்காருடைய கண்காணிப்பில் உக்கிரபாண்டியர் வளர்ந்து வந்தார். உக்கிர பாண்டியராகிய பாண்டித்துரை இராமநாதபுரத்தில் ஆங்கிலக் கலாசாலையில் கல்வி கற்றார். அழகிரி ராஜு என்பவரிடம் முதலில் தமிழ்க் கல்வி கற்றார். பாண்டித்துரைத் தேவர் சதாவதானம் முத்துசாமி ஐயங்காரிடமும் மற்றும் பலரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சைவசமய நூல்களையும் கற்றறிந்தார். பாண்டித்துரைத் தேவருக்கு வடமொழிப் பயிற்சியும், இசைப் பயிற்சியும் உண்டு. பல துறைகளிலும் அறிவு மிக்கவராய்ப் பாண்டித்துரைத் தேவர் விளங்கினார். எக்காலத்தும் புலவர்கள் சூழ்ந்திருக்க, பாண்டித்துரைத் தேவர் தமிழாராய்ச்சி செய்வதில் தம் காலத்தை இன்பமாகக் கழித்தார். அவர் பிரசங்கம் செய்வதிலும் பேராற்றல் படைத்தவர். அவர் தமிழக மெங்கும் சென்று அரிய சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

4. ஒரு முறை அவர் மதுரைக்கு வந்தார். அவருக்குக் கம்பராமாயணம், திருக்குறள் போன்ற நூல்கள் வேண்டியிருந்தன. அவர் மதுரையில் தமிழ் நிலை குன்றியதே என, பெரிதும் வருந்தினார். தமிழ் வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும் என்று அவர்

மனத்தில் உறுதி கொண்டார். அதற்கேற்ற சமயமும் வந்தது. சென்னை மாகாண அரசியல் மாநாடு மதுரையில் கூடிற்று. அந்த மாநாட்டிற்குப் பாண்டித்துரைத் தேவர் வரவேற்புக் குழுத் தலைவர் ஆவர். அச்சமயத்தைக் கைநழுவவிடாது அரசியல் கூட்டத்தின் முடிவில் தமிழ்வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றி மிக்க அழுத்தம் திருத்தமாகப் பேசினர். மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிலைபெறச் செய்யவேண்டும் என்ற அவசியத்தையும் விளக்கிக் காட்டினர்.

5. பல அறிஞர்கள் தேவரவர்கள் கருத்தைக் களிப்புடன் வரவேற்றார்கள். 1091-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி, சேதுபதி உயர்தரக் கலாசாலையில் **நான்காம் தமிழ்ச் சங்கம்** நிறுவப்பட்டது. அக்கூட்டத்திற்குப் புலவர் பெருமக்கள் பல்லோர் வந்திருந்தனர். தமிழ்ச் சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க் கலாசாலை ஒன்று அமைக்கப்பட்டது. நூலாராய்ச்சிச் சாலை என்ற பகுதி ஏற்பட்டது. சேது வேந்தரான பாஸ்கர சேதுபதி திரண்ட பொருளுதவி புரிந்ததும் அன்றி ஸ்ரீ ரா. ராகவய்யங்கார் என்னும் மாபெரும் சமஸ்தானப் புலவரை ஆராய்ச்சித்துறைத் தலைவராக அளித்தார். பாண்டித்துரைத் தேவர் மதுரையிலிருந்த பெரிய மாளிகையையே தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தார். பலர் பல நூல் சுவடிகளைக் கொடுத்துதவினர். 'செந்தமிழ்' என்ற மாதப் பத்திரிகை தமிழ்ச் சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளியிடப்பட்டது. அப்பத்திரிகையில் பழைய நூல்களும் சிறந்த கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் புத்தகங்களைப் பதிப்பிக்கவும், பத்திரிகையைப் பிர

ச்சிக்கவும் வேண்டிச் சங்கத்திற்கு என அச்சகம் ஒன்றும் அமைக்கப்பட்டது. மாணவர்கட்கு உண்டியும், உறையுளும் ஆடையும் அளித்துப் பிரவேச பண்டிதம், பால பண்டிதம்,பண்டிதம்என்ற முத்திறப் பரீட்சைகளுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது.

6. பாண்டித்துரைத் தேவர் பன்னூற்றிரட்டு, சைவ மஞ்சரி முதலான நூல்களைத் தாமே திரட்டிப் பதிப்பித்துள்ளார். டாக்டர் உ. வே. சாமிநாத அய்யருக்குப் பல நூல்களைப் பதிப்பிக்குமாறு பொருளுதவி செய்துள்ளார். நூற்பதிப்புக்காகத் தேவர் அவர்கள் மதுரை இராமசாமிப் பிள்ளைக்கும், சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளைக்கும் பொருளுதவி புரிந்துள்ளார். பாண்டித்துரைதேவர், தமிழ் நூல்கள் தவறு இல்லாத முறையில் வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்துடையவர். மதுரையில் ஸ்காட் என்னும் ஆங்கிலேயர் திருக்குறளைத் தம் மனம்போன போக்கின்படி திருத்தி வெளியிட்டார். அதனை அறிந்த பாண்டித்துரைத் தேவர் அந்த ஆங்கிலேயரிடமுள்ள புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் பிறர் கையில் சென்றடையாதபடி தீயிலிட்டு எரித்தார். இதனால் தேவர் தமிழில் எவ்வாறு நூல்கள் வெளிவர வேண்டும் என எண்ணினர் என்பதை அறியலாம்.

7. பாண்டித்துரைத் தேவர் அளவிலாத் தேசப் பற்றுடையவர். தூத்துக்குடியில் இருந்த திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 'சுதேசக் கப்பற் கம்பெனி' ஒன்றை அமைத்தற்கு முயற்சி செய்த பொழுது, பாண்டித்துரைத் தேவர் இலட்சம் ரூபாய் கொடுத்துதவினர். பல நண்பர்களையும்வற்புறுத்தி உதவி புரியும்படி

தேவரவர்கள் செய்தார். இவ்வாறு நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்திற்கு முதல்வராக விளங்கிய பாண்டித்துரைத் தேவர் தம் நாற்பத்து நான்காம் வயதில் 1911-ஆம் வருடம் இப்பூவுலக வாழ்க்கையை விடுத்துப் பொன்னுலக வாழ்க்கையை மருவினார்.

8. பாண்டித்துரைத் தேவர் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த பணி பெரும்பணி. அவரே தமிழ்த் தொண்டு செய்வோருக்கு வழி காட்டி யாவர். அவரைப் பின் பற்றியே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தமிழவேள் தா. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் தாபித்தார் கள். கரந்தைத் தமிழ்ச் சங்கமும், மதுரைத் தமிழ்ச் சங்கமும் தமிழ் மொழிக்கு அருந்தொண்டு ஆற்றி வருகின்றன. அவற்றைக் கண்ட தமிழக மக்கள் தமிழகத்தில் பலவிடங்களில் தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழ் மொழியைப் பேணி வருகின்றனர்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

சங்கம் – (புலவர்) கூட்டம்
பெருவள்ளல் – சிறந்த கொடையாளி
கண்காணிப்பு – மேற்பார்வை
சதாவதானம் – நூறு பேர்கள் கேட்கும் வினாக்களுக்கு, நினைவு கொண்டு குறித்த நேரத்தில் விடை கூறுவது.
உண்டி – உணவு
உறையுள் – வசிக்கும் இடம்
பூவுலகு – பூமி
மருவினார் – அடைந்தார்
சொற்பொழிவு – பிரசங்கம்
சூழ்ந்திருக்க – சுற்றியிருக்க
பேராற்றல் – மிக்க திறமை
மாநாடு – பெருங்கூட்டம்
அழுத்தந்திருத்தமாக – உறுதியாக உணர
முத்திறம் – மூன்றுவகை
பொன்னுலகு – தேவலோகம்
தாபித்தல் – நிலைபெறச் செய்தல்

2. சிறு விடைவினுக்கள்

1. முன்னுளில் தமிழை வளர்த்தன எவை ?
2. எவை கடலுள் மூழ்கிவிட்டன ?
3. இடைச்சங்க நூல் எது ?
4. கிடைத்துள்ள கடைச்சங்க நூல்கள் எவை ?
5. கடைச்சங்கம் எத்தனை ஆண்டுகளுக்கு முன் இருந்தது?
6. சேது என்பது யாது ? எங்குள்ளது ?
7. சேதுபதிகள் என்பார் யாவர் ?
8. பாண்டித்துரைத் தேவரின் தந்தை யார் ?
9. பாண்டித்துரையின் இயற்பெயர் யாது ?
10. பாண்டித்துரையின் கல்விப் பயிற்சியைப்பற்றி எழுது
11. 'தமிழ் வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும்' என்று அவர் உறுதிகொள்ளக் காரணம் என்ன ?
12. அவர் எந்தச் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடவில்லை ?
13. தமிழ்ச்சங்க அமைப்பைப்பற்றி எழுது.
14. பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கத்திற்குச் செய்தவை யாவை ?
15. தமிழ்ச் சங்கத்திலுள்ள மூன்று பரீட்சைகள் யாவை ?
16. பாண்டித்துரைத் தேவர் யாவர்க்கு எதன்பொருட்டு உதவி செய்துள்ளார் ?
17. தமிழர் கையில் தவருன நூல்கள் அடைதலாகாது என்று பாண்டித்துரைத் தேவர் எண்ணினுர் என்பதை எதனுல் நீ அறிகிருய் ?
18. பாண்டித்துரைத் தேவர் நாட்டு முன்னேற்றத்தையும் நாடுபவர் என்பதனை எதனுல் அறியலாம் ?
19. பாண்டித்துரைத் தேவர் எந்த ஆண்டில் இறந்தார் ?
20. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தாபித்தவர் யார் ?

3. கட்டுரைப் பயிற்சி

1. 'முச்சங்கம்' பற்றிப் பத்து வரிகள் எழுது.
2. 'சேதுபதி' ——— பற்றி மூன்று வரிகள் எழுது.

3. 'நான்காம் தமிழ்ச்சங்கம்' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுது.
4. 'தமிழை வளர்க்கும் முறை' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுது.

மூன்று + சங்கம் = முச்சங்கம்
சைவம் + சமயம் = சைவசமயம்
சொல் + பொழிவு = சொற்பொழிவு
நூல் + பதிப்பு = நூற்பதிப்பு
சென்று + அடையாதபடி = சென்றடையாதபடி

4. இலக்கணம்

கந்தன் முருகனை அடித்தான்.

இவ் வாக்கியத்தில் கந்தன், முருகன் என்பன பெயர்ச் சொற்கள். ஆயினும் கந்தன் முருகனை அடித்தான் என்ற பொழுது, முருகன் என்பது முருகனை என்று பொருள் வேறு பட்டது. எனவே இது வேற்றுமைப்பட்டது. ஆதலால், பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது **வேற்றுமை** எனப்படும்.

தமிழில் வேற்றுமைகள் எட்டு. அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பன.

வேற்றுமையைக் குறிக்கப் பெயர்ச் சொல்லின் ஈற்றில் சேர்த்து எழுதப்படுவது **வேற்றுமை உருபு** எனப்படும்.

பயிற்சி

1. வேற்றுமையாவது யாது?
2. வேற்றுமை உருபு என்று எதற்குப் பெயர்?

10. பர்மாவும் பர்மியரும்

1. நாம் இந்தியாவில் வசிக்கிறோம். உலகில் இந்தியாவைப்போலப் பல நாடுகள் உள்ளன. அங்கும் மக்கள் வசிக்கின்றனர். போக்குவரவுக்குரிய சாதனங்களும் புத்தகங்களும் கிடைக்கும் இக்காலத்தில், நாம் நூல்களின்வழியாகப் படித்தும், இயலுமானால் நேரிற்சென்று பார்த்தும் நம் அறிவைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். இந்தியாவின் கீழ்ப்பகுதியிலிருப்பது பர்மா நாடு. இன்றும், நம் நாட்டினர் பலர் பர்மாவுக்குச் செல்கிறார்கள்; அங்கு வசிக்கிறார்கள். ஆதலால் நாமும்பர்மாவைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டும் அல்லவா?

2. இந்தியாவையும் பர்மாவையும் வேறு பிரிப்பன மலைத் தொடர்களும், வங்காளக் குடாக்கடலும் ஆகும். பர்மா நீர்வளம், நிலவளம் மிகப்பொருந்தியது. வடக்கே தொடங்கும் மலைத்தொடர்கள் தென்முனை வரையில் அமைந்துள்ளன. ஆதலால் பள்ளத்தாக்குகள் மிகவும் உள்ளன. அவைகளின் வழியாக ஐராவதி, சிண்ட்விங், சால்வீன் என்ற பேராறுகள் ஓடுகின்றன. பர்மா, மாண்டலே என்பதைத் தலைநகராக் கொண்ட மேல் பர்மாவும், ரங்கூனைத் தலைநகராகக் கொண்ட கீழ் பர்மாவுமாக இரண்டாகப் பிரிந்துள்ளது. பர்மாவைத் தமிழக மன்னர்களான சோழர்கள் ஒரு காலத்தில் ஆண்டனர் என்று சரித்திரம் கூறுகிறது. மாய்மோ என்பது அழகு மிகுந்த கோடை வாசஸ்தலமாகப் பர்மாவுக்கு விளங்குகிறது.

3. பர்மாவில் வாழ்பவர்கள் பர்மியர்; அழகு மிகுந்த அவர்கள் அவர்கள் நீண்ட கூந்தலை உடையவர்கள். அவர்களில் செல்வர்கள் பட்டுடைகளையும், ஏழைகள் பருத்தியுடைகளையும் அணிவார்கள். அவர்கள் அணியும் ஆடைக்கு லுங்கி என்று பெயர். அவ்வாடையின் இரு தலைப்புக்களும் சேர்த்துத் தைக்கப்பட்டிருக்கும். அரையாடை ஒரு நிறமாகவும், மேலாடை ஒரு நிறமாகவும் இருக்கும். அவர்கள் அழகிய அணிகளும் சில அணிவது உண்டு. பர்மியர் பெரும்பாலும் மூங்கிலாலான வீடுகளில் வசிப்பார்கள். அவர்கள் வீடுகள் பரண் மேல் அமைந்தனபோல் இருக்கும்.

4. பர்மாவில் தேக்கு மரங்கள் அதிகம். அவற்றை வெட்டி யானைகளைக் கொண்டு ஆறுகளில் இடுமாறு செய்வார்கள். வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படும் அவை சேரவேண்டிய நகரத்துறைகளில் இழுத்துக் கொள்ளப்படும். பர்மாவில் ஏராளமான நெல்லும் பயிராகிறது; ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. பர்மாவில் மண்ணெண்ணெய்க் கிணறுகளிலிருந்து மண்ணெண்ணெய் எடுத்தனுப்புகிறார்கள். கரும்பு, புகையிலை, ரப்பர், தேயிலை முதலியனவும் பர்மாவில் பயிராக்கப்படுகின்றன.

5. பர்மியர் குள்ளமான வடிவமும், வெண்மை கலந்த மஞ்சள் நிறமுமுடையவர்கள். ஆண்கள் மிருகங்களின் வடிவத்தைப் பச்சைகுத்திக் கொள்வார்கள். அவர்கள், தம்மைத் தெய்வப் பிறவி என்று எண்ணுவது நமக்கு வியப்பாகத் தோன்றுகிறது. உலோபம், பேராசை, பொறாமை முதலிய கொடிய தீக்குணங்கள்

அற்றவர்கள் ஆயினும் அவர்கள் செருக்கும், சினமும் உடையவர்கள். அவர்கள், இன்ப துன்பங்களை ஒப்பக் கருதும் இயல்பு உடையவர்கள். குறைந்த ஊதியத் திற்கு வேலை செய்யார். விதியில் ஊன்றிய நம்பிக்கை யுடையவர்கள். ஆதலால், நாளைக்கு என் செய்வது? என்று கவலைப்படுவதில்லை; பொருளைச் சேமித்து வைக்கும் வழக்கமும் இல்லை.

6. பர்மியரில் ஆண்கள் சோம்பேறிகள்; பெண் களே யாவற்றையும் கவனித்துக் கொள்கின்றனர். வாணிகம் பெண்களிடமே உள்ளது. பெண்களுக்கு அதிகாரமும் சுதந்திரமும் பர்மாவில் உண்டு. பர்மியர் தம் பொருளை அறத்திற்கும், மதச் சடங்கிற்கும், விருந் திற்கும் செலவிடுவர். விளையாட்டில் மிக விருப்ப முடைய பர்மியர், கோழிச் சண்டை, ஆட்டுச் சண்டை, மல்யுத்தம், குதிரைப் பந்தயம் முதலியவற்றிற்குச் செலவு செய்வர். செல்வர்கள் நாடகச் செலவினை ஏற்றுக்கொள்ள, ஏழைகள் நாடகங்கள் கண்டு களிப் பார்கள். அவர்கள் நாடகங்கள் பெரும்பாலும் மத சம் பந்தமானவை.

7. பெண்ணிற்குப் பதினெட்டுவயதானபிறகு அவள் தனக்கு ஏற்ற ஆடவனை மணந்து கொள்வாள். கண வனும் மனைவியும் கலந்து ஆலோசித்தே எக்காரியத்தை யும் அவர்கள் செய்வார்கள். இல்லறத்தை நடத்துவ தில் பர்மியப் பெண்கள் திறமை வாய்ந்தவர்கள்! கண வன் இறந்தால் அவர்கள் மறுமணம் செய்து கொள்ள லாம். விவாகரத்தும் உண்டு. அவ்வாறு, கணவனும் மனைவியும் பிரியும் காலத்தில் வீட்டிலுள்ள பொருள்

களைச் சமபாகமாக்கி எடுத்துக் கொள்வார்கள். ஆண் குழந்தைகளைக் கணவனும் பெண் குழந்தைகளை மனைவி யும் ஏற்றுக் காப்பாற்றுவார்கள்.

8. பர்மியருக்கு அரிசியே முக்கிய உணவுப் பொருள். அவர்களுக்கு அழகுள்ள பொருள்களிடத்தில் ஆசை அதிகம். பம்பாய் மாகாணத்தை ஒத்த பர்மாவிலிருந்து நெல், தேக்கு, மண்ணெண்ணெய், பொன் வெள்ளி, இரும்பு, தகரம், செம்பு, ஈயம், வைரம் என்பன பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் பர்மா செல்வம் கொழிக்கும் நாடு ஆக விளங்குகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இந்தியாவைப் போலிருந்த பர்மா, இன்று இந்தியாவைப்போல் சுதந்தர நாடாக விளங்குகிறது.

1. அருஞ்சொற்களும் பொருளும்

சாதனம் – கருவி	செருக்கு – கர்வம்
இயலுமானால் – கூடுமானால்	சினம் – கோபம்
கோடை – வெயில் காலம்	ஊன்றிய – வலிமையான
வியப்பு – ஆச்சரியம்	சேமித்து – மிச்சப்படுத்தி

2. சிறு விடை வினாக்கள்

1. நம் அறிவைப் பெருக்கிக்கொள்ள இக்காலத்தில் அமைந்துள்ள வசதிகள் யாவை ?
2. பர்மாவின் பிரிவும் அவற்றின் தலைநகரங்களும் எவை?
3. பர்மாவுக்குக் கோடை வாசஸ்தலம் எது ?
4. பர்மியரைப்பற்றி நீ அறிவன யாவை ?

5. பர்மாவில் பயிராவன எவை ?
6. பர்மியர் கொள்கைகளாக நீ அறிவன யாவை?
7. பர்மியப் பெண்களைப்பற்றி அறிவன யாவை?
8. பர்மா செல்வம் கொழிக்கும் நாடு என்பதை விளக்கு.

3. கட்டுரைப் பயிற்சி

1. 'பர்மாவின் செல்வ நிலை' - என்பது பற்றி எழுது.

2. 'பர்மியரின் இயல்பும் வாழ்க்கையும்' என்பது பற்றிக் கட்டுரை எழுது.

3. நூல் நிலையத்திலுள்ள புத்தகங்களிலிருந்து படித்தோ, பிறர் சொல்லக் கேட்டறிந்தோ கீழ்வருவனவற்றைப் பற்றிக் கட்டுரை வரையப் பயின்று கொள்.

1. இலங்கையும் இலங்கையரும்.
2. காஷ்மீர்.
3. திபேத்தும். திபேத்தியரும்.
4. ஜப்பானும், ஜப்பானியரும்.
5. சீனவும், சீனரும்
6. பிற நாடுகளைப்பற்றியும் பிறநாட்டு மக்களை பற்றியும் அறிவதனல் உண்டாகும் நன்மைகள் யாவை?

4. இலக்கணம்

1. நேரு நேற்றுப் பேசினர்.
2. நேருவை நான் பார்த்தேன்.
3. நேருவால் நான் அறிந்தவை பல.
4. நேருவுக்கு மாலைகள் அணிவித்தனர்.
5. நேருவில் சிறந்தவர் யாவர் என எல்லோரும் வியந்தனர்.
6. நேருவினது தோற்றமே ஊக்க மூட்டியது.
7. நேருவினிடம் செல்வேன் என்றேன் நான்.
8. நேருவே வருக என யாவரும் கூவினர்.

மேலே கூறிய வாக்கியங்களில் 'கேரு' என்ற சொல் வாக்கியம் தோறும் பொருள் வேறு பாட்டுக்கு வருதலை அறிக.

வேற்றுமை :—

யாதொரு திரிபும் இல்லாதது முதல் வேற்றுமை.

இரண்டாமைக்கு உருபு -ஐ.

மூன்றும் வேற்றுமை உருபு - ஆல், ஆன், ஒடு, ஓடு உடன், கொண்டு.

நான்காம் வேற்றுமை உருபு - கு, ஆக, பொருட்டு, நிமித்தம்.

ஐந்தாம் வேற்றுமை உருபு - இல், இன், இருந்து, நின்று

ஆறும் வேற்றுமை உருபு - அது, உடைய.

ஏழாம் வேற்றுமை உருபு - இல், இடம், கண்.

எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை.

எட்டாம் வேற்றுமை விளித்தல் (கூப்பிடுதல்) பொருளில் வரும்.

பயிற்சி.

1. வேற்றுமை உருபுகள் யாவை?
2. மூன்றும் வேற்றுமை உருபுகள் யாவை?
3. கந்தன் இப்பெயரை அமைத்து எட்டு வேற்றுமைகளையும் ஏற்றி எழுதிக் காட்டு.

11. அறிஞர் சண்முகஞ் செட்டியார்

1. தமிழகத்தின் பெருமைகளில் ஒன்று அறிவிற் சிறந்த சான்றோர்களை ஈன்றளிப்பது. தமிழகம் புலமையில் மிக்காரையும் தெய்வத் திருவருளில் மிக்காரையும், கணிதத்தில் மிக்காரையும், ஓவியம், சிற்பம் இசை என்னும் நுண்ணறிவில் மிக்காரையும் ஈன்றளித்தது; வீயாப் புகழ்படைத்தது. வீரம், கொடைப்பண்பு, என்பவற்றில் மிக்காரை ஈன்றளித்ததும் இத்தமிழகமே. அத்தகைய தமிழகத்தில் தோன்றி, தம் நாட்டிலும் பிற நாட்டிலும் பேரும் புகழும் பெற்ற பெரியார் திருவாளர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஆவர். அவரை ஆர். கே. எஸ். என்று கூறினாலே தமிழ் நாட்டார் நன்கு அறிவர்.

2. செல்வமும் சிறப்பும் வாய்ந்த குடியில் பிறந்தவர் ஆர். கே. எஸ். அவர் 1892-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் பிறந்தார். தந்தையார் கந்தசாமிச் செட்டியார். தாயார் சீரங்கம்மாள் என்னும் பெயருடையார். அவர் இளமையில் தந்தையை இழந்தமையால் பாட்டனாரால் வளர்க்கப்பட்டார். அவர் முதலில் கோயம்புத்தூரிலுள்ள 'லண்டன் மிஷன் ஹைஸ்கூலில்' கல்வி கற்றார். அதனை இக்காலத்தில் 'யூனியன் ஹைஸ்கூல்' என்பர். பின்னர், அவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பின்னர் சட்டக் கல்லூரியில் படித்துப் பட்டத்தையும் பெற்றார். கல்லூரியில் படிக்

கும் காலத்திலேயே அவருக்கு அரசியல் அறிவு ஏற்பட்டது. பேச்சுத் திறனையும் அவர் பெற்றிருந்தார். அவர் கோயம்புத்தூரில் வழக்கறிஞர் தொழிலாற்றிப் பெரும் பொருளும் திரட்டினர்.

3. ஆர். கே. எஸ். 1920–ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலுக்கு நின்றார். நீலகிரி மாவட்டத் தொகுதியில் வலிமைமிக்க பெல்லி கௌடர் என்பாரை எதிர்த்து நின்று, அதிக வாக்குகளுடன் வெற்றிபெற்றார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தெட்டு. அதே சமயத்தில் கோயம்புத்தூர் நகரசபை உறுப்பினராகவும் இருந்தார்; துணைத் தலைவராகவும் ஆனார். சென்னைச் சட்டசபை அங்கத்தினராக இருந்தபொழுது, கவர்னர் வெல்லிங்டன் பிரபு அவரை மிகவும் பாராட்டினர். ஆர். கே. எஸ். கல்விச் சீர்திருத்தக் கமிட்டி ஒன்றிலும், முக்கியப் பொறுப்பு ஏற்றார். 1932 ல் ஆர். கே. எஸ். மத்திய சட்டசபை அங்கத்தினரானார். 1934 ஆம் ஆண்டு வரை இருந்தார். அக்காலத்தில் தோன்றிய சுயராஜ்யக் கட்சியின் கொறடா (Whip) ஆகவும் இருந்து ஆர். கே. எஸ். பணியாற்றினர். அக்கட்சியின் தலைவரும் ஜவஹர்லால் நேருவின் தந்தையுமான மோதிலால் நேருவின் பாராட்டைப் பெற்றார்.

4. ஆர். கே. எஸ். எப்போதும் பண்டித மோதிலால் நேரு, பண்டித மதனமோகன மாளவியா, லாலா லஜபதி ராய், வித்தல்பாய் படேல், வல்லபாய் படேல் எஸ். சீநிவாச அய்யங்கார் முதலான அரசியல் மணிகளுடன் நெருங்கிப் பழகிவந்தார். அன்னிபெஸண்டு அம்மையார், ஆனரபிள் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி,

திரு அ. ரங்கநாத முதலியார் என்பாருடன் ஆர். கே. எஸ். நம்தேசப்பிரதிநிதிக் குழுவில் ஒருவராக இங்கிலாந்திற்குச் சென்றார். அவர் இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்து அரிய சொற்பொழிவுகளை ஆற்றினார். அச்சமயம் அவர் ஐரோப்பாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவருக்குத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் எம்ப்ளாயர்ஸ் டெலிகேஷனுக்கு ஆலோசகராக ஜினிவாவுக்குச் செல்லவேண்டியதாயிற்று. 1932 ல் கனடா தேசத்தில் ஒட்டாவா நகரில் நடந்த பொருளாதார மகாநாட்டிற்கு ஆர். கே. எஸ். இந்தியாவின் சார்பில் மத்திய சட்டசபைப் பிரதிநிதியாகச் சென்றார்.

5. ஆர். கே. எஸ். 1935-ஆம் ஆண்டு கொச்சி திவானாக அமர்ந்தார். அவர் திவானாக ஆறு ஆண்டுகள் வேலை பார்த்தார். அவர் அந்தச் சமஸ்தானத்திற்குச் செய்துள்ள தொண்டு மிகவும் போற்றற்பாலது. அவர் பல சீர்திருத்தங்களைச் செய்தார். ஆர். கே. எஸ். கொச்சித் துறைமுகப் பணியில் ஈடுபட்டார். கொச்சித்துறைமுகம் முழு உருப்பெற்றது. அதனால் கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களுக்கு நிரந்தரமான ஒழுங்காகக் கிடைக்கும் வருவாய் ஏற்பட்டது. ஆர். கே. எஸ். ஈழவர்களின் குறைகளைக் கவனித்துப் போக்கினார். ஈழவர் தாழ்ந்த வகுப்பினர். 'கொச்சின் டெக்ஸ்டைல்ஸ்' என்ற உயரிய நெசவுத் தொழிற்சாலை அவர் ஆலோசனையால் நிறுவப்பட்டது. அவருடைய முயற்சியின் பயனாக எர்ணாகுளம், திருச்சூர் என்னும் நகரங்களை அவர் அழகுபடுத்தினார். எர்ணாகுளம் 'கீழ்த்திசைவெனிஸ்' என்னும் புகழைப்பெற்றது.

6. ஆர். கே. எஸ். 1941-இல் அமெரிக்கா விற்குச் சென்றார். 1944-இல் 'பிரட்டன் உட்ஸ்' நகரில் நடந்த சர்வதேச நாணய மாநாட்டிற்குச் சென்றார். 'இந்தியன் டாரிப் போர்டு' என்னும் ஸ்தாபனத்திற்கு ஆர்.கே.எஸ். தலைவரானார். 1947-இல் இந்தியா சுதந்தரம் பெற்றது. சுதந்தர சர்க்காரின் நிதி மந்திரியாக ஆர். கே. எஸ். நியமிக்கப் பட்டார். அக்காலத்தில் அவர் செய்த தொண்டுகள் போற்றற்குரியன. 1951-ல் ஆர். கே. எஸ். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஆனார். அவருக்குத் தமிழ் மொழியிலும் இசையிலும் மிகுந்த பற்று உண்டு. அவர் தமிழ் நூல்களைச் சுவைத்துக் கற்றார். சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தை எளிய உரை எழுதி வெளியிட்டார். திருக்குறள் அவருக்கு மிகவும் உகந்த நூலாக விளங்கியது.

7. தமிழ் வளர்ச்சிக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவர் சண்முகனாரே. அதற்குச் சர்க்கார் மூன்று லக்ஷரூபாய் அளிக்க முன் வந்தது, ஆர். கே. எஸ். அவர்கள் முயற்சியாலேதான். 1950-ஆம் ஆண்டு கோவையில் நடந்த தமிழ் விழாவின் வெற்றிக்குக் காரணம் ஆர். கே. எஸ். 1943-ஆம் ஆண்டில் ராஜா சர். அண்ணாமலைச்செட்டியாரவர்கள், ஆர். கே. எஸ். அவர்களில் துணை கொண்டு தமிழிசைச் சங்கம் நிறுவித் தமிழிசை மாநாடு நடத்தினார்கள்.

8. சண்முகம் செட்டியார் பல அரிய நற்குணங்கள் வாய்ந்தவர். நேர்மையும் செயல் ஆற்றும் திறமும் படைத்திருந்தார். விவாதத்திறமை அவரிடம் மிகுந்திருந்தது. நகைச்சுவைபடப் பேசுந்திறனும் அவரிடம்

உண்டு. சண்முகனர் மெய்ம்மையில் பற்றுதல் கொண்டிருந்தார். 'தினந்தோறும் அரைமணி நேரம் நூற்கிறதாக வாக்குறுதி கொடுங்கள்' என்று காந்தியடிகள் அவரைக் கேட்டபோது, சண்முகனர் 'அது என்னல் முடியாத காரியம்,' என்று உண்மையை மொழிந்தார். அதனைக் கேட்ட காந்தியடிகள் அவரது உண்மைக்கு மகிழ்ந்தார். சண்முகனருக்குத் தமிழ்ப் பற்று மிகவும் அதிகம். தமிழில் பேசுவதிலும் சொல்வன்மை பெற்றவர் சண்முகனர். திரு ஆர். கே. எஸ். அவர்களின் மாளிகையில் 'ஹவார்டன் நூல் நிலயம்' என்பது மிக்க சிறப்புடையது. அதனல் அவருக்குக் கல்வியில் எவ்வளவு விருப்பு உண்டு என்பதை அறியலாம் அன்ருே! சண்முகனர் இரக்கமும் ஈகையும் உடையவர். சண்முகனர் சைவசமயப் பற்றுடையவர். அவர் அமெரிக்கா சென்றபொழுது திருவாசகமும் திருமுறைகளும் அவருக்குத் துணையாக இருந்தன. பல நற்குணங்களும் வாய்ந்தவரான ஆர். கே. எஸ். 1953-ஆம் ஆண்டு, மே மாதம் 5-ம் தேதி இம்மண்ணுலக வாழ்வை ஒருவிப் பொன்னுலக வாழ்வில் பொருந்தினர். அவர் புகழ் வாழ்வதாக:

1. அருஞ்சொற்களும் பொருளும்

சான்ருேர் – மேலோர்
கணிதம் – கணக்கு
நுண்ணறிவு – நுட்பஅறிவு
வியா – அமியா
கொடைப்பண்பு – கொடைக் குணம்
பணி – வேலை
வழக்கறிஞர் – வக்கீல்
உறுப்பினர் – அங்கத்தினர்
பாராட்டு – புகழப்படுதல்
பிரதிநிதி – ஒருவர்க்குப்பதிலாகச் செல்பவர்
நிரந்தரம் – எப்பொழுதும்
ஸ்தாபனம் – அமைப்பு

நிறுவப்பட்டது-அமைக்கப் பட்டது
உகந்த - விரும்பிய
பற்றுதல் - அன்பு
நிதி - செல்வம்
ஒருவி - நீக்கி

2. சிறுவிடை வினாக்கள்

1. தமிழகத்தின் சிறப்பு என்ன ?
2. சண்முகம் செட்டியாரின் இளமைப் பருவமும் கல்வியும் பற்றி எழுது.
3. சண்முகம் செட்டியார் யாருடைய பாராட்டைப் பெற்றார் ?
4. சண்முகம் செட்டியார் யாவருடன் நெருங்கிப் பழகினார் ?
5. சண்முகம் செட்டியாரின் சுற்றுப்பிரயாணம் பற்றி எழுதுக.
6. சண்முகம் செட்டியார் கொச்சி சமஸ்தானத்தில் திவானாக இருந்து செய்த நன்மைகள் யாவை ?
7. சண்முகம் செட்டியார்க்குத் தமிழ்ப்பற்று மிகுதியும் உண்டு என்பதை விளக்கு.
8. தமிழ் மொழிக்கும், இசைக்கும் சண்முகனார் செய்த தொண்டுகள் யாவை ? விளக்கு.
9. சண்முகம் செட்டியாரின் உண்மையைஎவ்வாறு காந்தி கண்டு மகிழ்ந்தார் ?
10. சண்முகம் செட்டியார் அமெரிக்கா சென்றபொழுது எப் புத்தகங்களை உடன் கொண்டு சென்றார் ?

3. கட்டுரைப் பயிற்சி

1. 'சண்முகம் செட்டியாரும் அரசியல் பணியும்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

2. 'சண்முகம் செட்டியாரின் தமிழ்ப்பற்றும் இசைத் தொண்டும்' என்பதுபற்றிக் கட்டுரை எழுது.

4. இலக்கணம்

கந்தன் வந்தான்.
கந்தன் வந்து கொடுத்தான்.
வந்த கந்தன் கொடுத்தான்.

மேலே கூறப்பட்டுள்ள தடித்த எழுத்துள்ள மூன்று சொற்களைக் கவனி.

வந்தான் – தொழில் முடிந்தது.

வந்து – தொழில் முடியவில்லை. 'கொடுத்தான்' என்பதைத் தழுவுகிறது.

வந்த – என்பது தொழில் முடியாமல் கந்தன் என்ற பெயரைத் தழுவுகிறது.

வினை என்றாலும் தொழில் என்றாலும் ஒன்றே. வினை முடிந்திருந்தால் வினைமுற்று எனப்படும். வினை முடியாமல் மற்றொரு வினை முற்றைத் தழுவினால் வினை எச்சம் எனப்படும். வினை முடியாமல் மற்றொரு பெயர்ச்சொல்லைத் தழுவினால் பெயரெச்சம் எனப்படும்.

பயிற்சி

மாடு புல் தின்றது.
மாணிக்கம் புத்தகம் படித்தான்.
படித்த பையன் புகழப்பட்டான்.
படித்த பையன் வந்து நின்று பணிந்தான்.
நான் சென்று கண்ட கோயில் இது.

மேற்கண்ட வாக்கியங்களிலுள்ள வினைமுற்று, வினை எச்சம், பெயரெச்சம் என்பவற்றை எடுத்து எழுது.

12. தெனாலிராமன்

1. சிறுவர்களுக்கு வேடிக்கையான கதைகளைக் கேட்பதில் விருப்பம் அல்லவா? தாத்தாவை வேடிக்கையான கதை சொல்லுங்கள் என்ற உடனே அவர், தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை என்பவற்றைச் சொல்லத் தொடங்கிவிடுவார். இவ் விருவரைப் பற்றிக் கூறும் கதைகளில் வேடிக்கையும், விநோதமும், பரிகாசமும், நகைச் சுவையும் நிறைந்திருக்கும். தெனாலிராமன் செய்யும் கோமாளித்தனத்தைக் கேட்கும் சிறுவர்கள் 'கொல்' என்று சிரிப்பார்கள் அல்லவா? அந்தத் தெனாலிராமன் யார்? அவன் வரலாறு யாது என்று அறிவோம்.

2. தெலுங்கு நாட்டில் உள்ள பல ஜில்லாக்களுள் கிருஷ்ணா ஜில்லாவும் ஒன்று. அந்த ஜில்லாவில் கிருஷ்ணா நதி ஓடிப், பல கால்களாய்ப் பாய்ந்து வளஞ் செய்வதால், அந்த நதியின் பெயரால் அந்த ஜில்லா அழைக்கப்பட்டது. அந்த ஜில்லாவில் கர்லபாடு என்பது ஒரு சிற்றூர். அந்த ஊரில் இராமையா என்னும் தெலுங்குப் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளிலும், ஒழுக்கத்திலும் நிறைந்தவர். தெய்வ பத்தி மிகவும் உடையவர். அவரது தெய்வபத்தியைக் கண்டறிந்த மக்கள் அவரை ஈசுவர பிரசாது இராமையா என்று அழைப்பாராயினர். கர்லபாடுவை அடுத்து விளங்குவது தெனாலி என்னும் ஊர். அந்த ஊரில்

சிறந்த பிராமண குலத்தில் பிறந்த இலக்குமி அம்மை என்பாரை இராமையா மணந்து கொண்டார். அவ்விருவரும் ஒழுக்க நெறி தவறாமல் இல்லறம் நடத்தி வந்தனர். அவர்கள் எல்லா நலன்களைப் பெற்றிருந்தும், மக்கட்பேறு இல்லாமையால் குறைவுற்று வருந்தினர். அதனால், அவ்விருவரும் தெனாலியில் இராமலிங்கேசுவரரைத் தினந்தோறும் சென்று பூசித்துக் குறையிரந்தனர். இறைவன் அருளால் இலக்குமி அம்மையார் ஓர் ஆண் மகவை ஈன்றாள். பெற்றும் என்? அக்குழந்தையை வளர்த்துச் செய்வன செய்து கண்டு களித்து இன்புறும் பாக்கியத்தை இராமையா பெறவில்லை. குழந்தை பிறந்த மூன்றாம் நாளே இராமையா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

3. இலக்குமி அம்மையார் அடைந்த துன்பத்திற்கோர் அளவு இல்லை. விதியை யார் வெல்லக்கூடும்? குழந்தையின் முகத்தைப் பார்த்தேனும் ஆறுதலடையுமாறு ஈசன் அருள் புரிந்தது கருதி ஒருவாறு மனந்தேறினார். வேறு ஆதரவு இல்லாமையால் இலக்குமி அம்மையார் தெனாலியிலுள்ள தம் அண்ணன் வீட்டை அடைந்தார். அக் குழந்தைக்கு இராமலிங்கன் எனப் பெயரிட்டுச் செல்வமாக வளர்த்து வந்தனர். அக்குழந்தையை யாவரும் இராமன் என்றே அழைத்தனர். அச்சிறுவனே பின்னர்ச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய தெனாலி ராமன் என்று சிறப்பாக கூறப்படுபவனாவன்.

4. இராமனுக்கு வயது ஐந்து ஆயிற்று. அவன் பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டான். பள்ளியில்

இராமன் அடக்க ஒடுக்கத்துடன் கருத்தூன்றிக் கல்வி கற்கவில்லை. குறும்புத்தனத்தில் இராமன் தலை சிறந்திருந்தான். அவனுக்கு விளையாட்டில்தான் விருப்பம் அதிகம். ஊக்கமாய்ப் படித்தல் என்பதை அவன் ஒரு நாளும் அறியான். யாவரிடத்தும் அவன் குறும்புத்தனமாய்த்தான் பேசுவான். ஆனால், அவன் பேச்சில் அவனுடைய நுண்ணறிவு காணப்படும். ஆசிரியர்கள் அவனைத் திருத்துவதற்குப் பலவகையாலும் முயன்றனர். ஆனால், திருத்தலாமாகில் அன்றோ திருத்துதல்; இயலாதாகவே, அவர்கள் முயற்சி பழுதாயின. இராமனுடைய பள்ளிப் படிப்பும் அதனோடு முடிவடைந்தது.

5. இராமன் பள்ளிக்குப் போகாமலும், கல்வி கற்காமலும் ஊரைச் சுற்றிக்கொண்டு, காலத்தை வீணாக்கினான். அவனை அறியாதார் அவ்வூரில் யாருமே இலர். ஒரு சமயம் கோடைக் காலத்தில் மழையில்லாமையால் நீர் நிலைகள் எல்லாம் வறண்டு கிடந்தன. மக்கள் பெருந்துன்பமுற்று வருந்தினர். அச்சமயம் ஒரு நாள் துறவி ஒருவர் தெனாலிக்கு வந்தார். அவர் வந்த அன்று, திடீரென இடி இடித்துப் பெரு மழை பொழிந்து குளங்குட்டைகளிலெல்லாம் நீர் நிரம்பியது. தெனாலி மக்கள் அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் அப்பெரு மழை பெய்ததற்குக் காரணம் சந்நியாசியார் வந்ததே என்று நினைத்தனர். அதனால், மக்கள் அத்துறவிக்குக் கையுறையாகப் பல பொருள்களைக் கொடுத்து அவரை வணங்கினர். "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை", என்பது ஔவையாரின் அமுத வாக்கு அல்லவா?

6. இராமன் துறவியைப் பார்க்க வராமல் இருப்பானோ? அவன் துறவிக்கு மக்கள் செய்வனவற்றையெல்லாம் பார்த்தான். அவன் துறவியை நோக்கி, "பனம் பழம் விழுந்த கதையாயிற்று உம் வருகை," என்று கூறினான். அதற்குத் துறவி, "அதுதான் உலக இயல்பு," என்று பதில் கூறி நகைத்தார். அங்கிருந்த மக்களுக்கு அவர்கள் பேசிக்கொண்ட கருத்து விளங்கவில்லை. அவர்களில் சிலர் அவர்கள் பேசிக்கொண்டதை விளக்கும்படி இராமனை வேண்டினர்.

7. இராமன் அவர்களை நோக்கி, "உங்கள் செயலை நோக்கிப் பனம் பழம் விழுந்த கதையாயிற்று என்றேன். அதற்கு அவர், 'உலக இயல்பு' என்றார். பனை மரம் ஒன்றில் பனம் பழங்கள் பழுத்திருந்தன. அவற்றில் ஒரு பழம் விழும் தறுவாயிலிருந்தது. அச் சமயத்தில் காகம் ஒன்று அதன்மீது வந்தமர்ந்தது. பனம்பழம் விழுந்தது. அதனைக் கண்டிருந்தவர்கள், 'காகம் உட்கார்ந்ததால் பனம் பழம் விழுந்தது' என்றார்கள் உண்மையில் காகம் உட்காராவிட்டாலும் பனம் பழம் விழுந்தே இரும் என்பதை, அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அதுபோன்றதே உங்கள் செயல். வானத்திலிருந்து மழையை மேகம் பொழியும் சமயத்தில் துறவி வந்தார். அவர் வராவிட்டாலும் மழை பெய்திருக்கும். அதனை நீங்கள் உணரவில்லை. இத் துறவியின் வருகையும் மழை பெய்ததும், காகம் உட்காரவும் பனம் பழம் விழவும் போன்ற ஒரே காலத்தில் நிகழ்ந்தன. இதனைக் காகதாலிய நியாயம் என்று கூறுவர். இதனைத்தான் நான் கூறினேன், அவர் சிரித்தார்," என்று விளக்கினான்.

8. துறவி இராமனுடைய நுண்மதியைப்பாராட்டினார். அவன் பள்ளியில் கல்லாதவனாயினும் இயல்பான நுண்மதி வாய்க்கப் பெற்றிருத்தலைத் துறவி அறிந்து மகிழ்ந்தார்; அவனது அஞ்சாமைகண்டு, வியந்தார். அவனுக்குச் சிறந்த மந்திரம் ஒன்றை உபதேசிக்க விரும்பி அவனை அழைத்து "நீ இயல்பான நுண்ணறிவும் அஞ்சாமையும் உடையவன். உனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன். நடு இரவில் காளி கோயிலுக்குச் செல். அங்குஆயிரத்தெட்டு முறை இந்த மந்திரத்தைச் சொல். காளி தோன்றுவாள். அவள் மிக்க கோரமான வடிவத்தோடு காணப்படுவாள். அவ்வடிவங்கண்டு அஞ்சாதே. உனக்கு விருப்பமான வரத்தைக் கேட்டுக் கொள்," என்று கூறி மந்திரத்தையும் உபதேசித்து விட்டுத் துறவி அவ்வூரை விட்டு அகன்றார்.

9. துறவி கூறியவாறு இராமன் அன்றிரவு காளி கோயிலுக்குச் சென்று, துறவி உபதேசித்த மந்திரத்தை ஆயிரத்தெட்டு முறை உச்சரித்தான். ஐந்து தலைகளும் இரண்டு கைகளையும் உடையவளாய்க் காளி தோன்றி, "நின் பக்தியை வியந்தேன். நீ வேண்டும்வரம் யாது கேள்," என்றாள். இராமன் வரம் கேட்காமலும் அஞ்சாமலும் வயிறு குலுங்க நகைத்தான். காளி சினத்துடன், "வரம் கேட்கச் சொன்னால் நகைக்கிறாய். நகைக்கக் காரணம் என்ன சொல். இல்லாவிடில் சபிப்பேன்," என்றாள். அதற்கு இராமன் தேவியைப்பணிந்து, "ஒரு மூக்கும் இருகைகளும் உடைய எனக்கு ஜலதோஷம் பிடித்தால், சிந்த இருகைகள் போதாமல் திண்டாடுகின்றேன். ஐந்து மூக்குகளை உடைய தங்களுக்கு ஜலதோஷம் பிடித்தால் இருகைகளைக் கொண்டு என்ன செய்

வீர்கள் என்ன பாடு படுவீர்கள் என்று நினைத்தேன். அடக்க முடியாத சிரிப்பு வந்தது; சிரித்து விட்டேன். சிறியேன் செய்த சிறு பிழையைப் பொறுத்தருள் புரிய வேண்டும்,'' என்று அஞ்சாது கூறி நின்றான்.

10. காளியின் உள்ளம் களித்தது. தேவி: ''இராமா நீ என்னிடமே விகடமாகப் பேசினாய்; ஆதலால் நீ விகடகவி ஆவாய்,'' என்றாள் அதனைக் கேட்ட ராமன் பணிந்து; ''தாயே, அதனினும் சிறந்தது யாது! விகட கவி என்பதை முன்னிருந்து படித்தாலும், பின்னிருந்து படித்தாலும் ஒரே பொருள் தரும் அன்றோ? என்மீது சினங்கொள்ளாமல் நல்ல வரம் ஒன்றினை அளிக்க வேண்டுகின்றேன்,'' என்றான். தேவி மனம் மகிழ்ந்து வலக்கரத்தில் ஞானம் அளிக்கும் பால் கிண்ணத்தையும் இடக்கரத்தில் செல்வத்தை அளிக்கும் தயிர்க்கிண்ணத்தையும் ஏந்திக் காட்டி, ''இவற்றில் எது வேண்டுமோ அதனைக் கொள்,'' என்றாள். நுண்மதி வாய்ந்த இராமன் தேவியை வணங்கி, ''தாயே, தாங்கள் இரண்டினையும் தாங்கி நிற்பது ஒன்றே, வாழ்க்கைக்கு இரண்டும் வேண்டுவனவே என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளக்கு கின்றது. ஆதலால் அடியவனாகிய எனக்கு இரண்டையுமே அளித் தருள வேண்டுகின் றேன்,'' என்றான்.

11. காளிக்கு அவனிடம் அன்பு உண்டாயிற்று; அவன் நுண்மதித்திறம் கண்டு வியந்தாள்; அவன் சொற் களைக் கேட்டு மகிழ்ந்து,'' ''இராமா; நீ பிறவியிலே விகடனாகப் பிறந்தாய். உன் விகடத்தை முடிமன்னரும் கேட்டு வியப்பர்; மதிப்பர். நீ விரும்பிய வாறு இரண்

டையுமே பெற்று வாழ்வாய். உனக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் என்னை நினை. நான் உன்னைக் காப்பேன்," என்று வரம் அருளி மறைந்தாள்.

12. பொழுது புலர்ந்தது. அது முதல் இராமனை மக்கள் சூழ்ந்து அவன் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தனர். யாவரும் அவனைத் 'தெனாலி விகடன்' எனப் போற்றினர். அக் காலத்தில் விஜய நகரப் பேரரசராய் விளங்கியவர் கிருஷ்ணதேவராயர். அவர் கல்விகேள்விமிக்கவர்; அருங்கலை விநோதர். தெனாலிவிகடன் செய்தி இராயர் செவிக்கும் எட்டியது. அவர் தெனாலிராமனை அழைத்து வந்து தம்மிடத்தில் விகடகவியாக அமர்த்திக் கொண்டார். தென்னாலிராமன் கிருஷ்ணதேவராயருக்கு மகிழ் ஊட்டி, சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வந்தான். அவன் நகைச் சுவைததும்பச் செய்த செயல்களும், சொல்லிய சொற்களும் இன்றும் கேட்பவர்க்குஇன்ப மூட்டி அவனுக்குஅழியாப் புகழை எய்துவிக்கின்றன.

1. அருஞ்சொற்களும் பொருளும்

விநோதம் – ஆச்சரியம்
பரிகாசம் – இகழ்ச்சி
கால் – வாய்க்கால்
குறை இரந்தனர் – குறையை நீக்க வேண்டினர்
நுண்மதி – நுட்பபுத்தி
ஜலதோஷம் – நீர்க்கோர்வை
இறைவன் – அரசன்
பழுதாயின – வீணாயின
கையுறை – கையிலிருப்பது
பொழியும் – சொரியும்
துறவி – சந்நியாசி
கரம் – கை

2. சிறுவிடை வினாக்கள்

1. நகைச் சுவை என்றால் என்ன?
2. தெனாலிராமன் பிறப்பைப்பற்றி எழுது.

3. தெனாலிராமன் பள்ளிப்படிப்புப் பற்றி அறிவது என்ன ?
4. தெனாலிராமனும் துறவியும் பற்றி அறிந்ததை எழுது.
5. 'பனம் பழம் விழுந்த கதையாயிற்று உம் வருகை'---- சந்தர்ப்பம் தருக.
6. 'காகதாலிய நியாயம்' என்றால் அர்த்தம் என்ன? விளக்கு.
7. துறவி தெனாலிராமனுக்கு உபதேசித்தது என்ன?
8. காளியிடம் தெனாலிராமன் என்ன கூறினான்? ஏன் சிரித்தான் ?
9. விகடகவி - இச்சொல்லில் காணப்படும் சிறப்பு யாது ?
10. காளி தெனாலிராமனுக்கு அளித்த இரண்டு எவை? மற்றும் என்ன அருள் செய்தாள் ?
11. தெனாலிராமன் யார் சபையில் விகடகவியாக விளங்கினான் ?

3. கட்டுரைப் பயிற்சி

தெனாலிராமன், மரியாதை ராமன், ராஜா பீர்பால் என்பவர்களைப்பற்றி நூல்நிலையத்திலுள்ள புத்தகங்களை எடுத்துப் படி. இவர்களுடைய அறிவு நுட்பத்தை விளக்கும் ஒவ்வொருவர் கதைகளிலும் மூன்று மூன்று எழுது.

4. இலக்கணம்

நான் நேற்று வாங்கினேன்
நான் இன்று வாங்குகிறேன்
நான் நாளை வாங்குவேன்.

மேலே மூன்று வாக்கியங்களைக் கவனியுங்கள் :-

வாங்கினேன் என்பது செய்து முடித்ததைக் குறிக்கிறது.

வாங்குகிறேன் என்பது செய்துகொண்டிருப்பதைக் குறிக்கிறது.

வாங்குவேன் என்பது செய்யப் போவதைக் குறிக்கிறது.

செய்து முடித்ததைக் குறிப்பது **இறந்தகாலம்.**

செய்துகொண்டிருப்பதைக் குறிப்பது **நிகழ்காலம்.**

செய்யப் போவதைக் குறிப்பது **எதிர்காலம்.**

இக்காலத்தை வினைச் சொல்லின் இடையில் அமைவது இடை நிலை எனப்படும்.

இடைநிலைகளாவன :-

இறந்தகால இடைநிலை :-த், ட், ற், இன்.

படித்தான், கேட்டான், தோற்றான், பாடினேன்.
படி+த்+ஆன், கேள்+ட்+ஆன், தோல்+ற்+ஆன்,
பாடு+இன்+ஏன்.

நிகழ்கால இடைநிலை :- கிறு, கின்று, ஆநின்று.

படிக்கிறான், படிக்கின்றான், படியாநின்றான்
படி+க்+கிறு+ஆன் ; படி+க்+கின்று+ஆன் ; படி+ப்+ஆநின்று+ஆன்.

எதிர்கால இடைநிலை :-ப், வ்.

படிப்பான், போவான்
படி+ப்+ப்+ஆன் ; போ+வ்+ஆன்.

பயிற்சி

பின்வரும் வினைச் சொற்களின் காலத்தை எழுது :-

படித்தான்	ஓடுகின்றான்	கொடுப்பான்
உண்டான்	பாடுவான்	தந்தான்
காண்கிறான்	சென்றான்	வருவான்

வினையின் விளைவு

(நாடகம்)

இடம்: மதுரை மாநகர்; இடையர் சேரி.

பாத்திரங்கள்: கண்ணகி, கோவலன், மாதரி (தூரத்தில் ஐயை என்ற பெண்)

நேரம்: காலை

I

மாதரி: ஐயை! இவ்விருவரையும் அப் புது மனைக்கு அழைத்துச் செல். அங்குப் புதுப் பாண்டங்களைக் கொண்டு செல். இந்த அம்மையார் உணவாக்க வேண்டுவன கொண்டுபோய்க்கொடு. இவ்வம்மையாரை விட்டு அகலாது நின்று அவர் இடும் பணிகளைச் செய். இவ்விருவரும் கவுந்தியடிகளால் என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட விருந்தினர்கள்.

ஐயை: தாயே! அவ்வாறே செய்கிறேன்.

(வெளியே சென்று சிறிது நேரம் கழித்து வந்து கோவலன் கண்ணகியை நோக்கி)

ஐயை: வாருங்கள் புதுமனைக்கு ஏகுவோம்.

(கண்ணகி கோவலன் ஐயை மூவரும் புதுமனைக்கு ஏகுதல். கூடத்திலிடப்பட்டிருந்த ஊஞ்சலில் கோவலன் அமர்ந்தான். ஐயை பால், தயிர், காய்கறிகள், அரிசி, பருப்பு, எண்ணெய் முதலான சமையல் சாமான்களைக் கொடுக்கிருள். கண்ணகி உணவு சமைக்கச்செல்கிருள்.)

ஐயை: அம்மா! வருந்த வேண்டா; நான் அடுப்பு மூட்டித் தருகிறேன். அங்கு நீர்கொணர்ந்து வைத்துள்ளேன்.

(கண்ணகி காய்கறிகளை அரிவதனல் கை சிவத்தலைக் கண்டு)

ஐயை: அம்மையே ஐயோ பாவம்! கைகள் சிவந்தன. யான் அரிந்து தருகின்றேன்.

(கண்ணகி சமைத்தல். கோவலன் நீராடி வருதல். கண்ணகி இலைபோட்டு மனை இட்டு)

கண்ணகி: வாருங்கள் உணவு கொள்ளலாம்.

கோவலன்: *(உண்பவனய்)* எக் காலத்தும் சமைத்து அறியாத நீ எவ்வாறு இவ்வளவு சுவைபடச் சமைத்தாய்?

கண்ணகி: மீன் குட்டிக்கு நீச்சப்பழக்க வேண்டுமா? பெண்களுக்கு இன்றியமையாது வேண்டுவதான தொழில்தானே.

(உண்ட பிறகு வெற்றிலைபாக்கு மடித்துக் கொடுக்கையில்)

கோவலன் : கண்ணகி! கல் நிறைந்த இக்கடுமையான வழியில் கொடியவனான என்னுடன் வந்தாய். இதனை அறிந்த என் பெற்றோர் மிகவும் வருந்தியிருப்பர். என்ன மாய வாழ்க்கை! என்னே கொடிய வினையின் செயல்? பயனில்லாதவர்களோடும், ஒழுக்கமில்லாதவர்களோடும், வீணர்களோடும் சேர்ந்து கலந்து காலம் கழித்ததின் பயன் இது. கையிலுள்ள பொருளையும் இழந்தேன். கடுவழி நடந்தோம். உனக்கும் துன்பம் செய்தேன். பெற்றோர் ஏவலும் மறந்தேன். நான் செய்த குற்றத்தைப்பாராமல், மதுரைக்குப் புறப்படு என்றதும் ஒருப்பட்டுப் புறப்பட்டு வந்தாயே! உன் அன்புடைமையை என் என்று கூறுவேன்!

கண்ணகி : அன்புடையீர், சென்றது கருதி வருந்தாதீர்கள். யாவும் விதியின்படிதானே விளையும். அடியேன் தங்களுடன் கூடி இருந்து இல்லறம் நடத்தும் பேற்றினைப் பெறவில்லை. அதனால் தருமநெறியில் வழுவாதார்க்குக் கொடுத்தல். அந்தணர்களை ஓம்புதல் துறவிகளை உபசரித்தல், விருந்தினர்களைப் பேணுதல் என்பவற்றால் அடையும் நன்மைகளை நான் இழந்தவளானேன். உங்கள் தாய் தந்தையர் என் மனத்துன்பத்தை அருள் நிறைந்த இனியமொழி கூறி அகற்றி வந்தனர். நான் அவர்களுக்கு என் துன்பம் தோன்றாதபடி முகத்தில் புன்முறுவல் கொண்டிருந்தேன். என்றாலும் என் புன்சிரிப்பும் பொய்ச் சிரிப்பாய், மனத்துள் ஒளித்த நோயையும் துன்பத்தையும் வெளிப்படுத்தியது. அது கண்டு அவர்கள் வருந்தினர். தாங்கள் பெற்றோர் உள்ளம் வருந்துமாறு தகாத ஒழுக்கத்தை மேற்கொண்டீர்.

கான் மாருத உள்ளம் பெற்றிருந்ததால் 'புறப்படு' என்றதும் புறப்பட்டேன்.

கோவலன் : கண்ணகி, குடும்பச் சுற்றத்தாரையும், தோழியர்களையும், அடியார்களையும் ஏவலாளர்களையும் நீக்கிவிட்டு என்னுடன் நீ தனியாக வந்தாய்; நற்பெண்களுக்குரிய நாணம், மடம், நல்லோர்ஏத்துதல், கற்பு என்பவற்றையே உனக்குப் பொருந்திய துணையாகக்கொண்டாய். என் துன்பத்தைப் போக்கினாய். என்ன சொல்லினென்ன? இனிப்பொருள்தேட வழிகோலவேண்டும். உன் சிலம்புகளில் ஒன்றைக்கொடு அதனைக் கடைத்தெருவில் கொண்டு சென்று விற்றுவருகிறேன். நான் வரும்வரையில் நீ வருந்தாமல் இங்கே இரு.

கண்ணகி : இதோ சிலம்பு! கொள்ளுங்கள்.

(கோவலன் சிலம்பு பெற்று வெளியே செல்லப் புறப்படுகிறான். ஒரு காளை எதிரில் பாய்ந்து வருகிறது. அதைப் பொருட்படுத்தாது கோவலன் போய்க்கொண்டிருக்கிறான். இந்நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த இருவர் பேசிக்கொள்கின்றனர்.)

ஒருவர் : புது ஐயா எங்கோ புறப்படுகிறார்; காளை பாய்ந்து வருகிறதே. அபசகுனமாயிற்றே.

மற்றொருவர் : அதனை அவர் அறியாமல் போகிறார், நீர் ஏதேனும் சொல்லாதீர்.

II

இடம் : மதுரைக் கடைத்தெரு.

பாத்திரங்கள் : கோவலன்–அரண்மனைப் பொற்கொல்லன்.

நேரம் : பகல்.

கோவலன் : (தனக்குள்) அதோ, பலர்சூழ வருகிறவர் அரண்மனைப் பொற்கொல்லராம். அவரிடம் சென்றுசிலம்பைக் கொடுத்து விற்றுத்தரச் செய்வோம். இத்தகைய அரியசிலம்பினை வாங்கக்கூடிய செல்வரை அவரே அறிவார்.

(கோவலன் பொற்கொல்லரை நெருங்கி)

கோவலன் : ஐயா, வணக்கம்: தாங்கள் அரண்மனைப் பொற்கொல்லரோ ?

பொற்கொல்லன் : வாருங்கள் நான் அரண்மனைப் பொற்கொல்லன்தான்; என்னால் ஆகவேண்டிய பணியாதேனும் உண்டோ ?

கோவலன் : ஆம், உண்டு (சிலம்பைக்காட்டி) இச்சிலம்பினை மதிப்பிட்டு விற்றுத்தர வல்லீரோ ?

பொற்கொல்லன் : (பலமுறை சிலம்பைப்பார்த்து விட்டு) ஆம் இதனை விற்றுத்தர எம்மால் இயலும் வாருங்கள் என் மனைக்குச் செல்லலாம். தங்களை அங்கு இருத்திவிட்டு, அரண்மனைவரை சென்று வருவேன். தாங்கள் எந்த ஊரோ ?

கோவலன் : நான் சோழநாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்பவன்.

(இருவரும் போதல். கோவலனை ஓரிடத்தில் இருக்கச்செய்து, பொற்கொல்லன் அரண்மனைக்கு ஏகுதல்)

பொற்கொல்லன் : (தனக்குள்) என் மீதுள்ள பழியை நீக்கிக்கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. இதனைத் தவறாது பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இவனோ அயலூரான். இவ்வூரிலுள்ளார் ஒருவரும் இவனை அறியார். இவன் கொண்டுவந்துள்ள சிலம்பு நாம் கவர்ந்துகொண்ட அரசியின் சிலம்பு போன்றதே. இவனைக் கள்வன் ஆக்கி நம்மீதுள்ள பழியை நீக்கிக் கொள்ளவேண்டும்.

(பொற்கொல்லன் அரண்மனை அடைந்து, அரசியின் கோபத்தைத் தணிக்கச் செல்லும் பாண்டியனை இடைவழியில் காணுதல்)

பொற்கொல்லன் : தண் தமிழ்ப்பாண்டி நாட்டுத் தனிப்பெரும் மன்ன, அடிமை பொற்கொல்லன் வணக்கம்.

பாண்டியன் : செய்தி என்ன ? அரசியின் சிலம்பை ஏன் நெடுநாளாகியும் கொண்டு வரவில்லை ?

பொற்கொல்லன் : மன்னர் மன்ன; அதனைக் கூறவே வந்தேன். தேவியாரின் சிலம்பினைச் செப்பனிட்டு மெருகிட்டுக் காயவைத்தேன். எவனோ ஒருவன் திருடிச் சென்றான். அதன் பொருட்டே அலைந்து கொண்டிருந்தேன். சோமசுந்தரக் கடவுளின் அருளால், திருடிய அவனே அச்சிலம்புடன் என்னிடமே வந்து விற்றுத் தருமாறு கேட்டான். அவனை என் வீட்டின் அயலில் இருத்தி இச்செய்தியைத் தெரிவித்துக் கொள்ளவே விரைந்து ஓடோடியும் வந்தேன்.

பாண்டியன் : அப்படியா ! எவ்வளவு துணிவு அக் கள்வனுக்கு ! சேவகர்காள் சென்று கொலையாளிகளைக் கொணர்க.

(இரு கொலையாளிகள் வந்து பாண்டியனைப் பணிந்து நிற்க)

பாண்டியன் : நீங்கள் இப்பொற்கொல்லனோடு சென்று சிலம்பு திருடிய கள்வனைக் கொன்று; சிலம்பினைக் கையோடு கொணர்க.

(யாவரும் வணங்கிச் செல்கின்றனர்.)

III

பொற்கொல்லன் ; (வீட்டயலிலிருக்கும் கோவலனைக் காட்டி) இவரே விரைந்து: அரசன் ஏவியதைச் செய்க. (கோவலனை நோக்கி) இவர்கள் அரசன் ஏவலால் சிலம்பு காண வந்தவர்கள். சிலம்பைக் காட்டுக.

ஒரு கொலையாளி : இவனைக்காணின் கள்வனைப் போலத் தோன்றவில்லையே உயர் குடியில் பிறந்த மகனாகவன்றோ காணப்படுகிறான்.

பொற்கொல்லன்: கள்வர்கள் பலவாறு ஏமாற்றுதலில் வல்லவர்கள். மற்றும் அரசன் கட்டளையை நாம் தவறக்கூடாது.

மற்றொரு கொலையாளி : நமக்கு என்ன! இவன் கையில் சிலம்பு உள்ளது. அரசன் கட்டளையை நிறைவேற்ற வேண்டுவதே நம் கடமை.

[என்று கூறி வாளை உருவிக் கோவலனை வெட்டி வீழ்த்தினன்.]

(கொலையாளிகள் சிலம்பினை அரசனிடம் கொண்டு சென்று கொடுத்தனர்.)

(பொற்கொல்லன் தன் கருத்து நிறைவேறியது; தான் அரசியின் பொருளைக்கவர்ந்தவன் என்ற பழியும் நீங்கியதென்று மகிழ்ந்தான்.)

1. அருஞ்சொற்களும் பொருளும்

அகலாது - விட்டு நீங்காது
பணி - கட்டளை, வேலை
ஏகுவோம் - செல்வோம்
நீராடி - குளித்து
இருத்தி - உட்காரச் செய்து
ஏவல் - கட்டளை
வழுவாதார் - தவறாதவர்
புன்முறுவல் - புன்சிரிப்பு
ஏத்துதல் - புகழ்தல்
தணிக்க - குறைக்க

2. சிறுவிடை வினாக்கள்

1. மாதரி, கோவலன் கண்ணகிக்குச் செய்த உதவி என்ன?
2. ஐயை யார்?
3. கோவலன் கண்ணகியிடம் தன் தவறாகச் சொல்லிக் கொண்டவை யாவை?
4. கண்ணகியின் அன்புடைமையைக் கோவலன் எவ்வாறு பாராட்டுகிறான்?
5. கண்ணகி கணவனை என்ன கூறித் தேற்றுகிறாள்?
6. கண்ணகி எவற்றை நீக்கி விட்டு எவற்றைத் துணைக் கொண்டு வந்ததாகக் கோவலன் கூறுகிறான்?
7. அபசகுனமாகக் காணப்பட்டது என்ன?
8. பொற்கொல்லன் சூழ்ச்சியை விளக்கு.
9. கோவலன் கொலையுண்டதும் பாண்டியன் மதி இழந்ததும் விதியின் செயல் என்பதை விளக்கு.
10. 'விதியின் விளைவு' என்ற தலைப்பு இந்நாடகத்திற்குப் பொருந்துமாறு விளக்கு.

3. கட்டுரைப் பயிற்சி

1. இந் நாடகப் பகுதியின் கதையைத் தொகுத்து எழுது.
2. கண்ணகி, மாதரி இவர்களின் குண நலங்களைப் பற்றி எழுது.
3. 'விதியும் மதியும்' என்ற தலைப்பு அமைத்து நீ அறிந்ததை எழுது.

4. இலக்கணம்

1. அ, இ, உ - சுட்டெழுத்துக்கள்.
2. எ, யா, ஆ, ஓ, ஏ - விஞ எழுத்துக்கள்.
3. ஐ, ஆல், ஆன், ஒடு, ஓடு, கு, இல், இன், அது, கண் இவை வேற்றுமை உறுபுகள்.
4. மற்று, கொல், ஏ, ஓ, மாதோ, அரோ என்பன செய்யுட்களின் ஈற்றில், இடையில் வரும் த், ட், ற், இன், கிறு, கின்று, ஆகின்று, ப், வ், என்னும் மேற்கூறப் பட்டவை எல்லாம் இடைச்சொற்கள்.
5. காலங் காட்டும் இடை நிலைகள் :—

இடைச்சொற்கள் தனியாக வராது. பெயர்ச்சொல் வினைச் சொற்களை அடுத்து வரும்.

நனி தின்ருன் சாலச் சிரித்தான்
கடி மணம் நனி பேதை.

நனி, கடி, சால என்பன பெயர்ச் சொல் வினைச் சொற்களை அடுத்து வந்து அவற்றின் பொருளை மிகுதிப் படுத்தின. ஆதலால் இவை உரிச் சொற்கள்.

பெயரை அடுத்த உரிச்சொல் பெயர் உரிச்சொல்
வினையை அடுத்த உரிச்சொல் வினை உரிச்சொல்

இவற்றுள் 'கடி' என்ற சொல் காவல், மிகுதி முதலான பல பொருளைத் தருதலால் பலபொருள் குறித்த உரிச்சொல் எனப்படும்.

சால, உறு, தவ, நனி, கழி, கூர் என்பன மிகுதி என்ற ஒரு பொருளைக் குறித்தலால் ஒரு பொருள் குறித்த பல உரிச்சொல்.

பயிற்சி

1. இடைச்சொல் என்ருல் என்ன? எவை இடைச் சொற்கள் ?

2. உரிச்சொல் என்ருல் என்ன ? எவ்வளவு வகைப்படும் இரண்டு உதாரணங்கள் கொடு.

1. செய்யுட்பகுதி

கடவுள் வாழ்த்து

1. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை-தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின்
இருப்பளிங்கு வாரது இடர். [உள்ளே

—கம்பர்

2. பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்
கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை
அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னையல்லால் இனியாரை
நினைக்கேனே.

—சுந்தரர்

3. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே!

—குலசேகரர்

4. அன்பினுக்(கு), உருவம், நல் அறத்துக்(கு),
ஆலயம் ;
மன்பதைக்(கு) அருள்மழை வழங்கும் பைம்புயல்;
நின்பரம் எனநினை வோர்க்கு நித்யபே
ரின்பசஞ் சீவிஎம் ஏசு நாமமே.

— இரக்ஷணிய யாத்திரிகம்
H. A.கிருஷ்ணபிள்ளை.

2. நீதிப் பகுதி

1. திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு 1

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 2

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 3

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 4

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 5

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 6

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் 7

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 8

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவன போலக் கெடும். 9

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 10

—திருவள்ளுவர்

2. நீதிநெறிவிளக்கம்

அவை அஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவை அஞ்சா ஆகுலச் சொல்லும்—நவை அஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலில் பூவாமை நன்று. 1

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பது ஒன்றுண்டு—பிறர் பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங் காத்து
யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல். 2

கண்ணோக்கு அரும்பா, நகைமுகமே நாள்மலரா,
இன்மொழியின் வாய்மையே திங்காயா,-வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சவியாத கற்ப தரு. 3

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறும்வரை காறும் முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. 4

மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். --குமரகுருபரர்

3. நன்னெறி

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 1

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு! 2

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்
குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 3

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 4

கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம் செய்வர்—அம்மா!
முலைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. —சிவப்பிரகாசர்

4. நீதி வெண்பா

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்—
நன்மொழியை
ஓதுகுயில் ஏதங் குதவியது? கர்த்தபம்தான்
ஏதபரா தம்செய்த தின்று. 1

பகைசேரும் எண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவைஅருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித்து அவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில். 2

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைச் சேர்ந்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர் துயரம் போல். 3

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெறலினோர்
நற்புதல்வனைப்பெறுதல் நன்றுமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 4

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே-வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி 5

3. சதகத் திரட்டு

1 குமேரச சதகம்

சிறுமையில் பெருமை

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனித அபி டேகமாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுனு கனைவர்க்குமாம்
சாதியீ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின் மேல் வட்டமன்றோ ?
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

—**குருபாத தாசர்**

2 கயிலாசநாதர் சதகம்

கல்விச் சிறப்பு

கடலுலகி லுற்றபொரு ளுக்குள்ளே நன்மைதரு
· கல்வியிலை பெற்ற பொருளாம்.
கனவினுல் உருகாது; புனலினுற் கரையாது,
கள்ளரால் திருடொ ணுது;

திடமான ராசாதி ராசரா லுமதைத்
    தீண்டிச் சிதைக்கொணுது;
செயல்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
    செலவிடினுங் குறைவுருதங்(கு)
அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
    அளவிடவு முடியாதுகாண்;
அப்பொரு ளினைப்பெரு திப்புவியி லலைகின்ற
    அற்பருறு பயனென்கொலோ!
கடகயம் உரித்துடலி னிற்றரித் திடுதேவ
    கற்பகஇ ராசமேவுங்
கங்கைபுனை ஈசனே! மங்கைமகிழ் நேசனே!
    கயிலையங் கிரிவாசனே!

—சிதம்பரம் பிள்ளை

3 திருவேங்கட சதகம்

பயன் தராதவை

சந்திரன் இலாஇரவு, மதுரமில் லாதகவி
    தனயரில் லாதசெல்வம்,
சற்சனர் இலாதவூர், புரவியல் லாதபடை,
    தளபதியில் லாதசேனை,
பைந்தொடி யிலாதமனை, பாடலில் லாஓசை,
    பத்தியில் லாதபூசை,
பார்த்திப ரிலாதபட் டணம். யூக மந்திரிகள்
    பற்பல ரிலாதவரசு,
கந்தமில் லாதமலர், சத்தியமில் லாதவாய்,
    கல்வியில் லாததேகம்
கனவினய மில்லா நியோகி, சுசி யில்லாத
    கன்மம்; உப தேசமில்லா

மந்த்ரமிதை வித்வசன மில்லாத சபைஎன்பர்;
மணவாள நாராயணன்
மதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே!

—நாராயண பாரதியார்

4 அரப்பளீசுர சதகம்

குறைப்பட்டும் குணம் கெடாதவை

தறிபட்ட சந்தனக் கட்டை பழுதாயினும்
சார்மணம் பழுதாகுமோ?
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சார்மதுரங் குறையுமோ?
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதன்
நீள்குண மழுங்கிவிடுமோ?
நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையுமாற் றுங்குறையுமோ?
கறைபட்ட பைம்புயல் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ?
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனும்
காசினி தனிற் போகுமோ?
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே!
ஐயனே! அருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

5. கோவிந்த சதகம்

கொடுத்தாற்குறைவாராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும்ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற் கேணித்தண் ணீரது
போல்
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண் டானவ ரன்
புடனே
கொடுத்தாற் குறைவரு மோவச்சு தானந்த கோவிந்
தனே

—நாராயணபாரதி.

4. கதைப் பகுதி

(சிங்கமும் முயலும்)

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதுண் டேது என்னில்
செறியுமோர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி. 1

“ ஆணிளஞ் சிங்க மேஉன் !
அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் றுக

உனக் களிப்போம்," என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்றும்
அருந்தியங் கிருக்கும் நாளில் 2

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
இனியது விடாது நம்மை
எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
கனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்குநற் புகழுண் டென்றே 3

கருதிஅச் சிங்கத் தின்றன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி,
மன்னவ், " நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரை நீ " என்று
மனந்தனிற் சினந்து கூற 4

" ஐய ! நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன் ; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்ய ! உன் பக்கல் வந்தேன்.
சுவாமி !" என் றிறைஞ்சி நிற்க. 5

"சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டுவா," என்று
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்த்தங்
கதனிழல் உருவந் தோன்ற 6

தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே உயிரி ழந்தது
என்னலால் உபாயத் தாலிங்
காகாத தில்லை; யொன்றும்
என்னுமோர் அறிய நீதி
இக்கதை விளக்கு மன்றே. 7

—வீரமார்த்தாண்ட தேவர்

5. பல்சுவை

வாழ்வது வந்த போது
மனந்தனில் மகிழ வேண்டா ;
தாழ்வது வந்த தானல்
தளர்வரோ தக்கோர் ? மிக்க
ஊழ்வினை வந்த தானல்
ஒருவரால் விலக்கப் போமோ ?
ஏழையா யிருந்தோர் பல்லக்கு
ஏறுதல் கண்டி லீரோ ?

கலையெலாம் உணர்ந்தா ரேனும்
கரிசறத் தெளிந்தா ரேனும்
மலையென உயர்ந்தா ரேனும்
மனமயல் அகன்று ரேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்கு
உதவிய கைய ரேனும்
இலகிய இரக்கம் இன்றேல்
எழுநர கடைவர் அன்றே. 2

பொருளிலார்க் கின்பம் இல்லை,
புண்ணியம் இல்லை ; என்றும்
மருவிய கீர்த்தி இல்லை,
மாந்தரிற் பெருமை இல்லை ;
கருதிய கருமம் இல்லை ;
கதிபெற வழியும் இல்லை ;
பெருநிலந் தனில்சஞ் சாரப்
பிரேதமாய்த் திரிகு வாரே. 3

மெய்யதைச் சொல்வா ராகில்
விளங்கிடும் மேலாம் நன்மை ;
வையகம் அவரைக் கொள்ளும் ;
மனிதரில் தேவர் ஆவார் ;
பொய்யதைச் சொல்வா ராகில்
போசனம் அற்ப மாகும் ;
நொய்யவர் இவர்கள் என்று
நோக்கிடார் அறிவுள் ளாரே. 4

—விவேக சிந்தாமணி

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர
மொழிந்திடுதல், சிந்திப் பார்க்கே
களிவளர வுள்ளத்தில் ஆனந்தக்
கனவுபல காட்டல், கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதலிங் கிவையெல்லாம்
நீஅருளும் தொழில்கள் அன்றோ !
ஒளிவளரும் தமிழ்வாணி ! அடியனேற்கு
இவையனைத்தும் உதவுவாயே 5

—பாரதியார்

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம். 6

—காளமேகப் புலவர்

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்தரிதால்—யாம் பெரிதும்
வல்லோமே என்றுவலிமை சொல வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது 7

—ஔவையார்

சென்னைக்கு வந்து சிவனுயி னேன்நல்ல
அன்னமது காணு தவனுகி—மன்னுசிரங்
கைக்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுறுக்கி
மெய்கண்ட நீறணிந்து மே. 8

—இராமசந்திரக் கவிராயர்

கல்லாத வொருவனைநான் கற்ருய் என்றேன் ;
காடெறியும் மறவனைநா டாள்வா யென்றேன் ;
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன் ;
போர்முகத்தை அறியானைப் புலியே என்றேன் ;

மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை ;
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன் .
இல்லாது சொன்னேனுக் கில்லை என்றான்.
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே. 9

எழுதரிது முன்னம் ; எழுதிய பின்னர்ப்
பழுதறவா சிப்பரிது பண்பாய் ;—முழுதுமதைக்
கற்பரிது ; கற்பயனைக் காண்பரிது ; கண்டக்கால்
நிற்பரிது தான் அந் நிலை. 10

—தனிப்பாடல்கள்

6. நாடு மொழி

1. வாழ்த்து

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற் றமிழர் !
வாழிய பாரத மணித்திருநாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மைவந் தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம் வளர்ந் திடுக ! மறம் மடிவுறுக !
நம்தே யத்தினர் நாடொறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம்

—பாரதியார்

2. தமிழன் சிறப்பு

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு,
அமிழ்தம் அவனுடை மொழியாகும் ;
அன்பே அவனுடை வழியாகும். 1

அறிவின் கடலைக் கடந்தவனும் ;
  அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும் ;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
  பொருந்திய நூல்கள் உரைத்திடுவான். 2

கலைகள் யாவினும் வல்லவனும் ;
  கற்றவர் எவர்க்கும் நல்லவனும்-;
நிலைகொள் பற்பல அடையாளம்
  நின்றன இன்றும் உடையோனும். 3

சிற்பம் சித்திரம் சங்கீதம்
  சிறந்தவர் அவனினும் எங்கே சொல் !
வெற்பின் கருங்கல் களிமண்போல்
  வேலைத் திறத்தால் ஒளிபண்ணும். 4

மானம் பெரிதென உயிர்விடுவான் ;
  மற்றவர்க் காகத் துயர்ப்படுவான் ;
தானம் வாங்கிடக் கூசிடுவான் ;
  ' தருவது மேல் ' எனப் பேசிடுவான். 5

உத்தமன் காந்தியின் அருமைகளை
  உணர்ந்தவன் தமிழன் பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்
  சாந்தம் தவறாது உடனிருந்தான். 6

—நாமக்கல் கவிஞர்

3. கம்பர் பெருமை

பண்டைத் தமிழ்மொழியைப்—படித்துப்
  பக்குவம் செய்து வைத்தோன்
கண்டின் சுவையெல்லாம்—சொல்லில்
  கனியக் காட்டிடுவான் 1

எவரும் போற்றிடவே—தமிழில்
இராம கதை புனைந்தோன்
புவனம் உள்ளளவும்—அழியாப்
புகழ் பரந்திடுவோன் 2

தீது நன்மையெல்லாம்—ஆய்ந்து
தெளியச் சொல்லிடுவோன்
வாதி பிரதிகளின்—வழக்கை
வரைந்து காட்டிடு வான். 3

நாடகக் காட்சி யெல்லாம்—கவியில்
நன்கு காட்டிடுவான்
பாடகர் போற்றிடவே—இனிய
பண்கள் தந்திடுவான். 4

மூவர் முடிவேந்தர்—போற்றும்
முத்தமிழ்ப் பாவேந்தன்
தேவி அருள் பெற்றோன்—தமிழ்த்தாய்
செய்தவத் தால் பிறந்தோன். 5

நன்று செய்த வள்ளல்—சடையன்
நாமம் இப்புவியில்
என்றும் நின்றிடவே—கவியில்
இடம் அறிந் தளித்தோன். 6

புவி யரசர் எல்லாம்—நிதமும்
புகழ்ந்து பாராட்டும்
கவி யரசர் தொழும்—பெரிய
கம்பநாடாள் வான். 7

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

4. தமிழ் மொழி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி !
    வாழிய ! வாழியவே !
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
    வண்மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
    இசை கொண்டு வாழியவே !
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
    என்றென்றும் வாழியவே !

5. தாய் நாடு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
    இருந்ததும் இந் நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
    முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
    சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி
    வாயுற வாழ்த்தேனோ !

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்தருள்
    ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
    அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினில் ஆடிக்
    களித்ததும் இந்நாடே—தங்கள்

பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி. இல்
போந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ! 2

—சி. சு. பாரதியார்

6. தமிழ்வளர்ச்சி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும் ;
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாம்கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்:
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். 1

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்;
தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்:
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம் ; குறைகளைந் தோமில்லை:
தகத்தகா யத்தமிழைத் தாபிப்போம் வாரீர் 2

—பாரதி தாசன்

உரைப் பகுதி

1· கடவுள் வாழ்த்து

1. ஆயகலைகள் - சிறந்தனவாகிய சாத்திரங்கள்
ஏய - பொருந்த. என் அம்மை - என் தாய்
உரு - வடிவம், பளிங்கு - கண்ணாடி, இருப்பள்+இங்கு
எனப் பிரிக்க; இடர் - துன்பம்.

2. பொன் - ஆர் - பொன்போன்ற, மேனியன் - உடலை உடையவன், அசைத்து - கட்டி, மின்னார் - மின்னலைப்போன்ற, செம்மை+சடை - சிவந்த சடை, மிளிர்-விளங்கும், கொன்றை-கொன்றை மலர், மன்னே - தலைவனே, மழபாடி - திருமழபாடி என்னும் தலம், அன்னே - தாயே, நினைக்கேன் - நினைக்க மாட்டேன்.

3. அறத்துக்கு - தருமத்துக்கு, ஆலயம் - கோயில், மன் பதை - மக்கள், அருள் மழை - கருணையாகிய மழை, வழங்கும்-கொடுக்கும், பைம்புயல் - பசுமை+புயல்=பசுமையான மேகம். பரம் - மேன்மை, நித்ய பேரின்பம் - அழியாது நிலைத்த மோட்ச இன்பம், சஞ்சீவி - அழிவை நீக்கும் மருந்து, நாமம் - பெயர்.

2. நீதிப் பகுதி

1. திருக்குறள்

1. அகரம் முதல - அகரத்தை முதலாக உடையன. ஆதி பகவன் - முதற்கடவுள் (தாய் - ஆதி; பகவன் தந்தை) முதற்று - முதலாக உடையது.

2. மனத்துக்கண் - மனத்தில், மாசு+இலன் - குற்றமில்லாதவன், அனைத்து - அவ்வளவே, ஆகுலநீர - ஆரவாரத் தன்மையின.

3. தமக்கு உரியர் - தங்களுக்கே (பெற) உரிமையாக உடையர், என்பும் - எலும்பாலும் (உடலாலும்) (சிபி, ததீசி கதை)

4. காலத்தினால் - காலத்தில், நன்றி - உபகாரம் ; ஞாலம்- பூமி, மாண - மிக.

5. நன்றுஅன்று - நல்லது அல்ல(தீது) ; நன்றல்லது - தீமையை, அன்றே - அப்பொழுதே.

6. விழுப்பம் - மேன்மை, ஓம்ப - பாதுகாக்க.

7. ஒறுத்தார்க்கு - தண்டித்தவர்க்கு. பொன்றும் துணையும் - அழியும் காலம் வரை.

8. ஏதிலார் - பகைவர், காண்கிற்பின் - கண்டால், மன்னும் - நிலைத்த.

9. ஆக்கம் - செல்வநிறைவு. ஆவனபோல - உண்டானது போல. கெடும் - அழியும்.

10. உள்ளத்தால் - மனத்தினால்.

2. நீதிநெறி விளக்கம்

1. அவை - சபை, மெய்விதிர்ப்பார் - உடல் நடுங்குபவர், கல்லார் - படியாதவர், ஆகுலச் சொல் - ஆரவாரமான சொல் (உரத்த சொல்), நவை - பழி, ஈத்து+உண்ணார் = ஈத்துண்ணார் - பகிர்ந்து கொடுத்து உண்ணாதவர், நல்கூர்ந்தார் - தரித்திரர், இன்னலம் - கருணை, பூத்தல் - உண்டாதல், பூவாமை - உண்டாகாமல் இருத்தல்.

2. சுட்டு - புகழ், வேண்டுவான் - விரும்புகிறவன், யாண்டும் - எக்காலத்தும், நோற்பது - விரதமாகக் கொள்வது, சீர் - பெருமை, தூற்றி - எடுத்துச்சொல்லி, சிறுமை - குறை

களை ; புறங்காத்து – சொல்லாமல் காத்து, யார் யார்க்கும் – எத்தகையவர்க்கும், தாழ்ச்சி - பணிவான சொற்களை.

3. நோக்கு – பார்வை, நகை – சிரிப்பு, நாள்மலர் ஆ – அன்று மலர்ந்த மலர் ஆக, இன்மொழி - இன்சொல், வாய்மை - உண்மை, திங்காய் - இனியகாய், வண்மை - கொடுக்கும் தன்மை, பலமா – பழமாக, நலங்கனிந்த - நற்குணங்கள் மிக்க, பண்புடையார் - இயல்புடையவர்கள், சலியாத - தளராத, தரு - மரம்.

4. உறுதி - நன்மை, பயப்ப – உண்டாக, கடைபோகா வேனும் - முற்றச் செல்ல முடியாதாயினும், இறும் வரை – முடியும் வரை, இறும் உயிர்க்கும் – அழியும் உயிர்க்கும், ஆயுள் மருந்து - உயிர்க்கு நன்மை தரும் மருந்து, ஒழுக்கல் - வார்த்தல், அல்லனபோல் – ஆகாதனபோல்.

5. வருத்தம் - துன்பம், துஞ்சார் - தூங்கார்; எவ்வெவர் – எவர்எவர், மேற்கொள்ளார் - பொருட்படுத்தார், செவ்வி – காலம், அவமதிப்பு – பிறர் இகழ்வது, கருமம் - செயல், கண்ணுயினர் – கண்ணும் கருத்துமாக இருப்பவர்.

3. நன்னெறி

1. தம்+குறை, உள்ளார்–நினையார், தளர்ந்து – வருந்தி, உறாஉம்-உண்டாகும், வெம்மை=குறை=வெங்குறை-கொடிய துன்பம், விழுமியோர் - மேலோர், கறைஇருள் - களங்கமாகிய இருட்டை, நிறை இருள் - நிறைந்த இருள், மேல் நின்று - ஆகாயத்திலிருந்து.

2. மாசு – குற்றம், நெஞ்சு – மனம், வன்சொல் – கொடிய சொல், ஏனையவர் – மற்றவர், பேசுற்ற – பேசுகிற, பிறிது – வேறு, (துன்பம்) என்க – என்று கூறுக, ஈசன் – சிவன், நல்லோன் – சாக்கிய நாயனார், நல்நுதால் – நல்ல நெற்றியை உடையவளே! ஒண் – ஒளி, கரும்பு+வில் – கருப்புவில், கருப்புவில்லோன் – மன்மதன்.

3. நீக்கம் அறும் - நீங்குதல் இல்லாத, புணர்ந்தாலும் - சேர்ந்தாலும், கொய்து - அற்பம், பூக்குழலாய் - பூவினையுடைய அழகிய கூந்தலை உடையவளே, பழைமைபோல் - முன்புபோல, புல்லினும் - சேர்ந்தாலும், திண்மைநிலை - வலிமையான நிலை.

4. கடலே அனையம் - கடலைப்போன்றவர் யாம், அடல் ஏறு அனைய - வலிமை பொருந்திய ஆண்சிங்கத்தை ஒத்த, செருக்கு - கர்வம், ஆழ்த்திவிடல் - மூழ்கிவிடாதீர், முனிக்கரசு- அகத்தியர், பனி - குளிர்ச்சி, முழங்கும் - ஒலிக்கும்.

5. கைம்மாறு - பிரதியுபகாரம், உகவாமல் - விரும்பாமல், இயல் - கூடிய, (அம்மா - இடைச்சொல்) எயிறு - பல், முதிர் சுவை - மிக்க சுவை, வலியனதாம் - கட்டியான பொருள்களை, மென்று - கடித்து.

4. நீதி வெண்பா

1. மென்மதுர வாக்கால் - மெல்லிய இனிய சொல்லால் சகம் - உலக மக்கள், வன்மொழி - கொடிய மொழி. மண்ணுலகம் - பூமியிலுள்ளவர்கள், கர்த்தபம் - கழுதை, அபராதம் - குற்றம்.

2. எண் நான்கு - முப்பத்திரண்டு, நல்+நா=நன்னு, வகைசேர் - பல வகையான, தொகைசேர் - தொகுதியான, பாவித்து - பொய்யாகக் காட்டுவது.

3. தேர்ந்து - ஆராய்ந்து, மனத்தாபம் - விரோதம், நகுலன் - கீரிப்பிள்ளை, மறைப்பொற்கொடி - பிராமணப் பெண்.

4. பொற்பு - அழகு, புத்திரர் - பிள்ளைகள், கரி - யானை.

5. சிற்றுணர்வோர் - அற்ப அறிவினை உடையோர், சிலுசிலுப்பர்-ஆரவாரம் செய்வார்கள், ஆன்று அமைந்த - நிறைந்து பொருந்திய, முற்றுணர்வோர் - முற்றும் கற்றவர், ஒண் கலம் - ஒளிபொருந்திய பாத்திரம், ஒலி - சத்தம்.

3. சதகத்திரட்டு

சதகம் – நூறுபாட்டு.

1. **குமரேசசதகம் :** கமலம் – தாமரை, திகழ் – விளங்கும், சனித்த – தோன்றிய, நேசம் – விருப்பம், புகல் அரிய – சொல்லுவதற்கு அருமையான, புனிதம் – தூய்மை, அபிடேகம்– முழுக்கு, சாற்றிய – சொல்லப்பட்ட, புலால் – மாமிசம், ஈனம் – குறைவு, வட்டம் – மேன்மை, விபூதி – திருநீறு, மெய்ஞ்ஞானம்– உண்மை அறிவு, புல்வயல் – ஓர்தலம், நீடு – நீண்ட.

2. **கைலாசநாதர் சதகம் :** கனல் – தீ, புனல் – நீர், சேதம் – அழிவு, அடம் – சண்டித்தனம், கடகயம் – மதயானை, கிரி – மலை.

3. **திருவேங்கட சதகம் :** மதுரம் – இனிமை, தனயர் – பிள்ளைகள், சற்சனர் – நல்லொழுக்கமுள்ளவர், புரவி – குதிரை,

தளபதி – தலைவன், பைந்தொடி (பசுமை+தொடி) = பசுமையான வளையலணிந்த பெண், பார்த்திபர் – அரசர், யூகம் – யுக்தி, கந்தம் – மணம் , கன வினயம் – சிறந்த இங்கிதம், வியோகி – துறவி, சுசி - சுத்தம், கன்மம் - செயல், வித்வசனம் - கற்றோர்.

4. **அறப்பளீசுர சதகம் :** தறிபட்ட - துண்டிக்கப்பட்ட, பழுது - குற்றம், சார் - பொருந்திய, சுவறிட - சுண்டிவிட, மதுரம் - இனிமை, கதிர்மணி - ஒளி வீசும் ரத்தினமும், மழுங்குதல் - மங்குதல், கறைபட்ட : கருமையான, பைம்புயல் - பசுமையான மேகம், கதிர் மதி – ஒளிவீசும் சந்திரன், கனம் - மேன்மை, மகிமை – பெருமை, காசினி - பூமி, அனுதினம் - தினந்தோறும்.

5. **கோவிந்த சதகம் :** மடுத்தால் - தடை செய்தால், மற்படுமோ - தடுக்கப்படுமோ, அச்சுதன், கோவிந்தன் - இறைவன் பெயர்கள்.

4. கதைப் பகுதி

சிங்கமும் முயலும்

1. குறுமுயல் - சிறிய முயல்; செறியும்-மரங்கள் அடர்ந்த; உறுவிலங்கு - பெரிய மிருகங்கள்; ஊன் - மாமிசம்; வெறி கொடு - வெறிகொண்டு; விலங்கு - மிருகங்கள்.

2. அடவி - காடு; விதத்தினில் - வகையில்: ஊண் - உணவு; ஆணை - கட்டளை; அருந்தி - உண்டு.

3. எடுப்பு - தந்திரம்; எடுத்து - செய்து; வினையை - செயலை; உய்ந்தோம் - பிழைத்தோம்; நனி - மிக்க; உய்யும் - பிழைக்கும்.

4. கடும்பசி - மிக்க பசி; பெருமதவேழமும் - பெரிய மதங்கொண்ட யானையும்; பிந்துவதில்லை காலம் கடந்து வருவதில்லை; சினந்து - கோபித்து.

5. வெய்ய - கொடிய; வெருவி - அஞ்சி; பையவே - மெல்ல; பருமுழை - பெரிய குகையில்; துய்ய - பரிசுத்தமானவனே; இறைஞ்சி - வணங்கி.

6. அங்கு+அதை=அங்கதை; பங்கம் - சேறு; புனல் - நீர்; பாழ்ந்துரவு - பாழான கிணறு; நிழல் உருவம் - பிரதிபிம்பம்.

7. உருநிழல் - பிரதி பிம்பம்; சத்துரு - பகைவன்; துன்னு - நிறைந்த; துளங்கி - நடுங்கி; உயிரிழந்து - இறந்து: உபாயம் - தந்திரம்.

5. பல்சுவை

1. வாழ்வு - செல்வமுடைய வாழ்க்கை; தாழ்வது - தரித்திரம்; தளர்வரோ - சோர்வு அடைவார்களோ; தக்கோர் - மேலோர்; ஊழ்வினை - விதி.

2. கலை - சாத்திரங்கள்; கரிசு அற - குற்றம் நீங்க; மன மயல் - மனத்தில் உண்டாகும் மயக்கம்; இலகிய - விளங்கிய; எழு நரகு - ஏழு பிறவியில் நரகம்.

3. மருவிய - பொருந்திய; கீர்த்தி - புகழ்; கருதியகருமம்- நினைத்த காரியம்; - கதி - மோட்சம்; சஞ்சாரப்பிணம் - நடைப் பிணம்.

4. மெய் - உண்மை; வையகம் - பூமி; போசனம் - உணவு; அற்பமாகும் - இல்லாமல் போகும்; நொய்யவர் - கீழ்மையானவர்.

5. களி - மகிழ்ச்சி; ஆனந்தக் கனவு - இன்பக் கனவு; உள் உருக்குதல் - மனத்தைக் கரைத்தல்; தமிழ்வாணி - தமிழ்க் கலைமகளே.

6. வைக்கோல் :- வாரி - கற்றையாக எடுத்து; களம் - நெற்களம்; கோட்டை - நெற்கோட்டை; போர் - வைக்கோல் போர்; பொலிவு - அழகு.

யானை :- வாரி - பகைவர்களைத் துதிக்கையால் பிடித்துத் தூக்கி; களம் - போர்க்களம்; போரில் - யுத்தத்தில்; கோட்டை- அரசனது கோட்டை; மால் - பெரிய; சீர் உற்ற - பெருமை பொருந்திய, செக்கோலமேனியான் - சிவந்த அழகிய உடலைப் பெற்றவன்; வரை - மலை.

7. வான்குருவி - தூக்கணங்குருவி; வல்அரக்கு - வலிய அரக்கு; தொல்கறையான் - பழைமையான கறையான் புற்று; தேன் - தேன் கூடு; சிலம்பி - சிலந்தியின் வலை; வல்லோம் - வல்லமை உடையோம்; எளிது - சுலபம்.

8. அன்னம் அது - சோறு, அன்னப்பறவை; மன்னுசிரம் கைக்கொண்டேன் - நிலைத்த சிரங்கைக் கொண்டேன், நிலைத்த பிரமகபாலத்தைக் கையில் கொண்டேன்; அரைச் சோமன் - பாதிவேட்டி, பிறைச்சந்திரன்; சடைமுறுக்கி - தலைமயிர் எண்ணெய் இடுதல் இல்லாமையால் சடையாக முறுக்குண்டு; சடா பாரத்தை வளைத்துக்கட்டி; மெய்கண்ட நீறு அணிந்து - உடம்பு

முழுவதும் (இரத்தம் குறைந்ததால்) வெளுத்து, உண்மை அறிந்த விபூதியைப்பூசி.

9. காடு எறியும் - காட்டு மரங்களை வெட்டும்; மறவன் - ஒரு சாதியான்; மல்ஆரும் - மல்லயுத்தம் செய்யும்; புயம் - தோள்; சூம்பல் - மெலிந்த தன்மையுடைய, வழங்காத - கொடுக்காத, கையன் - கையை உடையவன் வஞ்சகன், வள்ளல் - வரம்பில்லாமல் கொடுப்போன்; சொன்னேனுக்கு - சொன்ன எனக்கு; ஏகின்றேன் - போகிறேன்.

10. எழுது அரிது - எழுதுவது கடினம், பழுதுஅற - குற்றம் நீங்க, வாசிப்பு அரிது -வாசித்தல் கடினம், கற்பு அரிது - கற்றுக்கொள்வது கடினம், காண்பு அரிது - அறிந்துகொள்வது கடினம், கண்டக்கால் - அறிந்து கொண்டால், நிற்பு அரிது - நின்று ஒழுகுதல் கடினம்.

6. நாடு, மொழி

1. வாழ்த்து

தமிழ், தமிழர், தமிழ்நாடு வாழ்க
இன்னல் - துன்பம், மாய்க - அழிக.
வந்தெய்துக - வந்தடைக, தீது - தீமை.
நலிக - குறைந்துபோக, மறம் - பாவம்.
மடிவுறுக - இறந்தொழிக, வந்தேமாதரம் - தாய்க்கு வணக்கம்.

2. தமிழன் சிறப்பு

1. இனம் - கூட்டம், 2. பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி 3. கலைகள் -சாத்திரங்கள். 4. வெற்பு - மலை. ஒளிபண்ணும் - அழகு பெற்று விளங்கும். 5. தானம் - அறம், 6. சத்தியப்போர் - உண்மைப்போர், கடன் - கடமை, சாந்தம்- அமைதி.

3. கம்பர் பெருமை

1. பண்டை - முன்பு, பக்குவம் - செம்மை, கண்டின் - கற்கண்டின், கனிய - சுவைக்க, 2. போற்றிட - புகழ, புனைந் தோன் - இயற்றினேன், புவனம் - பூமி. ஆய்ந்து - ஆராய்ந்து, வாதிப்பிரதி - வழக்கிடுவோன், வழக்கிடப்பட்டோன்; வழக்கு - சண்டை. 4. பண்பு - இயல்பு. 5. மூவர் முடிவேந்தர் - சேர, சோழ, பாண்டியர். முத்தமிழ் - இயல் இசை நாடகம், பாவேந் தன் - கவிக்கு அரசன், தேவி - கலைமகள். 6. வள்ளல் - கொடை யாளி, நாமம் - பெயர், புவி - பூமி, என்றும் - எக்காலத்தும், நின்றிட - நிலைத்திருக்க. 7. நிதமும் - தினந்தோறும், கம்பன் + நாடு = கம்பநாடு.

4. தமிழ் மொழி

நிரந்தரம்-எப்பொழுதும், வண்மொழி-வளப்பமான மொழி. வைப்பு - இடம், உலகம், இசை - புகழ், என்று என்றும் - எக் காலத்தும்.

5 தாய் நாடு

1. எந்தை - என் தந்தை, குலாவி - மகிழ்ந்து, முந்தையர்- முன்னோர், சிந்தை - மனம், வந்தனை - வணக்கம்.

2. இன்உயிர் - இனிய உயிர், ஈன்று - பெற்று, மழலை - முதிராமொழி, கன்னியர் - இளம் பெண்கள், மென் உடல் - அழகிய உடல், போந்தும் - இருந்தும், வந்தே மாதரம் - தாய்க்கு வணக்கம், வணங்கேனே - வணங்குவேன்.

6. தமிழ் வளர்ச்சி

1. வெளியுலகில் - மேல்நாடுகள், கீழ் நாடுகள், சுவடி - ஏடுகள், செந்தமிழ்-செம்மையான தமிழ், செழுந்தமிழ் - வளப்ப மான தமிழ், எளிமை - சுலபம், காணிடவும் - வெட்கப்படவும்.

2. அடங்கலுக்கும் - அடங்கியுள்ளவற்றிற்கும், சலசல என - அதிகமாக என்ற பொருளில் வந்தது, சாய்க்காமை - சார்பு படுத்தாமல், இலவச நூற்கழகங்கள்-கட்டணம் இல்லாத நூல் நிலையங்கள், களைந்தோம் - நீக்கினோம், தகத்தகாய - தகுதி யான, தாபிப்போம் - நிலைநாட்டுவோம், வாரீர் - வாருங்கள்.

அருணா தமிழ்ப் பாடம்

முதற் படிவம்

[சிறப்புப் பகுதி]

ஆசிரியர்கள் :

அ. பாலசுந்தரம், பி. ஏ., எல. டி.;

தலைமை ஆசிரியர், போர்டு உயர்நிலைப் பள்ளி, ஆர்க்காடு

வித்துவான் ச. குரூஸ் அந்தோணி, எம். ஏ.,

தமிழ் விரிவுரையாளர், புனித சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை.

அருணா பப்ளிகேஷன்ஸ்
சென்னை-17.

முதற் பதிப்பு—அக்டோபர் 1955.

[All Rights Reserved]

Published by
Aruna Publications, Madras-17.

பாரதி பிரிண்டர்ஸ், 119, பிராட்வே, சென்னை-1.

பதிப்புரை

'அருணா தமிழ் பாடம்' என்னும் தமிழ்ப்பாடப் புத்தக வரிசையில் இந்நூல் முதல் படிவத்திற்கு ஏற்ற பொதுப் பகுதியாகும். அரசியலார் அளித்துள்ள பாடத் திட்டப்படி சிறந்த முறையில் இந்நூல் அமைந்துள்ளதாகும். வகுப்பிற்கு ஏற்றபடி மொழிவளம், சொல்லூட்டம், வாக்கிய அமைப்பு, தெளிந்த நடை, பொருட்செறிவு, ஆற்றொழுக்கு நடை முதலியன வாய்ந்து திகழ்வது இந்நூல். பாடந்தோறும் அருஞ்சொற்களும் பொருளும், சிறு விடைவினாக்கள், கட்டுரைப்பயிற்சி, இலக்கண அமைப்பு என்பன இணைக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்கட்குக் கல்வியில் ஆர்வத்தை மிகுவித்து, கற்றலில் ஊக்குவித்து, கட்டுரை எழுதும் தன்மையையும், திறனையும் அளிப்பனவாகும். இந்நூல் வரிசைகளைக் கற்கும் மாணவர் தெளிந்த தமிழறிவினைப் பெறுவர் என்பது ஒருதலை. கலாசாலைத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் இந்நூல் வரிசைகளைப் பள்ளியில் பாடப் புத்தகங்களாக்கி மாணவர்க்கு நன்மை செய்வதுடன், எம்மையும் இத்துறையில் ஊக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	தமிழ் மொழி	1
2.	நம் நாட்டு மேலோர்	10
3.	காவிரியாறு	18
4.	அச்சுத் தொழில்	25
5.	இளைஞர்கள் அறிவாராக	32
6.	வீர வர்த்தனன்	39
7.	பாண்டியன் நெடுஞ்செழியன்	45
8.	கவிமணி	51
9.	செய்யுள் பகுதி	59

1. தமிழ் மொழி

1. மக்கள் தம் உள்ளக் கருத்தைப் பிறர்க்கு வெளியிட்டுக் கூறுதற்கு மொழியைக் கருவியாகக் கொண்டுள்ளனர். மொழி, கருத்துக்களை ஏற்றிச் செல்லும் வாகனம் என்பர் ஆன்றோர். மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமைகள் பலவற்றுள் மிகச் சிறந்தது மக்கள் மொழியைப் பெற்றிருத்தலே.

" விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்."

என்று திருவள்ளுவர் நயம்படக் கூறியிருத்தலும் அறியத்தக்கதே. உலகில் மூவாயிரம் மொழிகளுக்கு மேல் வழங்குகின்றன என்பர் மொழிநூல் வல்லார். அவற்றுள் சில, எழுத்து வழக்கில் இல்லாமல் பேச்சு வழக்கில்மட்டும் உள்ளன. சில எழுத்து வழக்கும் பேச்சுவழக்கும் பெற்றிருந்தாலும், இலக்கணச் செறிவும் இலக்கிய வளமும் இல்லாமல் இருக்கின்றன. சிலமொழிகள் இலக்கிய வளம் பெற்றிருப்பினும் பேச்சு வழக்கில் இல்லை. சில, இலக்கியங்களைப் பெற்றுப் பேச்சு வழக்கில் இருப்பினும் இலக்கணவமைதி நன்கு பெற்றவையாகக் கூறுதற்கில்லை. ஒரு சில மொழிகள் பல மொழிகளினின்றும் சொற்களைப் பெற்று அமைந்துள்ளன. இவ்வாறு மொழிகள் பல திறப்பட்டனவாய் உலகில் வழங்குகின்றன.

2. தமிழ் மொழி எழுத்து வழக்கினும் பேச்சு வழக்கினும் உள்ளதாய்த் தனக்கே உரிய இலக்கண

வமைதியும் இலக்கிய வளமும் நன்கு பெற்று அமைந்துள்ளது. தெய்வத்தன்மை வாய்ந்த தூய்மையான மொழி தமிழ் மொழி. தனித்து இயங்கும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உள்ளது. ஆதலால் தமிழ்மொழி உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்றெனக் கூறுவர் நல்லோர். மற்றும் தமிழ்மொழி மென்மையும், சொல்வன்மையும், ஆழமும், நிறைவும் செறிவும் அமைந்து இனிமை பயக்கும் மொழி. 'தமிழ் என்பது இனிமை நீர்மை;' 'தமிழ் தழீஇய சாயலவர்' என்று கூறுவர் நல்லோர். தமிழ் மொழியைக் கூறுங்கால் சான்றோர்கள், தீந்தமிழ், தண்டமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், நற்றமிழ், கன்னித் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், பூந்தமிழ், தேன்றமிழ், தெய்வத்தமிழ் என்று அடைமொழி கொடுத்தே கூறுவர்.

3. தமிழ்மொழி மிகத் தொன்மையானது. தமிழ் மொழியில் இன்று காணப்படும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றியது என்றும், அதற்கும் பல நூற்றாண்டு களுக்கு முற்பட்டது என்றும் அறிஞர் கூறுவர். அவ்வாறான செம்மை வாய்ந்த, முற்ற முடிந்த இலக்கண நூல் தோன்றுதற்குத் தமிழ்மொழி எவ்வளவு பழமையானதாக இருத்தல் வேண்டும் என்பதும், இலக்கணம் தோன்றுதற்கு ஏற்றவாறு இலக்கியங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் புலனாகும். எனவே தமிழ் மொழியின் தொன்மை வரம்பிட இயலாதது. தொல்காப்பியத்திற்கு முன்பு தோன்றிய நூல்கள் கடலால் கொள்ளப்பட்டன என அறிகிறோம்.

4. தமிழ் மொழி, இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்று வகைப் பாகுபாட்டினைக் கொண்டது. உரை நடையும் செய்யுட்களும் கொண்டது இயற்றமிழ். இலக்கணமும் இதன்கண் அடங்கும். செய்யுட்கள் பண்ணோடும் பாணியோடும் பாடப் பெறுதல் இசைத்தமிழ். கீர்த்தனங்களும், சிந்துகளும், தெம்மாங்குகளும் வரிப் பாட்டுக்களும் இசைத் தமிழினைச் சார்ந்தனவே. நாடகத் தமிழ் என்பது கற்றறிவில்லா மக்களுக்கு அறிவு புகட்டப் பயன்படுவதாகும். இதன்கண் இயலும், இசையும் உண்டு. மற்றைய இரண்டும் கற்றோர்க்குச் செவிப்புலன் ஒன்றிற்கே இன்பம் தரும் நாடகத் தமிழ் கற்றோர்க்கும் மற்றோர்க்கும், செவி, கண் என்னும் இரு புலன்களுக்கும் இன்பம் தரும். தமிழ் மொழி இத்தகைய முத்திறப் பாகுபாட்டினைக் கொண்டமையால் 'முத்தமிழ்' என்றும் கூறுவாராயினர். ஔவையார், "பாலும் தெளிதேனும்" என்ற செய்யுளில், "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று விநாயகரை வேண்டுதல் இங்கு அறிக.

5. தமிழ் மொழியைப் பேசும் மக்கள் தமிழர் எனப்படுவர். தமிழ் வழங்கும் நிலம் தமிழகம் என்றும், தமிழ்நாடு என்றும் கூறப்படும். தமிழ்நாடு இப்பொழுது இருக்கும் அளவினதாய்ப் பண்டு இல்லை. தமிழ் மொழி இமயம் முதல், குமரிமுனைக்கும் தெற்கே இருக்கும் குமரிக் கண்டம் வரையிலும் பரவி இருந்தது. இக்காலத்தில் இந்துப்பெருங் கடலாக இருப்பது முன்னொரு காலத்தில் நிலப்பரப்பாக இருந்தது. அதனைக் குமரிக் கண்டம் என்று அழைத்தனர். அப்பகுதி கடலால் கொள்ளப்பட்டது.

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள"

என்பதனுல் அறியலாம்.

6. தமிழ் நாட்டினைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆண்டனர். அவர்களுள் பாண்டியர் என்பார், வழிவழியாகத் தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தனர். பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கங்கள் நிறுவிப் புலவர்களைக் கொண்டு மொழியைச் செப்பம் செய்தனர். அதனுல் தமிழ் செந்தமிழ் என்றும், நாடு செந்தமிழ்நாடு என்றும் பெயர் பெற்றன. முன்பு பாண்டியர்களால் வளர்க்கப்பட்ட மூன்று சங்கங்கள் இருந்தன. அவை தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்பன. அச் சங்கங்களில் மன்னர்களும் புலவர்களும் இருந்து பல நூல்களைச் செய்தனர். முதற் சங்கம் கபாடபுரத்திலும், இடைச் சங்கம் தென்மதுரையிலும் இருந்தன. அவ்விரு நகர்களும் கடலால் கொள்ளப்பட்ட குமரிக்கண்டத்திலிருந்ததால் அழிந்தன. கடைச் சங்கம் இப்பொழுது விளங்கும் மதுரையில் இருந்தது. கடைச் சங்கம் இன்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுன்பு இருந்ததாகும். முதற் சங்கத்தில் அகத்தியரும், இடைச்சங்கத்தில் தொல்காப்பியரும், கடைச்சங்கத்தில் நக்கீரரும் தலைமைப்புலவர் பெருமக்களாக விளங்கினர் என்பர்.

7. கடைச் சங்க காலத்தில் தொகுக்கப் பட்ட நூல்கள் சில உள்ளன. அவையே சங்கத் தொகை நூல்கள் என்று கூறப்படுவன. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை

நூல்கள் கடைச் சங்ககாலத்தில் தொகுக்கப்பட்டன. இத் தொகை நூல்கள் யாவும் மிகச் சிறந்தன. உலகம் போற்றும் பொதுநூலான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கடைச்சங்க காலத்திற்குப் பின் சீவக சிந்தாமணி, சிலப் பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என் னும், ஐம்பெருங்காப்பியங்களும், யசோதர காவியம், நாக குமாரகாவியம், சூளாமணி, பெருங்கதை என்னும் நூல்களும், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம், பாரதம், பாகவதம், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், நளவெண்பா, நைடதம் முதலான நூல்களும், பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, உலா, கோவை, பரணி, மாலை, சதகம் முதலான பிரபந்தங்கள் பலப்பலவும், தலபுராணங்களும் காலத்திற்கு ஏற்பத் தோன்றி மொழியை வளப்படுத்தின. நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், புறப்பொருள், அகப்பொருள் என்னும் இலக்கண நூல்கள் பலவும் தோன்றின.

8. இக்காலத்தில் உரை நடை நூல்கள் பலவாகப் பல்கின. எனினும் தேசிய கவி சுப்பிரமணியபாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, கவிஞர் புதுவை பாரதிதாசன், சுத்தானந்த பாரதியார் முதலானோர் காலத்திற்கேற்ப எளிய இனிய பாடல்களை இயற்றி மக்களுக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டு புரிந்து வருகின்றனர். டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், சங்க நூல்கள் பலவற்றையும் பிழையறப் பரிசோதித்துத் திருத்திச்

செப்பமாக அச்சிட்டு உதவியுள்ளார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், .ரா. ராகவையங்கார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், முதலானவர்கள் சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதியளித்துள்ளனர். நாம் தாய் மொழியான தமிழை, இளமை முதல் சிறப்பாகப் பிழையறக் கற்றுச் சங்க நூல்களையும் பிற நூல்களையும் படித்து இன்புறுவதோடு தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் நம்மாலான தொண்டினைச் செய்து மகிழ்வோமாக.

1. அருஞ்சொற்களும் பொருளும்

இலங்கு – விளங்கும்
விலங்கு – மிருகம்
ஏனையவர் – மற்றகல்லாதவர்
வழக்கு – உலகில் நடைபெறு பெறுதல்
செறிவு – நெருக்கம்
அமைதி – அமைப்பு
பண்டு – முன்பு
கோடு – மலையுச்சி
பெருமக்கள் – மேலோர்
பிரபந்தம் – சிறுநூல்கள்
தழீஇய – தழுவிய
நயம்பட – சிறப்பாக, அழகாக
சாயலவர்–வடிவினையுடையார்
அடைமொழி – சிறப்பைவிளக்குஞ்சொல்
தொன்மை – பழமை
வரம்பிட – எல்லைசெய்ய
பாகுபாடு – பிரிவு
பன்மலைஅடுக்கம் – பலமலைத் தொடர்கள்
பரிசோதித்து – ஆராய்ந்து

2. சிறுவிடை வினாக்கள்

1. மொழி எதற்குப் பயன் படுகிறது?
2. மொழியை என்ன என்று கூறுவர்?
3. கற்றோர் கல்லாரைப் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?
4. உலகில் எவ்வளவு மொழிகள் உள்ளன? எத்தகையன?

5. தமிழ்மொழி எத்தகையது? அதன் சிறப்பு என்ன?
6. தமிழ்மொழியைப் புலவர்கள் எவ்வாறு கூறுவர்? ஏன்?
7. தொல்காப்பியத்தின் காலம் யாது? அதனுல் அறிவது என்ன?
8. தமிழ்மொழியின் பாகுபாடுகள் யாவை? விளக்கு.
9. நாடகத்தமிழின் சிறப்பியல்பு யாது?
10. முத்தமிழ் யாவை?
11. 'சங்கத் தமிழ் மூன்றும் தா'; யார் யாரைக் கேட்பது? பாட்டு முழுவதையும் தெரிந்து எழுது.
12. தமிழகம் என்று கூறப்படுதைப்பற்றி அறிவதென்ன?
13. பாண்டியர் சிறப்பு யாது?
14. முச்சங்கங்களைப்பற்றி அறிவது என்ன?
15. சங்கத்தொகை நூல்கள் எவை? விளக்கு.
16. பின் தோன்றிய காப்பியங்கள் பிறநூல்கள் யாவை?
17. பிரபந்தங்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறு.
18. பிற்காலத்தில் தோன்றிய இலக்கணங்கள் யாவை?
19. இக்காலப் புலவர் பெருமக்கள் யாவர்? என்ன செய்கிருர்கள்?
20. ஆராய்ச்சி நூல்களை எழுதியோர் யாவர்? உ. வே. சாமிநாதய்யர் என்ன தொண்டு செய்துள்ளார்?

3. கட்டுரைப் பயிற்சி

கட்டுரை எழுது:

1. மொழியும் பயனும்
2. தமிழ் மொழி
3. பாண்டியரும் தமிழும்
4. தமிழின் தொன்மையும் சிறப்பும்

குறிப்பு

சங்கத் தொகை நூல்கள்:

1 எட்டுத்தொகை	2 பத்துப்பாட்டு
1. நற்றிணை	1. திருமுருகாற்றுப்படை
2. குறுந்தொகை	2. சிறுபாணுற்றுப்படை.

3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

3. பெரும்பாணாற்றுப்படை
4. பொருநராற்றுப்படை
5. மதுரைக்காஞ்சி
6. பட்டினப்பாலை
7. முல்லைப்பாட்டு
8. நெடுநல்வாடை
9. குறிஞ்சிப்பாட்டு
10. மலைபடுகடாம்

3. பதினெண் கீழ்க்கணக்கு:

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணைமொழி ஐம்பது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக் கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்ச மூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை

4. இலக்கணம்

நாம் பேசுகிறோம்; எழுதுகிறோம்.

பேசும் பொழுது ஒலியினால் எழுத்துக்களை உச்சரிக்கிறோம். ஒலிக்கப்படுவது ஒலி.

ஒலிக்கப்பட்டு எழுதப்படுவதற்குக் காரணமாயிருப்பது ஒலியெழுத்து.

எழுதப்படுதலால் எழுத்து எனப்பட்டது.

நாம் ஒலிக்கும் சொற்கள் பல எழுத்துக்களால் ஆயவை.

அவ்வொலிகளுக்கு வரிவடிவம் அளிக்கிறோம்.

அந்த வரிவடிவமே வரி எழுத்து.
ஒலி எழுத்து அருகிலுள்ளவர்கட்கே பயனாகும்?
வரியெழுத்து மிக்க தூரத்திலுள்ளவர்கட்கும் நம் கருத்தைத் தெரிவித்தற்குப் பயனாகும்.

பயிற்சி

1. ஒலி எழுத்து, வரியெழுத்து ; விளக்கு.
2. வரி எழுத்து என்பது யாது? பயன் யாது?

2. நம் நாட்டு மேலோர்

1. பாரத நாடு பழம்பெருமை படைத்த நாடு. இந் நாடு எல்லாவகை நலன்களும் பெற்றுச் சிறந்து விளங்கு வதாகும். இயற்கை யெழிலும், செயற்கை வளனும் சிறந்தது இந்த நல்லநாடு. நவதானியங்களும், பொன் னும் மணியும் கிடைக்கும் குன்று வளமுடையது நம் பாரதநாடு. கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலான வற்றிலும் மிகச் சிறந்து விளங்குவதும் நம் நாடே. ஆன்மஞானத்தை உலகத்திற்கே ஊட்டும் புத்தர், வர்த்தமான மகாவீரர், சங்கரர், மத்வர், இராமநுஜர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், தாயு மானவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், கபீர்தாஸர், துளஸிதாஸர் போன்ற அரிய மகான்களை ஈன்ற புண் ணிய நாடும் இதுவே. திருவள்ளுவர், கம்பர், காளி தாஸர் போன்ற சிறந்த கவிகளைப் பெற்று வளர்த்த பேறு பெற்றதும் இந்த நல்ல நாடே.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் னனிசிறந் தனவே"

என்னும்ஆன்றோர்மொழி அருமை பெருமை வாய்ந்தது.

2. இந்நாட்டின் எழிலையும் செல்வத்தையும் கண் ணுற்று அந்நியர் பலர்கைப்பற்றி ஆட்சிபுரிய மேவினர். அவர்களுள் இறுதியாக வந்தவர் ஆங்கிலேயர். ஆங்கி லேயர் ஆட்சியில் இந்தியா ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியால்அடைந்த நன்மைகள் பல உளவேனும் தீமைகள் இல்லாமல்

இல்லை. ஆங்கிலேயர் இந்தியர்களின் கைத்தொழிலை ஒடுக்கி, யாவற்றிற்கும் மேனாட்டையே எதிர்நோக்கி நிற்குமாறு செய்துவிட்டனர். இந்தியாவில் மூலப் பொருள்கள் கிடைத்தும் அவற்றைக்கொண்டு இந்நாட்டிலேயே வேண்டும் பொருள்களைச் செய்துகொள்ள விடாமல் மூலப்பொருள்களைக் கொண்டு, தேவைப்படும் பொருள்களை ஆக்கி, இந்நாட்டில் கொண்டுவந்து விற்றனர். ஆடைக்கும் அவர்களையே எதிர்நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வி பரவியதில் ஒருசில நன்மைகள் விளைந்தனவேனும் மக்கள் மனம் மாறி, மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கினர். ஜனத்தொகை பெருகியும் வேளாண்மைக்குரிய நெறிகள் விருத்தியாக்கப்படவில்லை. இவற்றை எல்லாம் உணர்ந்த ஆன்றோர் இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க எண்ணினர். அதன் காரணமாகத் தோன்றியதுதான் காங்கிரஸ் மகா சபை.

3. காங்கிரஸ் மகாசபையில் இந்தியாவில் இருந்த சான்றோர் பலர் சேர்ந்து உழைக்கலாயினர். அன்னார், அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டுமக்களுக்கு உணர்ச்சியூட்டினர்; ஆங்கில அரசாங்கத்தாரை இந்தியாவிற்குச் சுதந்தரம் அளிக்குமாறு பலவாறு நெருக்கினர். அதற்காக அடிபட்டும், சிறைபட்டும், பொருளிழந்தும் உயிரிழந்தும் துன்பமுற்றனர். அப்போராட்டத்தை இறுதியாக நடத்தி வெற்றிபெற்றவர் மகாத்மா காந்தியடிகள் ஆவர். அவருக்கு உறுதுணையாய் நின்று, இன்பதுன்பங்களைத் தாங்கி நின்றோர் பலர். அவர்களுள் பண்டித ஜவாஹர்லால் நேஹ்ரு, ஸர்தார் வல்லபபாய் படேல், ஸ்ரீ ராஜேந்திர பிரசாத், ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் என்பார் மிகவும் முக்கியமானவர்கள்.

4. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி இந்தியா அந்நியராட்சியினின்று விடுதலைபெற்றுச் சுதந்தரம் பெற்றது. இத்தகைய சுதந்தரத்தை இதற்கு முன் எந்த நாடும் இம்முறையில் பெற்றதில்லை. கத்தி இன்றி, இரத்தம் இன்றிச் சாத்துவிகப் பெரும்போர் நடத்தி இந்தியர் தம் பண்பாட்டினால் பெற்ற சுதந்தரமாகும். ஆங்கிலேயர் ஒன்றும் செய்தற்கு இயலாதவராய்த் தாமே சுதந்தரத்தை வலியக்கொடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. மகாத்மா காந்தியடிகளின் ஆத்ம சக்தியும், உண்மையும், நேர்மையும், சீலமும், உறுதியும், நிதானமும் அறிந்துத ஆங்கிலேயர் சுதந்தரத்தை அளித்துச் செல்லவேண்டிய நிலையை உண்டாக்கியது. காந்தியடிகள் தம் நாட்டிற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த உத்தமர். அவரை இந்திய மக்கள் என்றும் மறவார் என்பது உறுதி.

5. புதிதாக உரிமை பெற்ற இந்தியா நாட்டில் தோன்றிய இடையூறுகள் பலப்பல. இன்னல் பல. அவற்றால் மக்களுக்கு உண்டாகிய துன்பங்களும் துயரங்களும் பலப்பல. பொருள் முட்டுப்பாடு ஒருபுறம், வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறம். இவ்வாறாக இன்னலுற்ற இந்தியாவை இவற்றையெல்லாம் சீர் ஆக்கித் தாங்கிநிற்குமாறு செய்ய, அறிவுத்திறனும், கூர்த்த மதியும், ஓயாத உழைப்புமுள்ள நேரு, படேல், ராஜாஜி பிரசாத் என்பார், நடுக்கடலில் புயற்காற்றால் அலைப்புண்டு அலமரும் மரக்கலத்தைத் திசை ஒன்றின்றி நடத்திச் செல்லும் மாலுமி போன்று, அரசியல் நடத்துவாராயினர்.

6. நேரு சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சர் ஆனார். இவர் அறிவுத்திறன், சொல்வன்மை, ஓயா உழைப்பு முதலான பண்புகளைப் பெற்றவர். இவரு டைய ஆட்சிச் சிறப்பால் இந்தியா பலவித இடையூறும் தாங்கி நின்று கடந்து, மேனாட்டாரும் வியக்க, முன்னே றிக்கொண்டு வருகிறது. இவருடைய உழைப்பு இந்தி யாவிற்குமட்டுமன்றி ஆசிய நாட்டிற்கே நலம் பல விளைக்கின்றது. வேற்று நாட்டார்களும் இவரைப் போற்றி மதிக்கின்றனர். இவர் காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றியவராய், உலக சமாதானத் திற்கே வழி வகுப்பவராய், உலகத்திற்கே தவப்புதல்வ ராய், விளங்குகிறார். இவருடைய அரசியல் நிர்வாகத்தி னால் இந்தியா பல்லாற்றானும் முன்னேறி உலகிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது. இவர் "காந்தியடி கள் நமக்கு அளித்துள்ள சத்தியம், நேர்மை, அஹிம்சை என்ற ஆயுதங்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு வோமாயின், இந்திய நன்னாடு கல்வி, கலை, நாகரிகம், கைத்தொழில், பொருள்வளம் அரசியல் என்பனவற் றில் முன்னேறி இமயச் சிகரம்போல் உயர்ந்து விளங் கும். மற்றும், உலகிற்கே வழிகாட்டியாக விளங்கும்." என்று கூறி நாட்டினை முன்னேற்றப் பாதையில் நடத் திச் செல்கின்றார். இவர் நீடு வாழ்க!

7. மலை கலங்கினும் மனங்கலங்காத பெரு வீரர் ஸர்தார் வல்லப பாய் படேல். இவரை 'இரும்பு மனிதர்' என்றும் கூறுவர். தகுதிக்கேற்ற பெருமை வாய்ந்தவர் இவர். உறுதியும், அஞ்சா நெஞ்சமும், தீர ஆயும் திற னும், செயலாற்றும் வன்மையும் ஒருங்கே படைத்தவீரர் வல்லபபாய் உள் நாட்டு மந்திரியாய்ப் புரிந்த தொண்டு

பிறர் எவரும் செய்ய முடியாததாய், வியக்கும் தன்மை வாய்ந்ததாகும். இரட்டை ஆட்சியை மேற்கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சியில் இந்தியா பல வேறு சிறு சிறு சமஸ்தானங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அச்சமஸ் தானாதிபதிகள் ஒற்றுமையின்றி வாழ்ந்தது ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் வேரூன்றி நிற்கக் காரணமாயிற்று. ஸர்தார் வல்லபபாய் படேல் அதனை நன்கு உணர்ந்து சிதறுண்டு கிடந்த ஐந்நூற்றறுபது சமஸ்தானங்களை ஒன்றுபடுத்தி இந்தியக் குடியரசுடன் சேர்த்தார். இச் செயல் பிறர் எவரும் செய்ய முடியாது செயற்கரும் செயல் அன்றோ! புதிய பாரதப் படைப்பின் தலைவரான பிரமன் வல்லபபாய் படேல் ஆவர். இவர் தீநெறிச் செல்வோரையும் நாட்டின் நலனை அழிப்பவர்களையும் இரக்கமின்றிக்கண்டித்து ஒடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர். சுதந்தரம் பெற்ற நாள் முதல் இந்தியா அடைந்த இன்னல்களை நீக்கிக் காத்த பெருமை இவர்க்கு உண்டு. அதனாலன்றோ இவர்க்கு 'ஸர்தார்' என்ற பட்டமும் முன்னரே அளிக்கப்பட்டது.

8. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கடைசிக் கவர்னர் ஜனரல் ஆக விளங்கியவர். இவரை மக்கள் 'ராஜாஜி' என்று அழைப்பர். இவர் நுண்மதி வாய்ந்தவர். இவர் ஆட்சி முறையிலும் நாட்டு நிலைக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்து நாட்டையும் மக்களையும் முன்னேற்று வதிலும் திறமை வாய்ந்தவர். இவரைக் கலக்காமல் காந்தி, படேல், நேரு என்பவர் ஒரு காரியமும் செய்யார் என்றால், இவர் திறனையும் நுண்ணறிவையும் என் என்று கூறுவது?

9. இராஜேந்திர பிரசாத் இந்தியாவின் ஜன நாயக ஆட்சித் தலைவர். இவர் பொறுமையும், செயல் திறனும், அறிவு மேம்பாடும், யாவரோடும் அன்பு பொங்கக் கலந்து பழகும் பண்பாடும், சமநிலை மனப் பான்மையும், படைத்தவர். இவற்றாலன்றோ இவர் இரண்டாம் முறையும் ஜன நாயக ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். இந் நால்வரில் ஸர்தார் படேல் இவ் வுலக வாழ்வை விட்டகன்றார். மற்றை மூவரும் இந் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவருகின்றனர். இவர்களுக்குக் காந்தியடிகளின் ஆத்மசக்தி வழிகாட்டிச் செல்கின்றது. இவர்களுடைய தலைமையில் நாடு பல வகையிலும் முன்னேற்றமுற்று விளங்கும் என்பது ஒருதலை. இந்தியா மக்களாகிய நாம் இவர்கள் கூறும் மொழிகளின்படி நடந்து, இவர்களுக்குத் துணையாய் நின்று, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடு படுவோ மாக.

அருஞ்சொற்களும் பொருளும்

எழில் – அழகு
ஆன்மஞானம் – தத்துவ அறிவு
அர்ப்பணம் – அளித்தல்
மாலுமி – கப்பலோட்டி
சிகரம் – மலையுச்சி
சாத்விகம் – அமைதியான குணம்
சீலம் – ஒழுக்கம்
கூர்த்த – கூர்மையான
இடையூறு – நடுவில் வரும் துன்பம்
சமஸ்தானாதிபதிகள் – சிறு அரசர்கள்

சிறுவிடை வினாக்கள்

1. பாரதநாட்டின் பெருமைகளை விளக்கு.
2. அரிய மகான்கள் சிலர் பெயரைக் கூறு.

3. எவை மணி சிறந்தன? எவற்றினும்?
4. இந்தியா ஆங்கிலேய ஆட்சியில் அடைந்த குறைபாடு என்ன?
5. காங்கிரஸ் சபை ஏன் தோன்றியது? செய்தது என்ன?
6. நாட்டு விடுதலைக்கு உழைத்தோர் யாவர்? இவரைக் கூறு.
7. காந்தியடிகள் செய்த தாய்நாட்டுத் தொண்டு யாது? சிறப்பு யாது?
8. 'நடுக்கடலில் புயல்காற்றால் அலைப்புண்டு அலமரும் மரக்கலத்தைத் திறமை ஒன்றின்றி நடத்தி செல்லும் மாலுமி போன்று' - சந்தர்ப்பம் தந்து விளக்கு.
9. நேருவின் தொண்டினையும் சிறப்பியல்களையும் விளக்கு.
10. இரும்பு மனிதர் யார்? எத்தகையார்? செய்த அருஞ் செயல் யாது? பெற்ற பட்டம் யாது?
11. இராஜாஜி யார்? அவரைப்பற்றி என்ன அறிகிறாய்?
12. இராஜேந்திர பிரஸாத் என்பவரைப்பற்றி அறிவ தென்ன?

கட்டுரை வினாக்கள்

கீழ்வரும் தலைப்பு அமைத்துக் கட்டுரை எழுது:

1. இந்தியா சுதந்தரம் பெற்றது.
2. காந்தி, நேரு, படேல், ராஜாஜி, பிரஸாத். (தனித் தனியாக)
3. ஆங்கில ஆட்சியால் இந்தியாவிற்கு உண்டான நன்மை தீமைகள்.

இலக்கணம்

ல, ள, ற, ர, ன, ந, ண, ழ, ய என்னும் எழுத்துக்கள் உச்சரித்துப் பழகுதற்கு உரியன. இவை வந்துள்ள பல சொற்களைப் பயின்று பழகுக.

ஒவ்வோர் எழுத்தும் வருமாறு ஒவ்வொன்றிற்கும் ஐந்து ஐந்து வார்த்தைகள் எழுது.

உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களை எழுது.

உயிர் - 12. குறில் - 5. அ, இ, உ, எ, ஒ.
நெடில் - 7. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

மெய் - 18. வல்லினம் - 6. க், ச், ட், த், ப், ற்.
மெல்லினம் - 6. ங், ஞ், ண், ந், ம் ன்.
இடையினம் - 6. ய், ர், ல், வ், ழ், ள்.

உயிர்மெய் - 216. க்+ஆ=கா.
இதேபோன்று பதினெட்டு மெய்ம்மீதும் பன்னிரண்டு உயிரும் தனித்தனி ஏற உயிர்மெய் 216.

ஆய்தம் - 1. ஃ

பயிற்சி

1. உயிர் எழுத்து எத்தனை? பிரிவுகளை எழுது.
2. மெய் எழுத்து எத்தனை? பிரிவுகளை எழுது.
3. உயிர்மெய் எழுத்து எத்தனை? எப்படி?
4. ஆய்த எழுத்து எத்தனை? வடிவம் என்ன?

3. காவிரி யாறு

'ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்' என்பர். ஒரு நாடு வளம் பெறுவதற்கு அந்நாட்டின்கண் உள்ள ஆறுகளே காரணமாகும்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு"

என்றார் திருவள்ளுவர். அதனில் 'வருபுனல்' என்றது மலையில் உற்பத்தியாகும் ஆற்றினையே குறிப்பதாகும். இந்தியா என்னும் நம் நாட்டில் கங்கை, சிந்து, பிரமபுத்திரா, யமுனை, மகாநதி, தபதி, நர்மதை, கோதாவிரி, கிருஷ்ணை, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வையை, தாம்பிரபரணி முதலான பேராறுகள் ஓடுகின்றன. இவையே அன்றிப் பல சிற்றாறுகளும் உண்டு.

2. காவிரியாறு என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் உற்பத்தியாகிறது. அது பிறக்கும் இடத்திற்குத் தலைக்காவிரி என்று பெயர். காவிரியாறு மலை நாட்டின் வழியாகவே ஓடி, மைசூர் ராஜ்யத்தையும் கடந்து, சேலம், கோயம்புத்தூர், திருச்சி தஞ்சை ஜில்லாக்களில் பாய்ந்து கடலோடு கலக்கிறது. அது சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு எல்லையாக அமைந்துள்ளது. காவிரியாறு ஐந்நூறு மைல் நீளம் உடையது. காவிரியாறு வற்றாத ஜீவநதி. கோடைக் காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும்

மழையாலும், ஆறு ஓடி வரும் பகுதியில் மழைக் காலத்தில் பெய்யும் மழையாலும் எக் காலத்திலும் நீர் நிறைந்ததாக வுள்ளது காவிரியாறு. அதனால்,

'வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைஇய கடற் காவிரி'

என்று போற்றிக் கூறுவாராயினர். 'பொன்னி என்னும் பொய்யாக் குலக்கொடி' என்றும் புகழ்ந்து கூறுவர். சோழ நாட்டின் செவிலித்தாய் என நாவாரக் கூறுவர். காவிரியின் நீர் வளத்தால் வளம் சுரந்து விளங்கும் சோழநாட்டை நீர் நாடு, பொன்னிநாடு, காவிரி நாடு என்றெல்லாம் கூறுவர். கங்கை நாட்டைக் கூற வந்த கம்பர். 'காவிரி, நாடன்ன கழனி நாடு' என்று கூறுவாரானர். தொண்டரடிப் பொடி யாழ்வார் என்ற பெரியார், 'கங்கையிற் புனிதமாய காவிரி,' என்று தம் புனித வாயால் புகழ்ந்து கூறியுள்ளார்.

3. இக்காவிரி நதிக்கு ஹேமவதி, பவானி, நொய்யல், அமராவதி என்னும் ஆறுகள் கிளை நதிகளாக அமைந்துள்ளன. அக் கிளைநதிகளும் நீர் நிறைந்தோடும் ஆறுகளே. இவற்றுள் அமராவதியை ஆன்பொருநை என்று அழைப்பதும் உண்டு. அமராவதி நதிக் கரையில் அமைந்த கரூர் வஞ்சி என்னும் மறு பெயர் உடையது. அவ்வூர் சேரமன்னர்களில் ஒரு கிளையினருக்குத் தலைநகராக இலங்கியது. குடகு நாட்டிலிருந்து புறப்பட்டுவரும் காவிரியாறு தமிழகத்தில் புகுங்கால், புகுமிடத்திலிருந்தே கரையின் இரு மருங்கிலும் கிராமங்கள் பலவற்றையும் கொண்டது. மற்றும், காவிரி

யின் இரு கரையிலும் சைவ வைணவத் தலங்களையும் காணலாம். மக்களிடம் தெய்வ பக்தியும் ஒழுக்கமும் நிரம்பி யிருத்தற்குக் காரணம் ஆற்றின் நீரொழுக்கே ஆகும் எனின் குற்றமின்று. விண்முட்டும் கோயில்களின் கோபுரங்களைக் காவிரியின் இருகரையிலும் காணுங்கால் தெய்வ நம்பிக்கை இல்லாதவர்க்கும் அக்காட்சி இன்பம் பயக்கும். காவிரியைத் தெய்வப் பொன்னி என வாயார வாழ்த்தத் தோன்றும். காவிரியில் நீராடிக் கடவுள் பூசை புரியும் எண்ணம் தோன்றும். இருகரை மருங்கிலுமுள்ள சோலைகளும், தோப்புக்களும், பசுமை படர்ந்த பழனங்களும் அளவிலா இயற்கைக் காட்சியை அளித்துக் கண்களையும் உள்ளத்தையும் மகிழ்விக்கும். பூவிரி சோலைகளையும், பொழில்களையும், தோப்புக்களை யும், கழனிகளையும் ஊடுருவிப் பெருக்கிக் கொண்டே பாய்ந்தோடுதலால் போலும் காவிரி என்று பெயர் வந்ததோ, என்று எண்ணவும் இடமுண்டு. கா + விரி— சோலைகளை விரித்துக்கொண்டு செல்வது.

4. காவிரி விவசாயத்திற்கு மிகவும் பயன் படுகிறது. காவிரி சிவ சமுத்திரம் என்னும் இடத்தில் உயரத்திலிருந்து கீழே விழுகிறது. அதனைச் சிவசமுத்திர நீர் வீழ்ச்சி என்பர். அந் நீர்வீழ்ச்சியினின்றும் மின்சாரம் எடுக்கப் படுகிறது. அந்த மின்சாரம் மைசூர் சமஸ்தானத்தில் பயன்படுத்தப்படுகிறது. காவிரியாற்றின் நீர் வீணாகக் கடலில் சென்று கலவாதபடி, பல அணைக்கட்டுக்கள் உள்ளன. வடக்கே ஹேமாவதியும் தெற்கே இலட்சுமண தீர்த்தமும் கலக்குமிடத்தில் கிருஷ்ணராஜ சாகரம் என்ற அணைக்கட்டு அமைந்துள்ளது. அங்குக் கடல்போல் நீர் தேங்கி இயற்கை வசதிகள் மிகுந்து

காணப்படுகிறது. அணையின்முன்னே ஒரு புறத்தில் காவிரியன்னையின் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அச்சிலை தன் கைகளால் காவிரி நீரை அள்ளி மக்களுக்கு வழங்குவதுபோல அமைந்துள்ளது. நீர்த் தேக்கத்தி லுள்ள நீர் அணையை ஊடுருவிக் கொண்டு காவிரியன்னை யின் கைகளிலிருந்து எப்பொழுதும் பெருகிக் கொண் டிருப்பதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்ணம்பாடி அணைக்கட்டு என்பர்.

5. மேட்டூருக்கு அருகில் காவிரியாறு இருமலை களுக்கு இடையில் பள்ளத்தாக்கின் வழியாகப் பாய்ந் தோடி வருகிறது. இருபக்கங்களிலுமுள்ள மலைகள் காவிரிக்கு அமைக்கப்பட்ட கரைகள்போல் காட்சி யளிக்கின்றன. அங்குள்ள நிலப்பகுதியும் மிக்க ஆழ முடையதாக உள்ளது. இரண்டு மலைகளும் ஓரிடத்தில் ஒன்றை ஒன்று நெருங்குவனபோல அமைந்துள்ளன. அங்கு ஓர் அணையை அமைத்துப் பெரிய நீர்த் தேக்கம் உண்டாக்கினல், காவிரியின் நீர் கடலில் வீணில் சென்று கலவாமலும் வெள்ளம் மிக்க காலத்தில் நிலப்பகுதி கட்கு அழிவு நேராமலும் காக்கலாமன்றோ! அதனுல் சோழ நாட்டின் வேளாண்மைத் தொழிலும் விருத்தி யடையும். இவற்றையெல்லாம் கருதி மேட்டூர் அணை அமைக்கப் பட்டுள்ளது. இவ்வணை உலகப் புகழ்பெற்ற பேரணைகளுள் ஒன்ருகும்.

6. காவிரிக்கு முதன் முதலில் கரை யமைத்து அணை கட்டியவன் சோழன் கரிகாலன் என்னும் மன்னன் ஆவான். காவிரி யாற்றினைக் கண்ணும் கருத் துமாய்ப் போற்றி நீர் வளம் பெருக்கி வந்தனர் சோழ

மன்னர்கள். காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் பல ஆறுகள் உண்டு. அவை வாய்க்கால்களே. அவற்றின் மூலமாகச் சோழ நாட்டின் எல்லாப் பாகங்களுக்கும் நீர் கொண்டு செல்லப்படுகிறது. காவிரியிலிருந்து பிரியும் நதி கொள்ளிடம் என்பதாகும். கல்லணை என்பது சோழநாட்டிற்கு அச்சாணி என்று கூறலாம். இதிலிருந்து தான் காவிரியின் நீர் கொள்ளிடத்திற்குத் திருப்பப்படுகிறது. இக்கல்லணை 1600 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும்.

7. காவிரியாறு கடலோடு கலக்குமிடமாகிய சங்க முகத்தில் சரித்திரப் புகழ் வாய்ந்த பூம் புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம் சோழர் காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது. இளங்கோவடிகள் எழுதிய சிலப் பதிகாரத்தின் கதாநாயகன் நாயகிகளான கோவலனும் கண்ணகியும் பிறந்த ஊர் அதுவே. அந்நகரின் சிறப்பைத் தமிழ் நூல்கள் விதந்து கூறும். அந்நகர் சங்க காலத்துச் சோழ மன்னர்களுக்குத் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் சிறந்து விளங்கியது. சோழர்களைப் பாடிய புலவர்கள் அனைவரும் காவிரியின் சிறப்பையும் பாடியுள்ளனர். 'சோழநாடு சோறுடைத்து' என்ற பழமொழிக்குக் காரணமாகியது காவலர் போற்றும் காவிரியாறே.

அருஞ்சொற்களும் பொருளும்

இருபுனல் – மேல்நீர், கீழ்நீர்	செவிலித்தாய் – வளர்ப்புத்தாய்
வருபுனல் – ஆறு	வான் – மழை
வல்அரண் – வலியகோட்டை	உற்பத்தி – தோன்றுதல்

மலைத்தலைஇய - மலையினை முதல் இடமாகக்கொண்ட
ஊடுருவி - நடுவிற் பாய்ந்து
உபநதி - வந்து கலக்கும் ஆறு
கிளைநதி - பிரிந்து செல்லும் ஆறு

சிறுவிடை வினாக்கள்

1. நம் நாட்டில் ஓடும் ஆறுகளில் சில கூறு.
2. காவிரி எங்கு உற்பத்தியாகிறது?
3. காவிரி எந்த எந்த ஜில்லாக்களின் வழியாகச் செல்கிறது?
4. காவிரியின் சிறப்பை எவ்வாறு கூறுகின்றனர்?
5. காவிரியின் உபநதியும் கிளை நதியும் கூறு.
6. காவிரியின் இருபக்கங்களிலுமுள்ள நிலத்தின் செழுமைபற்றி எழுது.
7. சிவசமுத்திரம், கண்ணம்பாடி அணைக்கட்டு, மேட்டூர் அணைக்கட்டு என்பனபற்றி எழுது.
8. கரிகாலன் காவிரிக்குச் செய்ததென்ன?
9. காவிரிப்பூம்பட்டினம் எங்கு உள்ளது? அதன் மறு பெயர் யாது?
10. கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறும் நூல் எது? யார் எழுதியது?

கட்டுரைப் பயிற்சி

தலைப்பளித்துக் கட்டுரை எழுது :—

1. ஆறுகளால் உண்டாகும் நலன்கள்.
2. நீர் வீழ்ச்சியினால் உண்டாகும் நன்மை.
3. அணைக்கட்டுகளும் அவற்றின் பயனும்.

இலக்கணம்

1. அலை, அளை, அழை
கிலி, கிளி, கிழி
வலி, வளி, வழி

2. புரம் - புறம்
அரம் - அறம்
மரம் - மறம்

3. மன் - மண்
பொன் - பெண்
தின் - திண்

மேற்கூறியவற்றை உச்சரித்துப் பார். அவைபோல் வகைக்கு மூன்று மூன்று உதாரணங்கள் எழுது.

பயிற்சி

1. மாலை கட்டுதல் எனது வேலை.
2. கையிளிருந்து கடிகாரம் விளுந்தது.
3. மயை வியாயக்கியமை பெய்தது.
4. கியவி வயுக்கி விட்டுக் கியே விளுந்தாள்.

மேலுள்ள வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுது.

மேட்டூர் அணையின் தோற்றம்

4. அச்சுத் தொழில்

1. நாம் இக்காலத்தில் பல புத்தகங்களைப் படிக்கிறோம்; பலவகைப் பத்திரிகைகளைப் பார்க்கிறோம்; சிலவற்றைப் படிக்கிறோம். நூல்நிலையத்திற்குச் சென்றால் அங்கு ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. நம் கல்வி அறிவு பெருகுவதற்குப் புத்தகங்கள் காரணமாயிருக்கின்றன. நாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நூல்களையும் இன்று படித்து மகிழ்கிறோம். இவ்வாறெல்லாம் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் அனுபவித்திருக்க முடியாது. இக்காலத்தில் காகிதம் செய்தலும் அச்சடித்தலும் ஆகிய இரு தொழில்களும் முற்போற்றம் அடைந்துள்ளன. அவற்றின் உதவியால் நாம் மிக விரைவில் பல நூல்களைப் படித்து முன்னேற்றம் அடைகிறோம். சற்றுக் கூர்ந்து கவனித்தால் நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான கல்வி, பரவுதற்கு அச்சுத் தொழில் பேருதவி புரிகிறது என்பதை உணரலாம்.

2. முன் காலத்தில் முன்னோர்கள் நூல்களைப் பனையோலையில் எழுதினர். பனையோலையை ஒழுங்குறச் சீவி வைத்துக் கொண்டு எழுத்தாணி கொண்டு எழுதிவந்தனர். பெரிய நூல்களை எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதுவது என்பது எளிதான காரியமாகுமா? அவ்வாறு எழுதிப் படிப்பதென்றால் எவ்வளவு காலம் பிடிக்கும்? ஒருவரிடத்தில் இப்பொழுது

வைத்திருப்பது போல் பல புத்தகங்களை வைத்திருக்க முடியுமா ? அக்காலத்தில் இப்பொழுது நூல் நிலையம்

பேப்பர் வாசித்தல்

வைத்திருப்பதுபோல் பல நூல்களைக் கொண்ட நூல் நிலையங்கள் இருக்க முடியுமா? ஒருவர் ஒரு பெரிய நூலை எழுதி வைத்துக்கொள்வதற்கு நீண்ட காலமும் பெருஞ் செலவும் செய்திருக்க வேண்டும். அந்த நூலை அவர் பிறருக்குக் கொடுத்து உதவுவாரோ ? எனவே, பல வகையாலும் நூல்கள் பரவாதிருந்தன. மற்றும் ஒருவன் பல நூல்களையும் கற்றுணரவும் இயலாது. அதனால் கற்றவரும் சிலரே யாவர்.

3. இக்காலத்தில் எழுதுவதற்கு ஏற்ற சாதனங்கள் பல உள்ளன. காகிதம் குறைந்த விலையில் கிடைக்கிறது. மை, பேனா முதலான சாதனங்களும் உள்ளன. பல புத்தம் புதிய கருத்துக்களை வெளியிடுவதற்கு வசதி இருக்கிறது. அரியவும் புதியவுமான கருத்துக்களை எழுதிப் புத்தகங்களாக்கி நாடெங்கும் பரப்பலாம். நம் கருத்துக்களை உடனுக்குடன் பிறர் அறியுமாறு

செய்யலாம். அறிவு வளர்ச்சிக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் புத்தகங்கள் உறுதுணையாகின்றன. நாம் பலவகையான கல்விகளைக் கற்றுணரவும் புத்தகங்கள் துணை செய்கின்றன. எதனைப் பற்றியும் விரித்து எழுதிப் புத்தகங்களாக்கி நமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செய்யலாம். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது காகிதம் செய்தலும் அச்சுத் தொழில் முன்னேறியிருத்தலுமே ஆகும். முன் காலத்தில் ஒரு நூல் எழுதி முடிக்கப் பெருஞ் செலவாகும். ஆனால் குறைந்த விலையில் நாம் இக்காலத்தில் புத்தகங்களைப் பெறுகிறோம்.

4. அச்சுத் தொழிலை முதன் முதல் கண்டுபிடித்தவர்கள் சீனர்களே. கி. பி. ஆறும் நூற்றாண்டில் சீனர் அச்சு வித்தையைக் கண்டு பிடித்தனர். அவர்கள் மரப் பலகைகளில் பக்கம் பக்கமாகத் தாம் எழுத வேண்டியவற்றைச் செதுக்கி அச்சடித்தனர். அப் பலகைகள் அந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்திற்குத்தான் பயன்படும். இவ்வாறு செய்வதற்குப் பொருட் செலவும் கால நீட்டிப்பும் ஆகும். ஆதலால் காலத்தையும் வீணாக்காமல் பொருட் செலவும் அதிகமாகாமல், பின்னும் பின்னும் பயன்படுத்துவதற்கு ஏற்ற வழி ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டுவது அவசியமாயிற்று.

5 ஜான் கூடன் பெர்க்கு என்பவர் ஒரு ஜெர்மானியர். அவர் ரயின் நதிக்கரையிலுள்ள மேயென்ஸ் நகரில் பிறந்தவர். அவர் பல காரணங்களால் தம் நாட்டைவிட்டு ஹாலெண்டு தேசத்தில் ஹான்லம் நகருக்கு வந்தார். அங்கு அவருடைய நண்பர் ஒருவர் மரப் பல

கையில் செதுக்கப் பட்டிருந்த லத்தீன் இலக்கணத்தைக் காண்பித்தார். அன்று முதல் ஜான் கூடன் பெர்க்குக்கு அச்சு அடிக்கும்முறையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றஅவா உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் சிந்தித்து மரத்துண்டில் ஒவ்வோர் எழுத்தையும் தனித்தனியே செய்து வைத்துக் கொண்டு, வேண்டியபடி சொல்லுக்குப் பொருந்தக் கோத்து அச்சிடும் முறையைக் கண்டறிந்தார். அவர் கருதிய படியே அச்சடிப்பது மனத்திற்குத் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. அவர் தாம் கருதியவாறு மரத்துண்டில் தனித்தனியே எழுத்துக்களைச் செதுக்கிக் கொண்டு, பின் சொல்லுக்கும் வாக்கியத்திற்கும் ஏற்ப அடுக்கிய விவிலிய நூல், கிறிஸ்தவ மத சம்பந்தமான நூல்கள் எல்லாவற்றையும்வெளியிட்டார்.

6. ஜான் கூடன் பெர்க்கு ஓர் அச்சகத்தை ஏற்படுத்தினர். அங்கு அவர் தனக்குத் துணையாக ஒரு வேலையாளைச் சேர்த்துக் கொண்டார். அவன் அவரோடு வேலை செய்து சில காலத்தில் அச்சுத் தொழிலைக் கற்றுக்கொண்டான். அவன் ஜான் கூடன் பெர்க்குக்குத் தெரியாமல் சென்று வேற்றூரை அடைந்தான். அங்கு அவன் இருவரைத் துணையாகக் கொண்டு ஓர் அச்சகத்தை ஏற்படுத்தினன், அம்மூவரில் ஒருவன் மரத்தால் எழுத்துக்களைத் தனித்தனியே செதுக்குதலை விட, ஈயத்தில் எழுத்துக்களைத் தனித்தனியே வார்ப்பதைக் கண்டறிந்தான். அதன் பின்னரே அச்சுத் தொழில் உலகில் பரவலாயிற்று.

7. கி. பி. 1475 ல் காகஸ்டன் என்பவர் வெஸ்டு மினிஸ்டரில் முதல் முதலாக அச்சகம்

அமைத்தார். அவரே முதன் முதல் அச்சுப் புத்தகங்களை வெளியிட்டார். அதன் பின்னர் அத்தொழில் வளர்ச்சி உற்றது. பல அரிய புத்தகங்கள் வெளி வந்தன. மிகப் பழமையான நூல்களெல்லாம் அழிந்து போகாமல் காக்கப் பட்டன. நூல்கள் பெருகின. அரிய கருத்துக்களை யாவருமறியச் செய்வது எளிதாயிற்று. அழுத்தி அச்சடித்தது முதல் நிலை. அதனைத்தான் பிரஸ் என்றனர். மனிதன் அறிவு வளர்வதல்லவா? பின்னர் காலால் மிதித்து அச்சடிப்பதான டிரெடில் என்ற கருவியைக் கண்டறிந்தனர். இப்போது மின்சாரத்தால் அச்சடிக்கும் 'பவர் பிரஸ்' கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இக் காலத்தில் இத் தொழில் சிறப்பாகவும், புதுமையாகவும், விரைவாகவும் முன்னேறி வருகிறது. பல்லாயிரக் கணக்கான பிரதிகள் ஒரு மணி நேரத்தில் அச்சடிக்கும் யந்திரங்கள் இக் காலத்தில் உள்ளன. அச்சுத் தொழிலுக்குச் சாதகமான யந்திரங்கள் பலவும் உள்ளன. அவற்றால் புத்தகங்கள் பெருகுகின்றன. கல்வியும் மக்கள் அறிவும் பெருகி வளரக் காரணம் உண்டு அல்லவா? நாகரிகமும் வளர்கிறது. பல் வேறு வகைச் செய்தித் தாள்களும் பெருகின. இவற்றால் மக்கள் பல் வகை நன்மைகளை அடைகின்றனர். அச்சுத்தொழில் அருங்கலைத் தொழிலாய் வளர்ந்து வருகிறது; அது மக்கள் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனமாகவுள்ளது.

அருஞ்சொற்களும் பொருளும்

பத்திரிகை – செய்தித்தாள்	அச்சகம் – அச்சடிக்கும் இடம்
நூற்றாண்டு – நூறு வருடங்கள்	சாதகம் – உதவி
சாதனம் – கருவிகள்	பிரதிகள் – படிகள்

அரியவும் - அருமையானவை
உறுதுணை - மிக்க உதவி
விவிலியநூல் - பைபிள்
எளிதாயிற்று - சுலபமாயிற்று

சிறுவிடை வினாக்கள்

1. அச்சுத்தொழில் எதற்குப் பேருதவி புரிகிறது? எப்படி?
2. முன் காலத்தில் நம் முன்னோர் எவ்வாறு எழுதி வந்தனர்?
3. இக்காலத்தில் எழுதச் சாதனமாயுள்ளவை எவை?
4. புத்தகங்களினால் விளையும் நன்மை என்ன?
5. அச்சுத்தொழில் எங்கு எப்பொழுது தோன்றிற்று? எப்படி?
6. ஜான் கூடன் பர்க்கு பற்றி அறிவதென்ன?
7. அச்சுத்தொழில் விருத்தியடைந்த விதத்தை எழுது.
8. காக்ஸ்டன் என்பாரைப் பற்றி அறிவதென்ன?
9. அச்சு எந்திரங்களில் சிலவற்றைக் கூறு.
10. அச்சுத் தொழிலால் விளையும் நன்மைகளை எழுது.

கட்டுரைப் பயிற்சி

1. முன் காலத்தில் புத்தகங்கள் எழுதிய முறை.
2. இக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு உரிய சாதனங்கள்.
3. அச்சுத் தொழிலால் விளைந்த நன்மைகள்.
4. அச்சுத் தொழில் நாட்டு முன்னேற்றத்திற்கு அவசியமானது.
5. 'காகிதமும் அச்சுத் தொழிலும்'

இலக்கணம்

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களைப் பயின்றிருக்கிறீர்கள். அவற்றைத் திருத்தமாக உச்சரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். திருத்தமாக உச்சரிக்கத் தெரிந்தால்தான் பிழையின்றித் திருத்தமாக எழுத முடியும். திருத்தமாகப் பேசவும், திருத்த

மாகப் பிழை யின்றி எழுதவும் கற்பிப்பதே இலக்கணத்தின் நோக்கம் ஆகும்.

கல்	கள்	வளி	அளி	அரை	அலை
முலை	முளை	அலி	புரம்	அறை	அளை
வலி	வழி	அழி	புறம்	அழை	அரம்
அறம்	குறவர்	குரவர்	கரை	கழை	கலை
கறை	களை	இரை	இளை	இலை	இறை

மேலே உள்ள சொற்களைப் படியுங்கள். அவற்றின் பொருளையும் ஒலி பேதத்தையும் பொருள் வேற்றுமையையும் அறிந்து கொள்ளுங்கள்.

எழுத்துக்கள் பிறக்கும் முறையும் உச்சரிக்கப்படும் முறையும் உங்கள் இலக்கணப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன. அதனைக் கவனித்துப் படியுங்கள்.

பயிற்சி

1. கேற்றிரவு, புற்றரை. பழக்க வழக்கம், பலகாலம், பள்ளிப் பயிற்சி, பல்லி கூறுதல் இச் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

2. மல்லர், மள்ளர் ; மலை, மழை ; செரு, செறு ; பலம் பழம் ; இவற்றின் வேற்றுமை என்ன ?

5. இளைஞர்கள் அறிவாராக

1. மாணவர்களே, நீங்கள் பள்ளியில் ஐந்து ஆறு வது வயது முதல் பயின்று வருகிறீர்கள். இரண்டாம் வகுப்பு முதல் ஆத்திசூடி, உலகநீதி, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலான பல நீதி நூல்களைப்படித்துக்கொண்டு வருகிறீர்கள். அந்நூல் களின் பாடல்களை மனப்பாடம் செய்கிறீர்கள். அவற் றின் உரைகளையும் கருத்துக்களையும் நன்கு அறிவீர்கள். இவை போன்ற நீதிகள் பல தமிழ் மொழியில் உள்ளன. நாலடியார், திருக்குறள் முதலியன சிறந்த நீதி நூல் களே. இவற்றின் ஆசிரியர்கள் அனைவரும் பெரும் புகழ் வாய்ந்த புலவர்கள். அவர்கள் கல்வியிலும் உலகி யல் வாழ்க்கை அனுபவத்திலும் மிகவும் சிறந்தவர்கள். அத்தகையார், சிறுவர்களும் பெரியவர்களும் படித்துப் பயன் எய்துமாறு நீதி நூல்களை எழுதக் காரண மென்ன? நம் தமிழ்க் காவியங்களிலும் நீதிகள் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

2. மக்கள் இன்புற்று வாழ விரும்பினால் நீதிநெறி களில் நின்று ஒழுகவேண்டும். நன்னெறியில் ஊன்றி நின்று ஒழுகுதல் என்பது எளிதான காரியம் அன்று. மனம் தீயனவற்றில் விரைவில் சென்று பற்றுதல்போல நல்லனவற்றில் பற்றுவதில்லை. ஆதலால் மனத்தைச் செம்மையான நெறியைப் பற்றும்படி செய்யவேண்டு மானால் இளமை முதலே மனத்தைப் பழக்கவேண்டும். பழக்கம் நல்லனவாயின் நன்மை ஏற்படும்; தீயனவா

யின் தீமை ஏற்படும். எதனை மனம் அடிக்கடி நினைக்கின்றதோ அந்நெறியைப் பின்பற்றி நிற்பது மனத்திற்கு எளிதாகும். ஆதலால்தான் மனத்தை நல்லவழியில் இளமைமுதற் பழக்கஎண்ணி நீதிநூல்களை இயற்றியுள்ளனர். அவற்றைக் கற்றால்மட்டும் பயன்தரா; அவற்றில் கூறியுள்ளபடி நின்று ஒழுகினால் நல்ல பயனைத் தரும். அதற்குப் பழக்கம்வேண்டும். அப்பழக்கம் இளமை முதலே அமையவேண்டும். அதற்கு மனம் அவற்றைப் படித்து அடிக்கடி சிந்திக்கவேண்டும்.

3. மனம் தூய்மையடையவேண்டும். களவு, பொய், கோபம், ஆசை, பொறாமை, வெறுப்பு, விருப்பு இவற்றை மனம் பற்றிநிற்கலாகாது. மாசற்ற பளிங்கு போல் துலங்கவேண்டும். யாவரிடத்தும் அன்பும், இரக்கமும், இன்சொல் பேசுதலும், புறங்கூறாமையும்; பிறர் மேம்பாடு கண்டு பொறாமைப்படாமல்மகிழ்தலும் பெற்று மனம் தெளிந்திருக்கவேண்டும். கள்ளங்கபடுகளை மனத்திற்கொண்டு எவ்வளவு அறம் முதலியன செய்தாலும் பயன் இல்லை. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார் திருவள்ளுவர். தனி மனிதர் வாழ்வு, பொதுவாழ்வு என்ற இருவகை வாழ்விலும், தூய மனமுடையவனாக இருக்கவேண்டும். உண்மை பேசுதலும், பொய் பேசாதிருத்தலும் மனத்தைத் தூய்மைப்படுத்துதற்குத் தக்க சாதனங்களாம். சத்தியமே கடவுள் என்று கூறும் ஆன்றோர் வாக்கினையும் மனத்தில் கொள்ளவேண்டும். காந்தியடிகளின் தூய்மைக்கும், மேன்மைக்கும் காரணம் அவர் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

4. பொருள் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் வேண்டுவதே. அதனால் பொருளைத்தேட வேண்டுவதும் கடமையே. பொருளைப் பிறர்க்கு வழங்குதல் இல்லாமல் தனக்கே வைத்துக் கொள்வதும் நல்லதன்று. தேவைக்குமேல், பொருளைத் தேட முயல்பவன் தீயன செய்தேனும் பொய்கூறல், வஞ்சித்தல் முதலியன செய்தேனும் தேடுவான். அதனால் பொருள்தரக்கூடிய மகிழ்ச்சியைக் காட்டிலும் துன்பமே அதிகமாகும். அவன் கடவுள் அருளும் பெறமுடியாதவனாகின்றான். பொருளைத் தேவையளவிற்குத் தேடிக்கொள்ளவேண்டும்; பிற்காலத்திற்கெனச் சிறிதளவு சேமித்து வைக்கவும் வேண்டும்; பொருளைக்கொண்டு பிறர்க்கும் நல்லன செய்தல்வேண்டும்.

5. ஒவ்வொருவரும் தன்னலம் மட்டும் கருதக் கூடாது. அதனால் தன்னை மறந்து பிறர் நலம் கருத வேண்டும் என்பதும் இல்லை. தன்னலமும் காக்க வேண்டும்; பிறர் நலத்தையும் பேணவேண்டும். பிற உயிர்களிடத்தில் அன்பில்லாதவர்கள் மக்களாகார். இளைஞர்கள் வாழ்க்கைக்குறிக்கோளை இளமை முதலே கடைப்பிடித் தொழுகவேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பயனற்றது. பிறரிடமுள்ள குறைபாட்டைக் காணவும் கூடாது ; கூறவும் கூடாது. பிறரிடமுள்ள நிறைவைப் பின்பற்ற வேண்டும்; எடுத்துக்கூறவும் வேண்டும். ஒவ்வொருவரும் பிறரைத் திருத்துவதற்கு முன் தன்னையே திருத்திக் கொள்ளவேண்டும்.

6. ஒவ்வொருவரும் தன் உழைப்பால் வாழ முயல வேண்டும். பிறர் உழைப்பால் வாழ எண்ணுதல்

பெரும்பிழை. உழைப்பினாலும், உழைப்பினை மதிப்பதனாலும் ஏற்படும் நன்மைகள் பல. உழைப்பினால் பெறக்கூடாத பொருள்கள் ஒன்றுமில்லை. உழைப்பே உயிர். உழைப்பற்றவன் சோம்பேறி. அவன் தனக்கும் சுற்றத்தார்க்கும், உலகிற்கும் பாரம். உழைப்பினால் உண்ணுதலே உணவு. உழைப்பின்றி உண்ணுதல் உணவாகாது. "போனகம் என்பது தானுழந்து உண்டல்" என்பர் பெரியோர். உழைப்பு உண்டானால் ஏற்றத் தாழ்வு தோன்றாது; போலி மதிப்பு மனத்தைக் கவராது. உழைப்பிற்கு அடிப்படையாக இருப்பது விடாமுயற்சி. விடாமுயற்சி வாழ்க்கையில் வெற்றி தரும்.

7. ஒவ்வொருவரும் தன்மதிப்பு உடையவராக இருக்க வேண்டும். தன் மதிப்பு என்பதுதான் மானம். தன் மதிப்புக்குக் குறைவான செயல்களைச் செய்தால் அது பிறந்த குடிக்கே இழிவைத் தரும். தன் மதிப்பைப் பேணாதவனே தீய காரியங்களைச் செய்ய முற்படுவான். அவன் வாழ்க்கை இன்பம் ஒரு சிறிதும் இன்றித் துன்ப மயமாக இருக்கும். போலிமதிப்பும் கொள்ளக்கூடாது. போலி மதிப்பு பெருந்தீமையை விளைவிக்கும். பணத்தினால் அடையக்கூடிய பயன்களில் மிகச் சிறந்த பயன் கல்வியே. கல்வி, பணத்தைத் தேடிக் கொடுக்கும். பணமில்லாவிட்டாலும் கல்வி மதிப்பை அளிக்கும். கல்வி பணத்தைப் பாதுகாக்கும். பணம் அழியும் கல்வி அழியாது. ஆதலால் இளமையிலேயே சிறுவர்கள் கல்வியாகிய செல்வத்தைத் தேடிக்கொள்ள முயலவேண்டும் பணம் பரம்பரையாக நிலைத்து நில்லாது. கல்வியோ பல தலைமுறைக்குத் தொடர்ந்துவரும். அதனாலன்றோ பெரி

யோர்,எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை மற்றல்ல பிற" என்றார்.

8. இளமை முதலே ஒழுக்கம், மெய்பேசுதல், உழைப்பு முதலான அரிய பண்புகளை வளர்த்தல் வேண்டும். அதற்கு நற்சார்பு வேண்டும். நல்லதோழர்களோடு பழகுதல் வேண்டும். தீய தோழர்களை அறவே நீக்குதல் வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களை இளமை முதலே கைக்கொண்டு ஒழுகாவிடின், பின் அவை நம்மைச் சாரா. ஆதலால் சிறுவர்கள், விடியற்காலையில் எழுதல், மேற்கொண்ட பணிகளைச் சோம்பலின்றிச் செய்தல், ஓய்வு நேரங்களை வீணாக்காது பயனுடைய நூல்களைக் கற்றல், எவரிடத்தும் அன்பாயிருத்தல், யாரிடமும் இனிய மொழிகளைப் பேசுதல், எவ்வுயிரிடமும் இரக்கம் காட்டுதல், பிறர்க்குத் தீமையை மனத்திலும் நினையாதிருத்தல், பெரியோர்களைச் சார்ந்து அவர்கள் கூறும் நெறியில் நிற்றல். வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை மேற்கொள்ளல், இயன்ற அளவு பிறர்க்கு உதவுதல், பிறரிடம் பகைமை பாராட்டாதிருத்தல், பொய்பேசாது மெய் பேசுதல் முதலான அரிய பழக்க வழக்கங்களை இளமை முதற்கொண்டு ஒழுகுவாராயின் அவர்களும் உயர்வினை அடைவர்; புகழை எய்துவர்; இன்பவாழ்க்கை வாழ்வர். அவர்களுடைய நாடும் புகழும் பெருமையும் பெற்று விளங்கும்.

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்திற் கொண்டு ஒழுகி உயர்வு எய்துவீர்களாக.

1. அருஞ்சொற்களும் பொருளும்

பயின்று - படித்து
அத்தகையார் - அப்பேர்ப்பட்டவர்
காவியம் - பெருநூல்
ஊன்றி - உறைந்து
பற்றுதல் - பிடித்துக்கொள்ளுதல்
தேவை - வேண்டும் நிலை
குறிக்கோள் - குறிப்பு (aim)
உழந்து - வருந்தி
எச்சம் - மிச்சம்
பண்பு - குணம்
கசடு - குற்றம்
உயர்வு - மேன்மை
நெறி - வழி
சிந்தித்தல் - நினைத்தல்
தூய்மை - பரிசுத்தம்
துளங்க - விளங்க
மாசு - குற்றம்
அனைத்து - அவ்வளவு
பேண - காக்க
போனகம் - உணவு
இழிவு - கேவலம்
விச்சை - வித்தை
நற்சார்பு - நல்ல நோக்கை
அற - நீங்க
எய்வீர் - அடைவீர்

2. சிறுவிடை வினாக்கள்

1. சிறு மாணவர்கள் படிக்க வேண்டிய நீதி நூல்கள் எவை?
2. தமிழிலுள்ள சிறந்த நீதி நூல்களுள் இரண்டு கூறு.
3. எவற்றில் நீதிகளைக் காணலாம்?
4. எது எளிதான காரியம் அன்று?
5. மனத்தின் இயல்பு யாது?
6. நீதி நூல்கள் இயற்றக் காரணம் என்ன?
7. எவற்றை மனம் பற்றக் கூடாது?
8. எது அறன் என்று வள்ளுவர் கூறுகிறார்?
9. காந்தியடிகள் எதனால் சிறப்புற்றார்?
10. செல்வத்திற்கும் கல்விக்கும் உள்ள வேற்றுமை என்ன?
11. ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ முயல வேண்டும்?
12. உழைப்பைப்பற்றி அறிவது என்ன?

3. கட்டுரைப் பயிற்சி

1. மாணவர்களும் நீதி நூல்களும்
2. நீதி நூல்களின் அவசியம்
3. நற்பழக்கம்
4. மாணவர் ஒழுக்கம்

மேலே உள்ள தலைப்புக்களை அமைத்துத் தனித்தனியே ஒவ்வொரு பக்கத்தில் கட்டுரை எழுது.

4. இலக்கணம்

ஆ, பூ, தீ, ஈ, மா, வை, நீ, பா, — இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் எழுத்து.

ஆ - பசு ; பூ - மலர் ; தீ - நெருப்பு ; ஈ - ஒரு ஜந்து ; மா- விலங்கு, மாமரம், வை - கூர்வை ; நீ - முன் நிற்பவன் ; பா - பாட்டு. இவை ஒவ்வொன்றும்பொருளைத் தருகிறது அல்லவா? இவை ஓரெழுத்தொருமொழி எனப்படும்.

அலை, அரசு, இலவம், பஞ்சரம் ; அம்பலம், - இவை இரண்டு முதலாகப் பல எழுத்துக்களால் ஆனவை. இவை களும் பொருளைத் தருகின்றன. இவை எழுத்துத் தொடர் மொழி எனப்படும்.

எனவே, எழுத்துக்கள் தனித்தோ, இரண்டு முதலாகத் தொடர்ந்தோ நின்று ஒரு பொருளைத் தந்தால் மொழி எனப் படும்.

மொழி, சொல், கிளவி, வார்த்தை, பதம் என்பன ஒரு பொருளுடையன.

பயிற்சி

ஓரெழுத்தொருமொழி, எழுத்துத் தொடர்மொழி - இவற் றிற்கு மூன்று மூன்று உதாரணங்கள் கொடு.

6. வீர வர்த்தனன்

1. ‘விக்கிரமாதித்தன் கதை’ என்று நம் நாட்டில் யாவரும் படிக்கும் நூல் ஒன்று உண்டு. அவன் வலிமை மிக்க மன்னர்களுள் ஒருவன். அவன் சமுத்திரகுப்தன் என்ற மன்னனுக்கு மகன். அவன் தாய் தத்தாதேவி. விக்கிரமாதித்தன் அரசனானதும் பல அரசர்களை வென்றான். அவன் நாட்டைச் செம்மையாக ஆண்டான். அவன் புலவர்களை ஆதரித்தான். வடமொழியில் காளிதாசர் என்னும் பெரும் புலவர் சாகுந்தலம் என்னும் நூலை இயற்றி அவன் அவையில் அரங்கேற்றினார். அவன் காலத்தில் வான நூல்களும் கணித நூல்களும் வெளிவந்தன. அவன் சிற்பம் ஓவியம் என்னும் கலைகளைப் போற்றி வளர்த்தான் என்பதை, அஜந்தாக்குகையிலுள்ள சிற்ப ஓவியங்கள் நன்கு விளக்கும். அவனைப் பற்றிப் பல கதைகள் உண்டு. இங்கு ஒரு கதையை அறிவோம்:

2. ஒருசமயம் விக்கிரமாதித்தன் முருக்க மரம் ஒன்றிலிருந்த வேதாளத்தைக் கட்டிக்கொண்டு வரும்போது வேதாளம் ஒரு கதை சொல்லியதாம். அந்தக் கதை இது:—

சரபம் என்பது ஒரு நகரம். அதனைச் சுக்கிரீவன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவனிடத்தில் சிறந்த வீரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் வீர வர்த்தனன் என்பது. அந்த வீரன் தன்னுடைய வலிமை வீரம் முதலியவற்றைப் பலவாறு எடுத்துக் கூறி மன்னனிடமிருந்து தினந்தோறும் ஆயிரம் பொன் சம்பளமா

கப் பெற்று வந்தான். அவனுக்கு இரவும் பகலும் அரண்மனை வாயிலைக் காத்துக்கொண்டிருப்பதுதான் வேலை. வீரவர்த்தனன் தன் கடமையைச் சிறிதும் வழுவாது செய்துவந்தான். அவன் தனக்குக் கிடைக்கும் ஆயிரம் பொன்னை நான்கு பாகமாகப் போட்டு, ஒரு பாகம் தெய்வத்திற்கும், ஒரு பாகம் துறவிகளுக்கும், ஒரு பாகம் தன் மந்திர சித்திக்கும், மற்றொரு பாகம் மனைவி மக்களுக்குமாக அமைத்துச் செலவிட்டு வந்தான்.

3. ஒரு சமயம் பெருங்காற்றும் வீசிப் பெரு மழையும் பெய்தது. மரங்கள் எல்லாம் காற்றினால் முறிந்து விழுந்தன. மழையினால் வீடுகளெல்லாம் இடிந்தன. ஊழிக்காலமோ என்று யாவரும் ஐயமுற்று அயர்ந்தனர். அந்நகரத்தின் புறத்தே இருந்து ஒரு பேரழுகைக் குரல் கேட்டது. அக் குரல் மன்னன் செவிக்கு எட்டியது. மன்னன் திடுக்கிட்டான். அந்த அழுகுரல் காற்றொலியிலும் கடுமையாக இருந்தது. அப்பொழுதே சென்று அழுகுரலைப் பற்றிய செய்தியை அறிந்து வருபவர் யாரேனும் உள்ளாரோ என்று கேட்டான். இருள் நிறைந்த அந்த இரவுப் பொழுதில் வீரவர்த்தனன் அரசனை வணங்கி' தான் சென்று அறிந்து வருவதாகக் கூறிச் சென்றான். பெருஞ்சம்பளம் பெற்று அரண்மனைக் காவலன்றிப் பிறிதொரு வேலையும் இல்லாத வீரவர்த்தனன் செயலை ஆராய எண்ணங்கொண்ட அரசன் அவன் அறியாதவாறு மாறுவேடத்துடன் பின் தொடர்ந்து சென்றான். வீரவர்த்தனன் நேரே அழுகுரல் வரும் இடத்தை நோக்கிச் சென்றான். நடுக் காட்டில் ஒரு பெண் அழுது கொண்டிருத்தலைக் கண்டான்.

4. வீரவர்த்தனன் அப்பெண்ணைப் பார்த்து, "நீ யார் ? உன் பெயர் என்ன ? ஏன் அழுதுகொண்டிருக்கிறாய் ? சொல் " என்று கேட்டான். அதற்கு அப்பெண், " நான் பூமிதேவி. இதுவரையில் நான் சுக்கிரீவ மன்னன் தோள்களில் தங்கி வாழ்ந்தேன். ஆனால் அந்த அரசன் இன்னும் மூன்று நாட்களில் இறப்பான். பின் என் கதி யாதாகுமோ என்று அஞ்சி அவல முற்று அழுகின்றேன்." என்றாள். அம்மொழிகளைக் கேட்ட வீரவர்த்தனன், " பூமி தேவியே, மன்னனுக்கு நேரும் மரணத்தைத் தடுக்க யாதேனும் வழி உண்டோ ?" என்று வினவினான். பூமிதேவி, "உண்டு; ஆனால் அதனைச் செய்ய வல்லார் உள்ளாரோ என்பதைத்தான் நான் நினைத்துக் கவல்கின்றேன்," என்றாள். 'வழி உண்டு' என்று கேட்டதும் வீரவர்த்தனன் மகிழ்ந்தான். "நான் செய்கிறேன்,வழியைக் கூறுக,"என்றான்வீரவர்த்தனன். பூமிதேவி, " அன்ப, அதோதெரிகின்றதே கோயில் ; அக்கோயிலிலுள்ள துர்க்கைக்குப் பதினாறு வயதுள்ள சிறுவனைப் பலியாகக் கொடுக்கவேண்டும்," என்றாள்.

5. வீரவர்த்தனன் அம் மொழிகளைச் செவியில் ஏற்றதும் மிகவும் விரைந்து தன்வீட்டை அடைந்தான். அவன் மனைவி மக்களை அழைத்து, நடந்த செய்திகளை விளக்கமாகக் கூறினான். பின், அவன் தன் ஒரு மகனை அழைத்துக்கொண்டு நேராகத் துர்க்கை கோயிலுக்கு வந்தான். சிறிதும் மனக்கலக்கம் கொள்ளாமல் உயிரை மகிழ்ந்து காக்க எண்ணி, துர்க்கையின் முன் மகனை வணங்கி நிற்குமாறு செய்து, வாளை உருவி ஒரே வெட்டாக மகனை வெட்டிப் பலி ஈந்தான். அவன் செயலை அவனுடன் வந்த மனைவியும் மகளும் கண்டு, தத்தம்

கழுத்தை வாளால் அறுத்துக்கொண்டு மடிந்தனர். பின் வீரவர்த்தனன், மனைவியும் மகளும் இறந்ததால் தான் மட்டும் உயிர்வாழ்ந்து பயன் இல்லை என்று எண்ணி, வாளால் தன் கழுத்தையும் அறுத்துக்கொண்டு மாய்ந்தான். மன்னன் உயிரைக் காக்கும் பொருட்டுத் தந்தை, தாய், மகன், மகள் யாவருமே தம் ஆருயிர் துறந்தனர். இவற்றையெல்லாம் மறைந்து பார்த்துக்கொண்டிருந்த மன்னன் அவர்களுடைய ராஜ விசுவாசத்தை எண்ணி வியந்தான் அரசன். "நம் உயிர்காக்கும் பொருட்டன்றோ நால்வரும் மடிந்தனர்! இத்தகைய நன்றியறிதலுடையகுடும்பத்தினரை இழந்து நாம் மட்டும் வாழ்ந்து பெறும் பயன் என்ன? நாம் வாழ்தல் முறையோ? என்று பலவாறு எண்ணிக் கைவாளால் தன் கழுத்தை அறுத்துக் கொண்டு இறக்கத் துணிந்தான். அவன் வாளை உருவியவுடன் துர்க்கை நேரில் தோன்றினாள்; அரசனைத் தடுத்தாள்; நால்வரையும் பிழைப்பித்தாள். அரசன் ஒருவரும் அறியா முன்னர் அரண்மனையை அடைந்தான்.

6. வீரவர்த்தனன் மனைவி மக்களுடன் வீட்டை அடைந்தான். அவர்களை வீட்டில் விட்டுவிட்டுத் தான் அரண்மனை வாயிலை அடைந்து வழக்கம்போல் காவல் செய்தான். பொழுது புலர்ந்தது; மன்னன் கொலு மண்டபத்தை அடைந்தான். அவன் ஒன்றும் அறியாதவனைப்போல வீரவர்த்தனனை அழைப்பித்து அழுகுரலைப்பற்றி அறிந்து வந்தது உண்டோ? என்று வினவினான். வீரவர்த்தனன் மன்னனைப் பணிந்து, 'வேந்தே நான் சென்று ஒரு பெண் அழுவதின் காரணத்தைக் கேட்டேன். அவள் மறுமொழி கூறாமல்

அழுகையை நிறுத்திக் கொண்டாள்" என்று கூறினன். மன்னன் மனம் விம்மிதம் உற்றது. அறிந்ததை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. மன்னன், சபையோருக்கு வீரவர்த்தனன் செயலை விளக்கமாக எடுத்துக் கூறி, வீரவர்த்தனனின் நன்றியறிதல், ராஜ விசுவாசம் என்பவற்றை வெளிப்படுத்தினன். அவனைப் பலவாறு புகழ்ந்து, சிறந்த பரிசுகள் அளித்துச் சேனைபதி ஆக்கினன்.

7. இதுவே கதை. "இந்த ஐவர்களில் யார் சிறந்தவர்?" என்று வேதாளம் கேட்டது. அதற்கு விக்கிரமாதித்தன், "மன்னனே சிறந்தவன், வீரவர்த்தனன் வேலைக்காரன்தானே என்று நினையாமல் தன் கழுத்தையே அறுத்துக்கொள்ளத் துணிந்தான் அன்றோ!" என்று கூறினன்.

வேதாளம் கட்டினை அவிழ்த்துக்கொண்டு மீண்டும் முருக்க மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

1. அருஞ்சொற்களும் பொருளும்

ஆதரித்தார்-காப்பாற்றினர்
சிற்பம்-கற்சிலை
ஓவியம்-சித்திரம்
வழுவாது-தவருது
ஊழிக்காலம்-முடியும் காலம்
விசுவாசம்-அன்பு

துறவி-சந்நியாசி
சித்தி-அடைதல்
ஐயம்-சந்தேகம்.
அலமந்தனர்-வருந்தினர்
கவல்கின்றேன் -வருந்துகின்றேன்
விம்மிதம்-பெருமகிழ்ச்சியால் திகைப்பு

2. சிறு விடை வினாக்கள்

1. விக்கிரமாதித்தனைப்பற்றி எழுது
2. வேதாளம் கூறிய கதையைச் சுருக்கி எழுது
3. வீரவர்த்தனன் வாழ்க்கையைப்பற்றி எழுது
4. பூமிதேவி, வீரவர்த்தனனிடம் கூறியவை யாவை?
5. வீரவர்த்தனன் செய்த அரியசெயல் யாது?
6. சுக்கிரீவன் வீரவர்த்தனனிடம் கண்டறிந்தது என்ன?
7. வேதாளம் விக்கிரமாதித்தனைக் கேட்ட கேள்வியும் அதற்கு அவன் அளித்த விடையும் யாது?

3. கட்டுரைப் பயிற்சி

1. நாட்டுக்கதை நூல்கள் சில கூறு

(விக்கிரமாதித்தன் கதை, நல்லதங்காள் கதை, புலந்தரன் கதை)

2. தெனாலிராமன், மரியாதை ராமன், ராஜா வீரபாலன் என்பாருடைய வினோதக் கதைகளில் இரண்டைச் சொல்; ஒன்றை எழுது.

3. வேடிக்கைக் கதை படிப்பதின் பயனை விளக்கு.

தலையாலங்கானத்துப் போர் வென்ற

7. பாண்டியன் நெடுஞ்செழியன்

1. முன்பு தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பிரிவுகளை உடையது. பாண்டிய நாட்டினை ஆண்டவர்கள் பாண்டியர் எனப் பட்டனர். பாண்டியர்கள் தமிழ்மொழியைச் சங்கம் அமைத்து வளர்த்துக் காத்தனர். அதனால் பாண்டிய நாட்டைச் செந்தமிழ்நாடு என்றும் கூறுவர். பாண் டியர்களில் பல்லோர் புலவர்கள் பாடும் புகழுடையோ ராய் விளங்கினர். அவர்களுடைய ஈகையும், வீரமும், அறமும், ஆட்சியும், புலவர்ப் போற்றலும், புலவர் களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. மற்றும் அவர் களில் பலர், கவிகள் சமைக்கும் ஆற்றல் வாய்ந்த வராகவும் புலமை யுடையவராகவும் இருந்தனர். அத் தகையாரில் ஒருவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான் ஆவன்.

2. நெடுஞ்செழியன் இளம்பருவத்திலேயே அரியணை ஏறினன். அவன் தந்தையை மிக்க இளைய வனாக இருக்கும் பொழுதே இழந்து விட்டான். எனினும் அவன் மாங்குடி மருதனர், குடவியனர், இடைக்குன்றூர் கிழார் முதலான அரிய புலவர்களின் துணையால் நாட்டினைச் செவ்வையாக ஓம்பிவரலானன். புலவர் கூறும் மொழிகளைப் போற்றி அவற்றின் வழி

ஒழுகி வந்தான். நாட்டின் மக்கள் இனிது வாழ்தலைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தான். ஆறுகளுக்கு அணைகளைக் கட்டுவித்தும், வாய்க்கால்கள் வெட்டுவித்தும், ஏரிகுளங்கள் எடுப்பித்தும், உணவுப் பொருள்களைப் பெருக்கினான். குடிகளுக்கு ஐவகையாலும் அச்சம் உண்டாகாதபடி காத்து வந்தான். அவனைக் குடிமக்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்.

3. அக்காலத்தில் சேர நாட்டை மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன் ஆண்டு வந்தான். பாண்டியனுக்கு அறிவும் ஆற்றலும் புகழும் வளருந்தோறும் மாந்தரஞ் சேரலுக்குப் பொறாமையும், கோபமும், பகையும் வளர்ந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் இளையவனாய் இருந்தாலும் தன்னிலும் மேம்பட்டவனாக இருத்தலை அவன் காண விரும்பவில்லை. அவன் பெரியவன் ஆனால் தன்னையும் வென்று விடுவானோ என்று மாந்தரஞ்சேரல் மனத்தில் அச்சம் தோன்றிற்று. அது பகைமையை வளர்த்தது. 'முள் மரத்தை இளையதாக இருக்கும் போது நகத்தால் கிள்ளி எறியலாம். அது மரமாகி விட்டால் வெட்டுங் கோடரியின் வாயையும் மழுங்கச் செய்யும்' அல்லவா? சிறிய பகை என்று அலட்சியமாய் இருத்தல் ஆகாது. பெரிய உருவத்தையுடையது யானை. ஆயினும் அது குளக்கரையில்நிற்கும் பொழுது சிறிய தவளை குதித்தாலும் அதனுடைய நிழலைக் காண முடியாது. ஆதலால், உடனே பகைவனை நெடுஞ்செழியனை ஒழிக்கவேண்டும் என்று மாந்தரஞ் சேரல் எண்ணினான். அவன் தன் கருத்தினை ஐந்து சிற்றரசர்களுக்கும் சோழனுக்கும் தெரிவித்தான். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' அல்லவா?

எனவே, எழுவரும் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்துப் போர் செய்ய எழுந்தனர்.

4. நெடுஞ்செழியன் ஆண்டில் இளையனாயினும் அறிவில் முதிர்ந்தவன்; வீரத்தில் சிறந்தவன். சேரனுடைய தூண்டுதலால் சோழனும் குறுநிலமன்னர் ஐவரும் பொருதற்கு எழுந்தனர் என்பதை நெடுஞ்செழியன் நன்கு உணர்ந்தான். ஆண்மையிற் சிறந்த அவன், உடனே படைகளைத்திரட்டினான். தான் ஒருவன் ஆயிற்றே; பகைவர் எழுவராயிற்றே என்று அவன் சிறிதும் அஞ்ச வில்லை. தன் சேனைவீரர்களை நோக்கி நெடுஞ்செழியன், பாண்டி வீரர்களே! சேரனும் சோழனும் மற்றஐவரும் என்னை ஆண்டில் இளையவன் என்று இகழ்ந்து கூறினர். தாங்கள் மிக்க படைபலம் பெற்றிருப்பதால் என்னை எளிதில் வென்று விடலாம் என்று மனக் கோட்டை கட்டு கின்றனர். சிறுசொல் சொல்லிய அவர்களை இப்போரில் அகப்படுத்தாமல் இருப்பேனா? அவர்களைச் சிறைப் படுத்தேனாயின் என்னை என் குடி மக்கள் கொடுங்கோலன் என்று தூற்றட்டும்; மாங்குடி மருதனார் முதலான புலவர்கள் எம் நாட்டைப் பாடாமல் நீங்கட்டும். என் சுற்றத்தார் துன்பத்திற்குள்ளாகட்டும். யாசிப்பவர்க்குக் கொடுக்க இயலாத வறுமையை நான் அடைவேனாக" என்று வீர மொழிகளால் சபதம் கூறிப் போர்மேற் சென்றான்.

5. பகைவர் படைகளை நெடுஞ்செழியன் படை சென்று தாக்கின. ஆலங்கானம் என்னும் இடத்தில் கடும்போர் மூண்டது. ஒருவனை ஒருவன் தாக்குதல் உலகியற்கை; ஆனால் ஒருவனை எழுவர் தாக்குகின்றனர்.

வீர இளைஞனை நெடுஞ்செழியன் பகைவரைத் தாக்கி விண்ணுக்கு அனுப்புகின்றான். அவன் பிறரை அவமதிக்கவும் இல்லை; செருக்குக் கொள்ளவும் இல்லை" என்று இடைக்குன்றூர் கிழார் வியந்து கூறுமாறு பொருதான். பகைவரைத் தாக்கி விரட்டிச் சென்று அவர்கள் நகருக்கு அருகிலேயே கொன்றான். புலவர்கள் அவன் வீரத்தைப் புகழ்ந்து பாடினர். இதுவே நெடுஞ் செழியன் முதல் முதல் நடத்திய பெரும் போர். இதில் அவன் வெற்றியும் பெற்றான். ஆதலால் அவனை எல் லோரும் 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டி யன் நெடுஞ்செழியன்' என்று கூறினர். அவன் பிற் காலத்தில் பல போர்களை வென்றான்; தமிழை வளர்த் தான்; புலவர்களைப் போற்றினான்; புகழை நாட்டினான். மாங்குடி மருதனார் என்னும் கடைச்சங்கப் புலவர் அவன் மீது ப த்துப் பாட்டுள் ஒன்றான மதுரைக்காஞ்சி, என்னும் பாடலைப்பாடியுள்ளார். அந்நூலினால் நெடுஞ் செழியன் இயல்பும், வீரமும் இனிது விளங்கும்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

அமைத்து - ஏற்படுத்தி
போற்றல் - காத்தல், புகழ்தல்
ஆற்றல் - வலிமை, திறமை
வாய்ந்தவர் - பொருந்தியவர்
அரியணை - சிம்மாசனம்
மனக்கோட்டை - மனத்தில் பலப்பல நினைத்தல்
சிறுசொல் - இகழ்ச்சியான வார்த்தை
செவ்வையாக - செம்மையாக
ஓம்பி - காத்து
ஐவகைக் குற்றம் - அரசனால், தன் பரிவாரங்களால், பகைவரால், கள்வரால், வன விலங்குகளால் குடிகளுக்கு உண்டாகும் தீங்கு
மேம்பட்டவன் - உயர்ந்தவன்
சபதம் - வஞ்சினம்

நாட்டினன் – நிலைபெறச் செய்தான்
கவிகள் – செய்யுட்கள்
செரு – போர்
சமைக்கும் – இயற்றும்

சிறுவிடை வினாக்கள்

1. பாண்டிய நாட்டிற்குச் செந்தமிழ் நாடு என்று பெயர் வரக் காரணம் என்ன?
2. பாண்டியர்கள் எத்தகையவர்களாய் வாழ்ந்தனர்?
3. பாண்டியர்கள் எத்தகைய இயல்பு பெற்றிருந்தனர்?
4. நெடுஞ்செழியன் எப்புலவர்களின் துணையைப் பெற்றான்?
5. நெடுஞ்செழியன் நாட்டிற்குச் செய்த நலன்கள் யாவை?
6. ஐவகை அச்சம் என்பது யாது?
7. மாந்தரஞ் சேரவிரும் பொறை யார்? என்ன கருதினன்?
8 'பகையைத் தொடக்கத்திலேயே அழிக்கவேண்டும்; அற்பமானது என்று கருதிவிட்டிருத்தல் ஆகாது' – இக்கருத்தை விளக்க வந்த உவமைகள் யாவை?
9. இரும்பொறை யாது செய்தான்?
10. நெடுஞ்செழியன் பகைவர்களைக் கண்டதும் கூறிய வஞ்சினம் யாது?
11. 'மாங்குடி மருதனார் முதலான புலவர்கள் எம் நாட்டைப் பாடாது நீங்கட்டும்'–இந்த அடியால் அறியப்படுவது யாது?
12. நெடுஞ்செழியன் வீரப்போர் புரிந்ததை இடைக் குன்றூர் கிழார் எவ்வாறு இரங்கிப் பாராட்டுகிறார்?

13. மாங்குடி மருதனூர் யார்? அவர் நெடுஞ்செழியன்மீது பாடிய நூல் யாது?

14. அந்த நூல் எந்தத் தொகை நூலைச் சேர்ந்தது?

15. அதில் கூறப்படுவதென்ன?

கட்டுரைப் பயிற்சி

கட்டுரை எழுது:-

1. பாண்டியர் தமிழை வளர்த்த முறை.
2. தமிழ் மன்னர் காலத்துப் போரைப்பற்றி அறிவன.
3. அரசரும் புலவர்களும்.

8. கவிமணி

1. தமிழகத்தில் தோன்றிய புலவர்கள் பலரோர். தமிழ் மொழியின் வளர்ச்சியைக் கருதி அவ்வக் காலத்தில் தோன்றிய புலவர்கள், காலத்திற்கு ஏற்றவாறு நூல்களை இயற்றித் தமிழ்மொழியை வளர்த்தனர். அதனுல் தமிழ் மொழி பலவகை மாறுதல்களைப் பெற்று நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு அமைந்து மக்களுக்கு நன்மையை விளைவிப்பதாய் ஓங்கி வளர்வதாயிற்று. அவ்வாறு மொழி ஓங்கி வளர்வதற்குக் காரணம் அவ்வக் காலத்தில் தோன்றிய புலவர்களே ஆவர். அத்தகைய தொண்டில் சிறந்து தாய் மொழியான தமிழிற்குத் தொண்டு செய்த பெரும் புலவரில் ஒருவர் தேசிக விநாயகம் பிள்ளை ஆவார்.

2. தமிழகத்தில் ஒரு சிறுபகுதி நாஞ்சில் நாடு என்று பெயர் பெறும். தமிழ் நாட்டின் தென்பகுதியும் திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யத்தின் தென்கோடியுமான பகுதியே நாஞ்சில் நாடு என்று கூறப்படுவது. தமிழகத்தின் தெற்கு எல்லையான குமரிமுனை நாஞ்சில் நாட்டில் உள்ளதே. சுசீந்திரம் என்ற திருத்தலமும் அந்நாட்டின் கண் உள்ளதே ஆகும். பழைய சங்க காலத்திலும் இந்நாடு புலவர் ஒருவரைத் தந்து புகழ்படைத்துள்ளது. நாஞ்சில் வள்ளுவன் என்னும் சங்ககாலப் புலவர் இந்நாட்டில் பிறந்தவரே யாவர்.

3. நாஞ்சில் நாட்டில் தேரூர் என்பது ஓர் அழகிய சிற்றூர். அவ்வழகுமிகு ஊரில் சிவதாணுப் பிள்ளை



கவிமணி

என்பார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் ஆதிலட்சுமியம்மையார் ஆவர். அவ்விருவரின் அருந் தவப் புதல்வராய்த் தேசிக விநாயகம் பிள்ளை 1876 ஆம் ஆண்டு பிறந்தார். கவிமணியின் முன்னோர்கள் வாணி கத்தின் பொருட்டு நாகைப்பட்டினத்தில் நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர். பின்னர் அவர்கள் தேரூருக்கே சென் றனர். அவர்கள் சிறந்த தமிழ்ப் பயிற்சியுடையவர்க ளாயும் கவி பாடுவதில் வல்லவர்களாயும் இருந்தனர். தாய்வழிப்பாட்டனரான மாணிக்க வாசகம் பிள்ளை என் பவர் காரியந்தாதி என்னும் பிரபந்தத்தைப் பாடியுள் ளார். எனவே, தாய்வழி, தந்தைவழி என்னும் இரு வழிகளிலும் தமிழ்ப் பயிற்சியுள்ள குடும்பத்திலே பிறந் தவர் தேசிக விநாயகம் பிள்ளை.

4. கவிமணி அவர் பெற்றோருக்கு ஒரே புதல்வர். ஆதலால், அவர் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டார். அவர் முதலில் தேரூர்ப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின் ரூர். அங்கு அவர் மலையாளமும் தமிழும் கற்றுக் கொண்டார். பின் அவர் கோட்டாற்றிலுள்ள அரசாங் கப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்ருர். இக்காலத்தில் அவர் தந்தையார் இவ்வுலகை நீத்தார். எனினும் தாயா ரின் ஊக்கத்தால் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சை யில் தேர்ச்சி பெற்ருர். மேற்படிப்பிற்காக அவர் நாகர் கோயிலிலுள்ள ஆங்கிலக் கல்லூரியில் எப். ஏ வகுப் பில் சேர்ந்து படித்து வந்தார். ஆனல் படிப்பைத் தொடர்ந்து படிக்கமுடியாமல், சில காரணங்களால் இடையே நிறுத்திவிட நேர்ந்தது. பின் அவர் திருவனந் தபுரம் சென்று ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்து ஆசிரியப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ருர்.

5. கவிமணிக்குத் தமிழ் மொழியில் மிக்க ஆர்வமுண்டு. ஆனால் அதனைப் பெருக்கப் பள்ளியில் வழியில்லை. மலையாள மொழியே முதன்மை பெற்றிருந்தது. அந்நிலையில் கவிமணி என்ன செய்வார்? தேரூருக்கு வடபக்கத்திலுள்ள ஏரியின் நடுவில் **வாணன் திட்டு** என்ற ஓர் இடமும் உண்டு. அங்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடம் ஒன்று உண்டு. அந்த மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்பவர் வசித்து வந்தார். அவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சமய நூல்களையும் நன்கு கற்றவர். அவரிடம் பலர் வந்து பாடங் கேட்டுக்கொண்டிருந்தனர். கவிமணி அப்பெரியாரிடம் சென்று முறையாகத் தமிழ்ப்பாடங் கற்று வந்தார். இலக்கிய இலக்கணங்களையும் அவரிடம் நன்றாகக் கவிமணி கற்றறிந்தார். கவிபாடும் திறமையும் அவர் பெற்றார். அந்நாளில் கவிமணி 'அழகம்மை ஆசிரியவிருத்தம்' 'சுசீந்தை மாலை' என்பனவற்றை இயற்றினார்.

6. கவிமணி கோட்டாற்றில் ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியராக அமர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து. பின்னர் அவர் நாகர்கோயில் போதனா முறைக் கலாசாலை ஆசிரியர் ஆனார். அரசாங்கத்தினர் கவிமணியின் புலமையை அறிந்து அவரைத் திருவனந்தபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக நியமித்தனர். இக்காலத்தில் கவிமணி குழந்தைகளுக்கென எளிய இனிய கவிதைகளைப் பாடினார். கவிமணிக்குக் குழந்தைகளிடம் பேரன்பு உண்டு. பின்பு 'மலரும் மாலையும்' என்ற நூலை வெளிப்படுத்திய பொழுது,

" செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்நூல் உரியதாய் என்றும் வாழ்கவே "

என்று கூறியிருத்தலால் இதனைநன்கு அறியலாம். சிறிது காலத்திற்குள் மகாராஜா பெண் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகக் கவிமணி அரசாங்கத்தாரால் மாற்றப் பட்டார். அவர் பிற்காலம் முழுவதும் அக்கல்லூரியில் வேலை பார்த்து 1931-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்; அவர் புத்தேரியில் வந்து தங்கினார். புத்தேரி என்பது நாகர் கோயிலுக்கு வடக்கே இரண்டு கல் தூரத்தில் உள்ளது.

7. கவிமணிக்குத் தமிழ் நாட்டு வரலாற்று நூலிலும், கல்வெட்டு ஆராய்ச்சியிலும் நிறைந்த புலமை உண்டு. அவர் பல கட்டுரைகள் வரைந்தார். அவைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. கவிமணி 1901-ஆம் ஆண்டு நாகர் கோயிலை அடுத்த புத்தேரியிலிருந்த சிறந்த குடும்பத்தில் பிறந்த உமையம்மையார் என்பாரை மணந்து கொண்டார். அவர் முதலில் தம் பெயரை வெளிப்படுத்தாமல் ஆண்டான்கவிராயன், ஐயம் பிள்ளை, தேவி, குயில், யதார்த்தவாதி என்ற புனை பெயர்களால் தம் கட்டுரைகளையும் கவிதைகளையும் வெளியிட்டு வந்தார். அதனால் தமிழகம் நீண்டகாலம் அவரை அறியாதிருந்தது. பிற்காலத்தில் புரட்சி நேயன், தமிழன், தேவி, குமாரன், செந்தமிழ், கலைமகள், ஆனந்த விகடன், கல்கி, தினமணி, ஈழகேசரி முதலிய பல்வேறு உயர்தரப் பத்திரிகைகளால் தமிழகமும் பிறநாடுகளும் கவிமணியை அறிந்தது. பிற்காலத்தில் அவர் ஆசி பெறாத பத்திரிகைகளே இல்லை என்னலாம்

8. ஓய்வு பெற்ற பிறகு கவிமணி தாம் பாடிய கவிதைகளைத் தொகுத்து 'மலரும் மாலையும்' என்ற பெயரால் வெளியிட்டார். அதனுள் '**லைட் ஆப் ஏஷியா**' என்பது **எட்வின் ஆர்னால்டு** என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய **கவிதை** நூல்; அது புத்தரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. அதனை '**ஆசிய ஜோதி**' என்று பெயரிட்டு அழகிய கவிதை நூலாகப் பாடியுள்ளார். பாரஸிகக் கவிஞர் **உமார் கய்யாம்** என்பவர் இயற்றிய கவிதைகளைத் தமிழ்ச் செய்யுள்களாகப் பாடியுள்ளார். நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் குடும்பத் தாயமுறையைப் பரிகசிப்பதுபோல நகைச்சுவை ததும்ப '**நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்**' என்ற நூலைப்பாடியுள்ளார். கவிமணிக்கு இசையிலும் செம்மையான புலமையுண்டு. இதனைக் கீர்த்தனைகளும் பாடல்களும் கொண்ட '**காதல் பிறந்த கதை**' என்னும் நூல் நன்கு புலப்படுத்தும்.

9 கவிமணி ஆங்கிலத்திலும் சுவைபடக் கட்டுரைகள் எழுத வல்லவர். அவர் பளிங்கு போன்ற தூய உள்ளம் படைத்தவர். அவர் உள்ளத் தெளிவை அவருடைய பாடல்கள் நன்கு விளக்கும். அவர் பிறரிடம் கெஞ்சி நிற்கும் இயல்பினரல்லர். அடிமைத் தன்மையை அவர் முற்றிலும் வெறுத்தார். 1940-ஆம் ஆண்டு சென்னை மாகாணத் தமிழ் சங்கம் அவருக்குக் **கவிமணி** என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. செட்டி நாட்டு அரசரான ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கவிமணியைத் தம் மாளிகைக்கு அழைத்து வந்து, விருந்தளித்து, ஆயிரம் ரூபாய்க் கிழியும் கொடுத்துப் பாராட்டிச் சிறப்பித்தார். அப்

பொழுது கவிமணி "முடிப்பு எதற்கு?" என்று கேட்டு, பின் அம்முடிப்பைக் கொண்டு திருவிதாங்கூர்ப் பல் கலைக் கழகத்தில் பி. ஏ. பரீட்சையில் முதல்வராகத் தமிழில் தேர்ச்சி பெறுபவர்க்கு ஆண்டு தோறும் பரிசு அளிக்குமாறு மூலதனமாக அளித்தார். இச் செயல் கவிமணிக்குப் பொருளில் பற்றில்லை என்பதை விளக்கவில்லையா?

10. கவிமணிக்குத் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் நிறைந்த அன்பு உண்டு. பாரதியார் பாடல்களைச் சுவைத்துப் படித்தவர் கவிமணி என்பதைப் "பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்" என்பதனாலும் "பாப்பா பாட்டில் நெஞ்சைப் பறி கொடுத்தேன்" என்பதனாலும் அறியலாம். இப்பெரும் புலவர் தம் முதிர்ந்த வயதிலும் படித்துக்கொண்டும், பத்திரிகைகளுக்குக் கவிகள் பாடிக்கொண்டும் இருந்தார். இவர் 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் தேதி அன்று இவ்வுலக வாழ்வை நீத்துத் தமிழர்களின் உள்ளங்களில் நீங்காது நிலைபெற்றார்.

1. அருஞ்சொற்களும் பொருளும்

மாறுதல் - மாறுபாடு, பேதம்	கல்லூரி - காலேஜ்
ஏற்றவாறு - பொருந்தியவாறு	ஆர்வம் - ஆசை
சமஸ்தானம் - இராஜ்யம்	சமயம் - மதம்
பிரபந்தம் - சிறுநூல்	யதார்த்தவாதி - உண்மைபேசு (பவன்
பளிங்கு - கண்ணாடி	ஆசி - ஆசீர்வாதம்
கட்டுரை - வியாசம்	மூலதனம் - முதலாகிய பணம்
சாந்தி - அமைதி	உண்டாவதாக - அடைவதாக

2. சிறுவிடை வினாக்கள்

1. தமிழ்ப்புலவர்கள் மொழிக்கு யாது செய்தனர்?
2. கவிமணி எந்நாட்டில் எங்குப் பிறந்தார்?
3. கவிமணி பிறந்த நாட்டில் தோன்றிய சங்கப் புலவர் யார்?
4. கவிமணியின் முன்னோரைப்பற்றி எழுது.
5. காரியந்தாதி யார் பாடியது?
6. கவிமணியின் இளமையும், கல்வியும் பற்றி எழுது?
7. கவிமணி யாரிடம் தமிழ் கற்றார்?
8. கவிமணியின் தொழில் முறை பற்றி எழுது.
9. கவிமணி இயற்றிய நூல்கள் எவை?
10. கவிமணியின் கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகள் எவை?
11. கவிமணி பெற்ற பாராட்டுகளைப் பற்றி எழுது.
12. கவிமணி பாரதியாரிடம் பற்றுக்கொண்டவர் என்பதை விளக்கு.

கட்டுரைப் பயிற்சி

1. தமிழ் மொழி வளர்ச்சிக்கு இக்காலத்தில் செய்யவேண்டிய தொண்டு.

2. புலவர்களைப் பாராட்டுதல் நாட்டுக்கும் மொழிக்கும் பெருமை தரும்.

செய்யுள் பகுதி

1. கடவுள் வாழ்த்து

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்
மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலி
யூர்ச்
செழுநீர் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம் 2

2. அறவுரை

1. நன்னெறி

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 1

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய் !
மொழியிலார்க் கேது முதுநூல் ? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு ? 2

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. 3

2. நீதி நெறிவிளக்கம்

அவைஅஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவை அஞ்சா ஆகுலச் சொல்லும்—நவைஅஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று 1

எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இல்லெனின் என்னாகும் அஃதுஉண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து 2

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மின்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்கு நாமென்று 3

3. இனிது நாற்பது

பிச்சைபுக் காயினும் கற்றல் மிகவினிதே;
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே
முத்தோர் முறுவலார் சொல்லினிது; ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார் சேர்வு 1

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது 2

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே;
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 3

4. இன்னா நாற்பது

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப் போக் கின்னா;
அருளிலார் தங்கட் செலவின்னா; இன்னா
பொருளிலார் வண்மை புரிவு 1

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா;
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரிதின்னா;
கட்டிலா மூதூர் உறைவின்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது. 2

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னா;
நாற்ற மிலாத மலரின் அழகின்னா;
தோற்ற மிலாதான் துணிவின்னா; ஆங்கின்னா
மாற்ற மறியான் உரை 3

5. நான் மணிக்கடிகை

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்;
குளத்துக் கணி என்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணி என்ப நாணம்; தனக்கணி
தான் செல் லுலகத் தறம். 1

இன்னாமை வேண்டின் இரவெழுக; இவ்வுலகில்
மன்னுதல் வேண்டின் இசைநடுக; தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல் 2

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்
பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 3

6. திரிகடுகம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது 1

தன்னச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்காறு இகந்தானும், இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 3

7. திருக்குறள்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 1

பணிவுடையன் இன்சொல்லன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப்பிற. 2

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 3

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 4

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 5

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. 6

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 7

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 8

பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி 9

உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 10

3. கதைப் பகுதி

பாடுறு மூடனுக்குப் பற்பல போதித்தாலும்
விடுடை யவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்று
நீடுறு சன்மன் சொல்வான் நெடியதோர் பழு மரத்திற்
கூடுகொண் டனவி ரண்டு தூக்கணாங் குருவி தாமே 1

குளிரினால் நடுங்கி வானக் கொடுமழை யால் நனைந்து
களிர்சுரத் தோடு தேகம் நடுங்கியே பற்கள் கிட்டி

வளமுறு குரங்கொன் றங்கு வந்தது குருவி பார்த்தே
இளகிய மனத்தி னாலே இன்சொல்லால் ஒன்று
சொல்லும் 2

கைகள்தாம் இருந்தும் இந்தக் கன்மத்தை அனுப
விக்கும்
செய்தியென் என்ன ஊசி மூஞ்சிகொள் சிறியமூடா
வைதுநீ புத்தி சொல்ல வல்லையோ எனக்கே என்றங்
கெய்திமேல் அதன்தன் கூட்டை இருகையால்
பிய்த்த தன்றே 3

II

கோடுறு சினையிற் காகம் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறு முட்டை
யெல்லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துளம் மெலிந்து
வாடி 1

தன்னுயிர் பாங்க னான சம்புகன் அருகுபோய், "இங்கு
என்ன செய்குவேன்" என்ன, "இதைக்கொல
அரிதோ?" "நீ போய்
மன்னவன் தேவி யாடும் மஞ்சன சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தில்,"
என்ன 2

காகமப் படியே செய்யக் காவலன் ஏவலாளர்
ஏகிமா மரத்தின பொந்தை ஈர்ந்தனர்; ஈரும்போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கினர் இருதுண்டாக,
ஆகையால் உபாயந் தாகா தில்லென அறையலாமே

-வீரமார்த்தாண்டதேவர் (பஞ்சதந்திரம்)

4. பல்சுவை

கார்என்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீர் என்று பேர்படைத்தாய் நீள்நிலத்தில் வந்ததற்பின்
வார் ஒன்று பூங்குழலாள் ஆய்ச்சியர்கை வந்ததற்
பின்
மோர்என்றுபேர்படைத்தாய் முப்பேரும் பெற்றுயே

குணமிருந் தாலும் குலமிருந்தாலும் கொழுந்தமிழின்
மணமிருந் தாலும் ஒருகாசும் பெறுதுசிங் கார
அரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லாரும் அஞ்சலி பண்ணு
வாரே 2

கல்லைத்தான் மண்ணைத்தான் கரைத்துத்தான் குடிக்
கத்தான் கற்பித்தாஞ ?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தாஞ ?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோவெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியில்
தான் பண்ணினுனே 3

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 4

வில்லா லடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்
டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் காசினியில்

அல்லார் பொழில்தில்லை அம்பல வாணர்க்கோ
ரன்னைபிதா
இல்லாத் தாலல்லவோ இங்ங னேயெளி
தானதுவே 5

கற்றதுகைம் மண்ணளவு கல்லா ததுஉலகளவுஎன்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா; புலவீர்!
எறும்புந்தன் கையால்எண் சாண். 6

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடும் எங்கே குடிபோனீர்— பாட்டாய்!
கேள்
செல்கால மெல்லாம் செலுத்தினோம்; அல்காலம்
கல்லானோம் செம்பானோம் காண். 7

உரைப் பகுதி

1. கடவுள் வாழ்த்து

1. புண்ணியா-மேலோனே, வழுவாது-தவருது, வையகத்தே-பூமியில், தொழுவார்-வணங்குவோர், அருள்செய்-கருணை செய்யும், செழுமை+நீர்=செழுநீர்—வளப்பமான நீர், புனல்கங்கை-மிக்க நீருடைய கங்கை: செம்மை+சடை=செஞ்சடை, தீவண்ணன்-தீயைஒத்த நிறத்தை உடையவன்.

2. அருமறை - அரியவேதம்,, ஆழி - சக்கராயுதம், கருமுகில்-கரியமேகம், வண்ணன்-நிறம் உடையவன், கமலக்கண்-தாமரைமலர்போன்ற கண், திருமகள்-இலக்குமி, இருபதமுளரிகள்-இரண்டு பாதங்களாகிய தாமரைகள், இறைஞ்சி-வணங்கி, ஏத்துவாம்-துதிப்போம்.

2. அறவுரை

1. நன்னெறி

1. உள்ளம்-மனம், ஓங்குசினம்-பெருகும் சினம், காத்துக்கொள்ளுதல்-எழாமல் தடுத்துக்கொள்ளுதல், அரிதோ-கஷ்டமோ, தடம்கரை-விசாலமான கரை, பேர்த்து விடுத்தல்-இடித்தல்.

2. இல்லானுக்கு-அன்பு இல்லாதவனுக்கு, இடம்-நிலமும் விடும், ஏவல்-வேலையாட்கள், என்செய்யும்-என்ன பயனைத் தரும்? நல்லாய்-நற்குணமுடையவளே, மொழியிலார்-ஊமைகள். முதுநூல்–பழமையான நூல், வேதம்;' விழியிலார்-குருடர்கள் , ஏது-பயன்ஏது ?

3. முனிவு-கோபம், *முதறிஞர்-சிறந்த அறிவினையுடையோர், உள்ளக்கனிவு-மனச்சந்தோஷம், நல்குவர்+நல்கார்; நல்குதல்-கொடுத்தல், நனிவிளைவு இல்-மிக்க விளைவு இல்லாத கதலிவாழை, எட்டி - ஒருவகை மரம்.

2. நீதி நெறிவிளக்கம்

1. அவை-சபை, மெய்விதிர்ப்பார்-சரீரம் நடுங்குபவர், கல்லார்-படியாதவர், ஆகுலச்சொல்-ஆரவாரமான சொற்கள், நவை அஞ்சி-பழிக்குப்பயந்து, ஈத்து உண்ணார்-கொடுத்து உண்ணாதவர், நல்கூர்ந்தார்-தரித்திரர், இன்னலம்-இனிய கருணை, பூத்தலில்-உண்டாவதினும்

2. எத்துணைய - எவ்வளவு, உய்த்து உணர்வு - உற்று ஆராய்ந்து அறியும் அறிவு, சொல்வன்மை-பேச்சுத்திறன், நாற்றம்-மணம், வாசனை.

3. தம்மின்-தங்களைக்காட்டிலும், மெலியார்-ஏழைகள்; உடைமை-செல்வம், அம்மா-வியப்பு இடைச்சொல். அகம்-மனம், கருத்து அழிக-செருக்கு நீங்குக, எற்று-எவ்வளவு.

3. இனிது நாற்பது

1. நற்சவை-நல்லசபை, கைக்கொடுத்தல்- உதவிபுரிதல் சாலவும்-மிகவும், முத்துஏர் முறுவலாய்-முத்துப்போன்ற பல்களை உடையவளே. ஆங்கு-அதுபோல, தெற்றவும்-தெளிவாக.

2. கயவர்-கீழ் மக்கள், கையிகந்து-நீக்கி, உள்ளி-நினைத்து எளியர்-சாமானியர், ஒளிபட-புகழ் உண்டாக.

3. தானம்-அழியாமை, ஊனம்-குற்றம்.

4. இன்னா நாற்பது

1. இல்வழி-இல்லாத இடத்து, இருள்கூர்-இருள்மிகுந்த சிறுநெறி-சிறிய வழியில், தனிப்போக்கு-தனியே போவது, செலவு-செல்லுதல், வண்மைபுரிவு-கொடுத்தலைப் புரிதல்.

2. நட்டார்-சிநேகிதர், இடுக்கண்-துன்பம், நனி-மிகவும், ஒட்டார்-பொருந்ாதவர், பெருமிதம்-கர்வம், கட்டுஇலா-கட்டுப்பாடில்லாத, மூதூர்-பழைமையான ஊர், உறைவு-வசித்தல், நட்ட கவற்றினால்-விரும்பிய உருண்டையாடுதலால்.

3 ஆற்றல்-வலிமை, படை-ஆயுதம். தோற்றம்-உயர் குடிப்பிறப்பு, துணிவு-உறுதி, மாற்றம்-சொல்லின் (வன்மை) முறை.

5. நான்மணிக்கடிகை

1. அணி-அழகு. என்ப-என்றுகூறுவர், நலம்-நற்குணம் செல்லும் உலகம்-இறப்பிற்குப்பின் அடையும் உலகம்.

2. இன்னாமை-துன்பம், இரவு-யாசித்தல், மன்னுதல்-நிலைத்தல். இசை-கீர்த்தி, வெகுளி-கோபம்; விடல்-விட்டு விடுதல்,

3. பாழ்-வீண், வாள்+நுதல்-ஒளிபொருந்திய நெற்றி, நட்டோரை-சிநேகிதரை? இனிமை-இல்லாமை, அவை-சபை!

6. திரிகடுகம்

1. தாளாளன் - முயற்சியுடையவன், வேளாளன்-உபகாரி, விருந்துஇருக்க - புதிதாய்வந்தோர் பசித்திருக்க, கோளாளன்-ஏற்றுக்கொள்பவன், கேளாக-நட்புடையராக.

2. நச்சி-விரும்பி, எள்ளா-இகழா, மன்னிய-நிலைத்த, பொச்சாப்பு-மறதி, அழுக்காறு-பொறாமை, இகழ்ந்தான்-நீத்தான், நின்ற-நிலைத்த.

3. வியந்து-பாராட்டி, தருக்கல்-கர்வப்படுதல் தாழ்வு-பணிவு, கொன்னே-வீணாக, வெகுளி-கோபம், பெருக்கல்-மிகுத்தல், முன்னி-முன்கரணப்பட்ட, பல்+பொருள்-பல் பொருள். வெஃகுதல்-அடைய ஆசைப்படல், சிறுமை-கீழான தன்மை, படை-ஆயுதம்.

7. திருக்குறள்

1. அகன் அமர்ந்து-மனம்விரும்பி, செய்யாள்-இலக்குமி, முகன் அமர்ந்து-முகம்விரும்பி, ஓம்புவான்-காப்பாற்றுவான்.

2. பணிவு-தாழ்வு, அணி-அழகு.

3. நன்றி-உபகாரம், கொன்றார்- அழித்தவர்க்கும், உய்வு-பிழைக்கும்வழி, செய்நன்றி-ஒருவன்செய்த உபகாரம்.

4. யாகாவராயினும் - எவற்றைக்காவாதவராயினும், நா-நாக்கு, காவாக்கால்-காக்காமல் போனால், சொல்இழுக்கு, சொற்குற்றம், சோகாப்பர்-வருந்துவர்.

5. வித்து-விதை, இடும்பை-துன்பம்.

6. ஒழுக்குஆறு - ஒழுக்கமுடையவழி. - அழுக்காறு-பொறாமை, இயல்பு-குணம்.

7. மனத்தொடு - மனத்தினால், வாய்மை - உண்மை, மொழியின்-கூறினால், செய்வாரில் - செய்பவரைக்காட்டிலும், தலை-முதலானவனாவான்..

8. இன்னா-துன்பம்,முற்பகல்-பகல்முன் (காலை). பிற்பகல்--பகல்பின் (மாலை). தாமே-வேண்டாமலே.

9 .பொறி இன்மை- அதிர்ஷ்டமில்லாமை, ஆள்வினை-முயற்சி.

10. உடுக்கை-ஆடை, இடுக்கண்-துன்பம். களைவது-நீக்குவது.

3. கதைப் பகுதி

1. பாடுறு - பெருமையான-(இழிச்சிறப்பு). நீடுறு-நீண்ட. பழுமரம்-ஆலமரம்.

2. கொடுமழை-மிக்கமழை, களிச்சுரம்-குளிர்ச்சுரம்.

3. கன்மத்தை-திமையை - ஊசிமூஞ்சி-ஊசிபோன்று கூம்பிய முகம். எய்தி-அடைந்து, வல்லையோ-தகுதியுடையவனோ.

1. கோடுஉறு-உச்சியில்பொருந்திய; பேடு-பெண்பறவை; கலிந்து-துன்புற்று; வாடி-வருந்தி.

2. பாங்கன்-நண்பன், சம்புகன்-நரி. அரிதோ-அருமையோ, தேவி-அரசி, ஆடும், நீராடும், மஞ்சனசாலை-நீராடும் இடம், புக்கு-புகுந்து, பொன் அணி-பொன்னுபரணம்.

3. காவலன்-அரசன், ஏவலாளர்-வேலையாட்கள், ஏகி-என்று ஈர்ந்தனன்-இடித்தனர், உபாயம்-தந்திரம்.

4. பல்சுவை

1. கார்-மேகம், ககனம்-வானம், நீள்நிலம்-நீண்டபூமி, வார்ஒன்று-வாரால் கட்டப்பட்ட, ' பூங்குழல்-அழகியகூந்தல், மூன்று + பேர் = முப்பேர்.

2. கொழுமை-தயிழன்; கொழுமை-வளமை, வழுத்திடு-சிறப்புமிக்க, வங்கணம்-பணம், மதி-அறிவு: அஞ்சலி-வணக்கம்.

3. இரட்சி-காப்பாற்று, ஒல்லை-துன்பம், ஆரை-யாரை, பதுமத்தான்-பிரமன், புவி-பூமி.

4. நித்தம் - தினமும், தயை - கருணை, கொடை-கொடுத்தல்.

5. வில்லால் அடித்தவன்-அர்ச்சுனன், செருப்பால் உதைத்தவன்-கண்ணப்பன், கல் எறிந்தவன்-சாக்கியநாயனார். பிரம்பால் அடித்தவன்-பாண்டியன், அல்ஆர்-இருள்நிறைந்த, பொழில்-சோலை, அம்பலவானர்-நடராசர், பிதா-தகப்பன்.

6. கைமண்-கைப்பிடிமண், கலைமடந்தை-சரஸ்வதி, எண் சாண்-எட்டுச்சாண்.

7. பட்டாய்-வருந்துவோனே, செல்காலம்-ஆணை சென்ற காலம், செலுத்தினோம்-ஆட்சி செலுத்தினோம், கல்- செம்பு ஆனோம்- கல்லுச்சிலை- செம்புச்சிலை ஆனோம். காள்-அசை